www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1983 1993

"July 83", A.Mark (Eezham)



# பத்து வருடக் கண்ணீர்


தொய்யன் தேவாலயம்

1.08.1993

ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணி

www.tamilarangam.net








## நேர்முகம்

அண்மைய இதழ்களது காலதாமதம் தவிர்க்க முடியாமற் போய்விட்ட ஒன்று. தரமான படைப்புகள், நிதி போன்றவற்றின் பற்றாக்குறையும், எதிர்பாராமல் ஏற்பட்ட நேர நெருக்கடியும் இதழ்கள் காலதாமதம் ஆகக் காரணமாகின. இவ்வாறான நெருக்கடிகளில் வாசகர்களாகிய உங்களது பங்களிப்பு மாத்திரமே சுவடுகளைக் காப்பாற்ற உதவும்.

பலரது சந்தா பற்றி நினைவுறுத்த வேண்டியுள்ளது. முக்கியமாக நோர்வேயில் புதிய வாசகர்களும், ஐரோப்பிய வாசகர்களும் இந்த விடயத்தில் கவனம் எடுக்கவும். பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்க வேறு வழிகள் இல்லாமல் வாசகர்களிலேயே தங்கியிருக்கிறோம். இதனைப் புரிந்துகொண்டு வாசகர்கள் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

சுவடுகளுக்கு வாசகர்கள் கடிதம் எழுதுகையில், அவை பிரசுரிக்கப்படக் கூடாது எனில் தயவுசெய்து அதைக் குறிப்பிடவும். விமர்சனக் கடிதங்களை எழுதுவோர் தயவுடன், சுவடுகளில் வெளியாகும் கருத்துகள் பற்றிய விமர்சனங்களையே முன்வையுங்கள். தனிநபர் பற்றிய விமர்சனங்களைத் தவிர்த்துக்கொள்வது நல்லது.

பலரது சந்தா இதுவரை வந்துசேரவில்லை. இதுவரை சந்தா செலுத்தாதவர்கள் தயவுசெய்து உடன் சந்தாவைச் செலுத்தி உதவுங்கள். சந்தா எப்போதும் வங்கியூடாக மாத்திரமே செலுத்தப்பட வேண்டும். வங்கிக் கணக்கிலக்கம் 16075213062, வங்கியின் பெயர் **Sparebanken NOR.** எமது முகவரி:**'SUVADUGAL', Herslebs Gt 43, 0578 Oslo, Norway.** புதிய சந்தாக்களைச் சேகரிப்பதில் வாசகர்களின் உதவிகள் வரவேற்கப் படுகின்றன.

சுவடுகள் பற்றி வெவ்வேறிடங்களில் வெவ்வேறு விதமாகக் கதைப்பதைக் காட்டிலும், அதை எழுத்து வடிவில் முன்வைத்தால், சுவடுகளில் அதைப் பிரசுரிக்கும்போது வாசகர்களால் உண்மைநிலை பற்றி அறியமுடியும். உங்கள் கருத்துகள் சுவடுகளுடன் எத்தனைதூரம் முரண்படினும், அவை நாகரிகமாக எழுதப்படும் பட்சத்தில் அவை பிரசுரமாகும்.

சுவடுகளுக்குப் படைப்புகள் வாசகர்களிடம் இருந்து வரவேற்கப் படுகின்றன. படைப்புகள் சுருக்கமாகவும், விளக்கமாகவும் அமைதல் நலம். படைப்புகளை அனுப்புமுன், அவற்றில் இருக்கக்கூடிய எழுத்து, வசன, கருத்துப்பிழைகளைச் சரிசெய்துவிட்டு அனுப்புங்கள். இது எமக்கு உதவியாயிருப்பதுடன், தெளிவான, குழப்பமில்லாத படைப்புகளை வாசகர்கள் பெறவும் உதவும். சுவடுகளில் ஆகக்கூடியது ஐந்து பக்கங்கள் வருமாறு உங்கள் படைப்புகள் இருப்பது நல்லது. சிறுகதைகள் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம்.

அன்புடன்,
சுவடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நோர்வேயின் முதல் வீடியோ சஞ்சிகை

## கலைக்கனவுகள்'93

நோர்வேயில் இருந்து முதல் தடவையாக தமிழ் வீடியோ சஞ்சிகை ஒன்று 'கலைக்கனவுகள்' என்ற பெயரில் வெளியாகியுள்ளது. ஒஸ்லோ கலைக்கழகத்தின் வெளியீடான இந்த வீடியோ சஞ்சிகைக்கான இசை: வே.இரவிகுமார், ஒளிப்பதிவும் தொகுப்பும்: ரஞ்சன் (எஸ்வீயெஸ்) - தமயந்தி, ஒலிச்சேர்க்கை: மு.முரளிதரன் - க.நடராஜன். எழுத்தோவியம்: ச.சுகுமார் - சி.பிரேம்ராஜ்

தனிப்பிரதி ஒன்றின் விலை (தபாற்செலவு உட்பட) 20 (யு.எஸ்) டொலர்கள்.

தொடர்புகள்: Oslo Kalaikkalagam/ c/o. V.Ravikumar/ Sandakerv. 11, Oppg 1, Leil.112/ 0478 Oslo/ Norway.

## நோர்வேயின் முதல் தமிழ் இசைநாடா

நோர்வேயில் இயற்றி இசையமைக்கப்பட்ட பாடல்களை மாத்திரம் தொகுப்பாகக் கொண்ட 'புதுராகம் - அரங்கேற்றம்' வெளிவந்துள்ளது.

பாடல்களை எழுதி, இசையமைத்திருப்பவர் மு.முரளீதரன். நோர்வேயின் முன்னணித் தமிழ்ப் பாடகர்களான ஆதித்தன், தவராஜா, மல்லிகா ஆகியோருடன் முரளீதரன் பாடியுள்ளார்.

ஒஸ்லோவின் தமிழ் வர்த்தக நிலையங்களில் கிடைக்கும். தொடர்புகள்: M.Muraleetharan/ Tante Ulrikes vei 46a/ 0984 Oslo/ Norway.


## விரைவில்
## க.ஆதவனின்
## 'மண்மனம்' இரண்டாம் பாகம் ஆரம்பமாகிறது.

(சுவடுகளில் வெளியாகிப் பெரும் வரவேற்பைப் பெற்ற முதற்பாகத்தின் தொடர்ச்சி)

தமிழ்க் கிராமங்கள் பல்வேறுபட்ட கலாசாரங்களாலும் கற்பழிக்கப்பட்டுப் போச்சு. குறிப்பாய் தமிழ்நாட்டு இலக்கியம், தமிழ்ச் சினிமா- இந்தியாவை அழிச்சது மாதிரி, எங்கடை கிராமங்களையும் நல்லா அழிச்சுப் போட்டுது. முடிவெட்டுற சலூனுக்குக்கூட 'ரஜனி' சலூன். கந்தசாமியின்ரை தேத்தண்ணிக் கடைக்கு 'கமல் டீ றூம்' எண்டுதான் பெயருகள். கிளிநொச்சியில ஒருநாள் என்ரை பிறண்டைப் பாக்கப் போனபோது- அவனும் நானும் சைக்கிளில ஏறி கனதூரம் போய் ஒரு நல்ல அசல் கிராமத்துக் கள்ளுத் தவறணைக்கை கள்ளுக் குடிக்கேக்கை கள்ளு வைக்கிற வாங்குக்கு மேலை 'புறூஸ்லீ'ன்ரை படமும் அதுக்கு மாலையும் போட்டிருந்தது ஆச்சரியத்தை மட்டுமில்லை எரிச்சலையும் தந்தது.

www.tamilarangam.net

# ராகங்களைத் தேடுவோர்



**தேவா**

அண்மையில் எனக்கு கிட்டத்தட்ட 16 நாடுகளைச் சேர்ந்த ஜிப்ஸி இனத்தவரின் கலைநிகழ்ச்சி ஒன்றினைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. நாடோடிகள் என்றும் அழைக்கப்படும் இவர்கள் நடனம், சங்கீதம், 'மாஜிக்' ஆகிய துறைகளில் மிக ஈடுபாடு கொண்டவர்கள். இவர்களது கலையார்வம் மேம்பட்டது. ஆடலும் பாடலும் வாழ்வின் சிறப்பம்சங்கள் என ஏற்று, சொத்து நிலம் என்று சேர்த்துவைக்க விரும்பாத இக்கூட்டத்தினர் கவலையற்றிருக்கின்றனர். இவர்களிடம் எதிர்காலம் பற்றிய கனவுகளும் இல்லை.

இவ்விழாவில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் இருந்தும் ஓர் ஒற்றுமை உணர்ச்சியைக் காணமுடிந்தது. இசையின் தாளதுரிதகதி, எளிமையான சங்கீதக் கருவிகள், இருபாலாரும் இணைந்து நடனம் ஆடுவது என்பன ஜிப்ஸி இனத்தவரது அடிப்படைச் சங்கதிகளாக அமைந்திருந்தன. ஒருதடவை இந்தியப் பெண்மணி நடனமாடிக் கொண்டிருக்கையில், ஸ்பானியப் பெண் ஜிப்ஸி மேடைக்கு வந்து தாளத்திற்கேற்ப நடனமாட, தொடர்ந்து ஹங்கேரிய, ருமேனியப் பெண்களும் சேர்ந்துகொள்ளவே மேடையில் நிலவிய ரசனை லயிப்பு பார்வையாளர்களையும் நிகழ்ச்சியில் மெய்மறக்க வைத்தது. இன்னொரு தடவை பல நாடுகளையும் சார்ந்து வாழும் இக்குழுவினர் இணைந்து வாத்தியக் கருவிகளை வாசித்தும் பாடியும் நிகழ்த்தியவை பலத்த பாராட்டுகளைப் பெற்றது. தங்களுக்குள் பரஸ்பரம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டும், உற்சாகப் படுத்தியும் நிகழ்த்திய இவர்களது ஒற்றுமை உணர்ச்சியைப் புரிந்துகொள்ள முடிந்தது. உலகெங்கும் நாம் பரந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிடந்தாலும் அடிப்படையில் நாம் எமது இசைக்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற நாதம் மேடையில் தவழ்ந்தது.

இவர்கள் கட்டிக்காக்கும் சங்கீதம், நடனம் ஆகிய கலைகளை, இவர்கள் வாழும் நாடுகளில் உள்ள எந்த அரசுமே தட்டிக்கொடுத்து ஊக்குவிப்பது கிடையாது. அதற்காக இவர்கள் தமது கலையுணர்வை அசட்டை செய்தது கிடையாது. மாறாக தினசரி வாழ்வில் அவலமுறும் சராசரி மனிதனுக்காகத் தமது கலைகளை அர்ப்பணித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களது கவலைகளை மறக்கடித்து, சந்தோஷ உணர்வை வெளிக்கொணரவைத்து, மகிழ்வான நேரங்களைப் படைத்துத் தருவதில் வல்லவர்களாய் விளங்கினார்கள். இதனால் மக்களிடம் இவர்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

முன்பொரு காலத்தில் ஈரானில் கலைஞர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டது. களியாட்ட விழாக்களுக்குக் கலைஞர்களைத் தேடிவந்த ஈரான் மன்னன் இந்தியாவில் இருந்து இசைக்குழுவினரை தன் நாட்டுக்கு வரவழைத்து அறிமுகப்படுத்தினான். புகுந்த நாட்டின் செழிப்பைக் கண்ட கலைஞர்கள் கூட்டத்திற்கு சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போவது பற்றிய நினைப்பே இல்லாது போனது.

ஜிப்ஸிக்குழுவின் பழக்க வழக்கங்களும், மற்றொரு தலைமைக்குக் கட்டுப்படாமையும் சொந்த நாட்டு மக்களுக்கு ஜிப்ஸிகள்மேல் வெறுப்பை ஏற்படுத்தியது. மதக்கலாசாரம்வேறு ஜிப்ஸிக்களுக்கு எதிராகச் செயற்பட்டமையால் அவர்கள் துரத்தப்படும் நிலை உருவானது.

வறுமையின் உச்சக்கட்டத்தை இந்தியாவில் இருந்து வந்த இவர்களால் உணர்ந்துகொள்ள முடிந்ததால், வடமேற்கு வடகிழக்கு என்று பல திசைகளிலும் நகரத் தொடங்கினர். தமக்குத் தெரிந்த கைசாத்திரம் பார்ப்பது, கத்தி தீட்டுவது, அம்மி கொத்துவது போன்ற சிறிய கைவேலைகள் மூலம் இவர்களது நாளாந்த வாழ்க்கை அறியப் பட்டாலும் ஆடுகள், மாடுகள், குதிரைகள் ஆகிய மந்தைகளை வளர்ப்பதிலும் இவர்கள் கைதேர்ந்தவர்கள். இவர்கள் எந்தெந்த நாடுகளுக்குச் சென்றாலும் அந்த நாடுகளின் இசையைத் தமது சங்கீதத்தில் புகுத்தி வெற்றிகண்டு வந்திருக்கின்றனர். இவர்கள் உடையலங்காரமும் விசித்திரமானது. வண்ண வண்ணமாக உடுத்துவதும், விதம் விதமாய் சிப்பி போன்ற இயற்கை வளங்களோடு கூடியவைகளை நகைகளாக்கி அணிந்துகொள்வதும் மகிழ்ச்சியான மனங்களின் வெளிப்பாடாய்க் கொள்ளலாம்.

ஜிப்ஸிகளின் வடக்கு நோக்கிய பயணத்தை முதலில் இயல்பாக ஏற்றுக்கொண்ட ஐரோப்பிய சமூகம், நாளடைவில் தங்களால் இவர்களைச் சகித்துக்கொள்ள முடியாதெனக் கண்டது. தமது தலைமைகளைத் தாமே நிர்ணயித்துக் கொள்வது, தமது கலாசாரத்தைப் பேணி வளர்த்தது, கூட்டம் கூட்டமாக வாழ்வது என்ற தனித்தன்மைகளை ஐரோப்பிய மக்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஓரமைப்பின் கீழ் வாழ்வது சரி என ஏற்றுக்கொண்ட மக்கள் மத்தியில் ஜிப்ஸிகளைப் பற்றிய தவறான மதிப்பீடுகளை அரசுகளே காட்டத் தொடங்கின.

திருடுபவர்கள், சுகாதாரம் அற்றவர்கள், நோய் பரப்பிகள் என்கிற குற்றச்சாட்டுகள் றோமா என்றழைக்கப்படும் இக்குழுவினர்மேல்

சுமத்தப் பட்டன. தமக்குப் பிடிக்காத, அடிபணியாத மக்களை விரும்பாத ஐரோப்பிய அரசுகளின் பிரசாரத்துக்கு மக்களும் ஒத்துழைத்தனர். நாஸிகள் ஆண்டபோது - குறிப்பாக ஜேர்மனியில் யூதர்கள் நச்சுவாயுச் சாலைகளில் அழிக்கப் பட்டபோது - ஜிப்ஸி இனத்தவரும் நாஸிகளால் அழிக்கப் பட்டனர். உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சி இல்லாதோர் என்றும் இக்காலகட்டத்தில் உயிரோடு சாம்பல் ஆக்கப் பட்டபோது அண்டை நாடுகளும் கண்டும் காணாமல் இருந்தன. யூதர்களை ஒழித்ததற்கான மன்னிப்புகளும், கண்துடைப்புகளும், கண்துடைப்புச் சங்கதிகளும் ஆங்காங்கே இன்னும் நிகழ்ந்து வருகின்றன. ஆனால் ஜிப்ஸிகள், நோயாளிகள் அழிந்தனர் என்பது பற்றிய அனுதாபக் குரல்கள் கேட்கிறதா என்று யோசிக்கவேண்டி உள்ளது. உயிர்வாழ்தலுக்கு வேண்டி தம் குழுக்களை விட்டு விலகியும், வேறு மதம் தழுவியும், சாதாரண குடிமக்களோடு கலந்தும் ஜிப்ஸிகளின் எண்ணிக்கை தீவிரமாக குறைந்துபோனது. இதனால் தமது கலைகளை, தனித்துவத்தை இவர்கள் பேணமுடியாதவாறு செய்யப் பட்டிருக்கின்றனர். இவர்களை சாதாரண குடிமக்கள் ஆக்குவதும், தனிமைப் படுத்துவதுமே ஜிப்ஸிகளை இல்லாது செய்யும் வழிவகைகள் என்று புரிந்துள்ள இன்றைய அரசுகளும், ஜிப்ஸிகளுக்குப் பொருளாதார நெருக்கடி தருவதில் மும்முரமாக இருக்கின்றன. ஜேர்மனி, பிரான்ஸ், ஒஸ்திரியா, சுவிஸ் போன்ற நாடுகளில் இவர்களது இசை நடனம் சிறப்புறாமைக்கு முக்கிய காரணம், இவ்வரசுகளின் தீவிர ஜிப்ஸி எதிர்ப்புணர்ச்சியே எனலாம். ஜிப்ஸிகள் தமது தணியாத இசை ஆர்வத்தினால் சில இடங்களில் 'ஜாஸ்' இசைக்கு உயிரூட்டி வருகின்றனர்.

"சீ.. என்ன சீவியம்
வெளிநாட்டுக்கு
வந்தும்
பிரியோசனம்
இல்லை...
"அப்படி என்ன
கஷ்டம் இங்க?"
ஊரில பதுங்கு
குழியில சீவியம்.
இங்க என்னடா
என்டால குளிர்
போத்து
மூடிக்கொண்டு திரிய
வேண்டிக்கிடக்கு
இருக்கிற நகைகளை
ஆக்களுக்கு எப்பிடி
காட்டிறது காணும்?..

ஏழத்தோன்.



பெரிய கரவான்களில் (caravan) கூட்டம் கூட்டமாக இன்று நகர்ந்து வாழும் இவர்கள், தாம் நகரும் இடங்களில் எல்லாம் வெறுப்பையே பெறுகிறார்கள். அரசுகளுக்கும் ஜிப்ஸிகளுக்கும் இடையில் பனிப்போர் தொடர்ந்து வருகிறது. தமக்குக் கட்டுப்படாதவர்களைப் பிரித்து, தனித்தனியாக்குவதில் அரசுகள் தீவிரம் காட்டிவருகின்றன. அகதிகள்மேல் இருக்கும் வெறுப்புத் தன்மை ஜிப்ஸிகள்மேலும் தொடர்ந்து வருகிறது. இவர்கள் வாழும் வாகனங்களின் மேலே தீவைப்பதும், இரவு நேரங்களில் கலகம் செய்வதும் நாஸி ஆதரவாளர்களின் செயல்கள். நடைபெற்ற சம்பவங்களுக்கு

www.tamilarangam.net

அரசபாதுகாவலர்கள் தகுந்த நடவடிக்கையும், பாதுகாப்பும் தரவில்லை என்பதைப் புரிந்துகொண்ட ஜிப்ஸிகள்

இப்போது தம்மைத்தாமே பாதுகாக்க ஆயுத்தங்கள் செய்துகொண்டிருக்கின்றனர்.

பெர்லின் நகரில், உல்லாசப் பிரயாணிகளுக்கான இருக்கும் 'Camping' பிரதேசங்களில் ஜிப்ஸிகளின் வாகனங்கள் நுழைய அனுமதி மறுக்கப் பட்டிருக்கிறது. இவர்களது நடமாட்டம் இவ்வாறு வெகுவாகப் பாதிக்கப் பட்டிருப்பினும், எதிர்காலம் இவர்களைப் பொறுத்தவரை கேள்விக்குரியதாகவே இருந்து வருகிறது. யுத்தத்தில் ஈடுபட விரும்பாத, கலைகளை நேசிக்கும் இந்தக் குழுக்களின் நிகழ்ச்சிகளைப் பார்த்தபோது இவர்களின் சேவைக்கு, செயலுக்கு, தமது பணியைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கும் இவர்களுக்கு சமூகம் எவ்வளவு கடமைப்பட்டு நிற்கிறது என்று ஆச்சரியப்பட வைத்தது.

## உலகின் முதல்....

உலகிலேயே முதன்முதல் திறந்த வெளியில் அமைக்கப்பட்ட நூதனசாலை நோர்வேயில்தான் அமைந்திருக்கிறது என்பது எம்மில் பலருக்கே தெரியாத ஒன்று. அடுத்த வருடம் தனது நூற்றாண்டைக் கொண்டாட உள்ள இந்த நூதனசாலையின் பெயர் 'The Norwegian Folk Museum'. ஒஸ்லோவில், பிக்டோய் எனும் இடத்தில் அமைந்துள்ள இந்த நூதனசாலை ஹன்ஸ் ஓல் என்பவரால் நிறுவப்பட்டது. இவரே அதன் முதல் இயக்குனரும் ஆவார். தற்போதுள்ள இடத்திற்கு நூதனசாலை கொண்டுவரப்பட்டது 1898இலேயே. பழைய பொருட்களை ஆர்வத்தோடு சேகரித்த இரண்டாம் ஒஸ்கார் மன்னனது சேமிப்புகளும் இந்த நூதனசாலையில் உள்ளன.

இந்த நூதனசாலை 1907இலேயே பொதுமக்களுக்காகத் திறந்துவிடப் பட்டது. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, முற்றிலும் மரத்தாலான தேவாலயம் ஒன்று (Stave church) இங்குள்ளது. இதுவே நூதனசாலையின் சிறப்பம்சமாகக் கூறப்படுகிறது. பழைய கட்டிடங்களை அப்படியே பெயர்த்து வந்து, பழைய காலத்தில் மக்கள் எவ்வாறான வீடுகளில், சூழலில் வாழ்ந்தனர் என்பதைக் கண்முன் நிறுத்துகிறது நூதனசாலை. இவ்வாறு 140 வீடுகளும் கட்டிடங்களும் இங்குள்ளன.

எவரையும் ஒருமுறை விஜயம் செய்தால் மனதில் மறையாத விம்பங்களைப் பதிக்கக் கூடியதாக அமைந்துள்ளது இந்த நூதனசாலை. மத்திய காலம் (middle age) முதல் கடந்த நூற்றாண்டுவரை நோர்வேயின் வரலாற்றுப் பாதையைக் குறிப்பாகச் சுட்டும் இந்த நூதனசாலை, கலாசார வரலாறு பற்றிய நோர்வேஜிய நூலகங்களில் மிகப் பெரியதும் ஆகும்.

மஹிந்தன்

www.tamilarangam.net

தமிழில்: யமுனா ராஜேந்திரன்



# பாலஸ்தீன விடுதலை எழுச்சி இன்ட்டி∴பாதா: அரசியல் பகுப்பாய்வு

ஹனன் அஸ்ராவி

(கடந்த இதழிலிருந்து தொடர்கிறது)

இன்ட்டிபாதா மூன்று பரிமாணங்களை உடையது. முதல் பரிமாணம் எமது எதிர்ப்பு மற்றும் தாக்குதலின் அளவு. இவைதான் டெலிவிஷனில் நாம் பார்த்த அடக்கமுடியாத மனித நடவடிக்கைகள். காவிய நடவடிக்கைகள். இவை பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றியது. இஸ்ரேல் ஆக்கிரமிப்பின் அடிவயிற்றை இது காண்பித்தது. உலகுக்கு இஸ்ரேலியர்களது ஆக்கிரமிப்பை இது பட்டவர்த்தனமாகக் காண்பித்தது, குறிப்பாக இஸ்ரேலிய மக்களுக்கு இது காண்பித்தது.

அசாதாரணமான திணிக்கப்பட்ட சூழலுக்கு எதிரான போராட்டத்தின் இயல்பை இது காண்பித்தது. அடக்குமுறைச் சூழலுக்கு நீங்கள் ஆட்படுகிறபோது மக்களின் திட உறுதியானது எதிர்ப்புணர்ச்சியாக வெளிப்படும். மறியல்களாக ஊர்வலங்களாக வேலை நிறுத்தங்களாக வெளிப்படும். உலகத்தின் கவனத்தையும் பிரக்ஞையையும் ஈர்ப்பதில் இவை வெற்றி பெற்றுள்ளன. ஆயினும் உலகத்தின் மனச்சாட்சியை இன்னும் ஈர்க்கவில்லை என்று நாங்கள் நம்புகிறோம்.

புனைகதைகளைக் கலைப்பதிலும் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறோம். இஸ்ரேலைப்பற்றிய தவறான கருத்துக் கணிப்புகளையும் தவறான புரிதல்களையும் கலைத்திருக்கிறோம். டேவிட்டுக்கு மேலாக கோலியாத் எனும் இஸ்ரேலின் விளையாட்டை, ஒரு இடத்தில் ஜனநாயகத்தைப் பிய்த்துக் கொடுப்பது மற்றொரு இடத்தில் அதை வாபஸ் வாங்குவது எனும் மாய்மால விளையாட்டைக் கலைத்திருக்கிறோம். தற்காலிக தற்பாதுகாப்பிற்கான ஆக்கிரமிப்பு எனும் பொய்யைக் கலைத்திருக்கிறோம். நாம் எல்லோரும் அறிந்தபடி ஆக்கிரமிப்பு என்பது அதன் எல்லா வடிவங்களிலும் அயோக்கியத் தனமானது; அழிவுத் தன்மை கொண்டது. அசலான பாலஸ்தீனியர்கள் பாலஸ்தினத்தில் இல்லை எனும் இஸ்ரேலின் பொய்யை அது கலைத்திருக்கிறது. நாங்கள் சென்றுவந்த வடிவமாற்றங்களுக்குள் நான் போகப் போவதில்லை. ஒன்றுமேஇல்லாமையில் இருந்து இரண்டுகால் பிராணிகள் வெட்டுக்கிளிகள் மற்றும் அருவமான படிகள் என்று இஸ்ரேல் விவரிக்கிறபடிக்கு நான் விவரிக்கப் போவதில்லை.

இன்ட்டி∴பாதா பாலஸ்தீனம் ஒருநாடு,

www.tamilarangam.net

மக்கள் எனும் மனித உள்ளடக்கத்தைக் காண்பித்தது. முதன்முதலாக இஸ்ரேல் ஒரு ஆக்கிரமிப்பாளன் எனும் உண்மையை அதையே எதிர்கொள்ள வைத்தோம். மக்களுக்கு மேலதிகாரி அல்லது காபந்து செய்பவன் என்பவற்றிற்கு மாறாக ஆக்கிரமிப்பாளன் என்ற உண்மையை இன்ட்டிபாதா தெளிவாக்கியது. அதன் நடவடிக்கைகளுக்கு ஆன விளைவுகளை முதன்முதலாக இஸ்ரேல் நேருக்குநேர் சந்தித்தது. இப்போது அவர்கள் மிகச்சரியான வினாக்களை எழுப்புகிறார்கள். இஸ்ரேலில் முதன்முறையாக சமாதானம் என்பது பேச்சுவார்த்தையில் பொருளடக்கமாக ஆகியிருக்கிறது.

பாலஸ்தீனப் பிரச்சனையும் பாலஸ்தீன சுயாதிபத்தியமும் முதன்முதலாக அரசியல் உள்ளடக்கமாக ஆகியிருக்கிறது. இவையெல்லாம் இன்ட்டிபாதாவுக்கு முன்பாக இருக்கவில்லை.

இன்ட்டி∴பாதாவின் இரண்டாவது பரிமாணம் சமூகமாற்றமும் தேசிய நிர்மாணமும் ஆகும். சாராம்சத்தில் இது ஆக்கிரமிப்பில் இருந்து விடுவித்துக் கொள்வதும், ஆதிக்கத்தில் இருந்து விடுவித்துக் கொள்வதும், பாலஸ்தீனிய உரிமை ஸ்தாபிப்பதும் மாற்று நிறுவனங்களைக் கட்டமைப்பதும் ஆகும்.

மூன்றாவது பரிமாணம் அதன் அரசியல் பரிமாணம். எந்த வகையிலும் இது பலஸ்தீன தேசிய கவுன்சிலின் தீர்மானங்களில் இருந்து பிரிக்கப்பட முடியாதது. 1988இல் அல்ஜீயர்ஸில் உருவாக்கப்பட்ட இதன் அரசியற் திட்டங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை, இன்ட்டி∴பாதா மற்றும் பாலஸ்தீன மக்களின் மன உறுதிதான் வழங்கியது.

இந்தக் கட்டத்தில் நாங்கள் உறுதியாகச் சொல்கிறோம், பாலஸ்தீனம் ஒரு வஞ்சிக்கப்பட்ட தேசமாக இருக்கமாட்டாது. நாங்கள் கசப்பை, வெறுப்பை, இருண்ட மனத்தைக் கொண்டிருத்தல் முடியாது. அதிலிருந்து எம் அரசியல் திட்டங்களை உருவாக்கிக் கொள்ளமாட்டாது. திரிக்கப்பட்ட, அழிவுகரமான கோசங்களின் மீதமைந்த, பழிவாங்கும் உணர்ச்சிகொண்டு, குரூரமான நிலைப்பாட்டில் இருந்து எமது அரசியற் திட்டங்களை உருவாக்கிக்கொள்ள மாட்டாது.

சமாதானத்தை அடிப்படையாகக் கொண்ட நல்லெண்ண அரசியலைத்தான் முன்வைக்க வேண்டும்; மறுமதிப்பீட்டுக்கு உட்பட்ட, தேசிய நிர்மாணத்தை உள்ளிட்ட, மனிதமதிப்பைப் பற்றி மிகமேலான மதிப்புடன், நாங்கள் அரசியலை முன்வைக்க வேண்டும். ஆனால் பழிவாங்கும் உணர்ச்சிகொண்ட, வெறுப்பு கொண்ட, துவேஷம் நிறைந்த, மனோவியாதியுடனான அரசியல் நிலைப்பாட்டைத்தான் இஸ்ரேல் அரசிடம் இருந்து நாங்கள் எதிர்கொள்கிறோம்.

நாங்கள் ஒரு ஆரோக்கியமான தேசம். இன்ட்டி∴பாதா அழிவின் குறியீடு அல்ல. நிஜத்தில் அது நம்பிக்கையின், சுயபலத்தின் அடையாளம். இது மக்கள் சக்தியின் அடையாளம். பிற இடங்களில் இது நெல்சன் மண்டேலாவின் விடுதலையாக, முழு அரசாங்கங்களனதும் மாற்றங்களாக ஆகியிருக்கிறது. பாலஸ்தீனத்தில் இது சுதந்திரத்துக்கு, ஆக்கிரமிப்பின் முடிவுக்கு, தமது சொந்த அரசமைப்பிற்கு இட்டுச் செல்லும்.

இப்போது அரசியற் திட்டமானது மூன்று பிரதான கோட்பாடுகளைக் கொண்டிருக்கிறது. முதலாவதாக பிரிவினை பற்றிய கோட்பாடு, ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் 181இன்படி பாலஸ்தீனத்தை இரண்டு அரசுகளாகப் பிரிப்பது. இதுதான் இரு அரசுத் தீர்வுக்கான (two - state solution) ஒப்புதலின் அடிப்படை.

இரண்டாவது கோட்பாடு

www.tamilarangam.net

'பாலஸ்தீனியர்களது சுயநிர்ணய உரிமையோடு சேர்த்து' தீர்மானங்கள் 242 மற்றும் 338 இரண்டையும் ஒப்புக் கொள்கிறது. ஏனெனில் இந்த இரண்டு தீர்மானங்களும் பாலஸ்தீனம் ஒரு நாடு எனும் பிரச்சனையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அரபு நாடுகள் மற்றும் பாலஸ்தீன அகதிகள் பிரச்சனைகளை மட்டும்தான் பேசுகிறது. நாங்கள் எம்மை ஒரு முழுத் தேசமாகத்தான் பார்க்கிறோம். நாங்கள் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்தாலும் அகதிகளாய் இருந்தாலும் நாம் எம்மை ஒரு தேசமாகத்தான் பார்க்கிறோம். ஆகவே தீர்மானங்கள் 242 மற்றும் 338 இரண்டும் தேசிய சுயநிர்ணய உரிமையுடன் இணைக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

மூன்றாவது எல்லா வடிவத்திலும் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பது, அரச பயங்கரவாதம் உட்பட. இந்த எல்லா ஷரத்துகளும் ஒரு சர்வதேசிய கருத்தரங்கின் ஊடே அமுல்படுத்தப்பட வேண்டும். இவைதான் பாலஸ்தீன தேசிய கவுன்ஸிலின் அல்ஜியர்ஸ் கூட்டத்தில் நாங்கள் தீர்மானித்த அடிப்படை விஷயங்கள் ஆகும்.

ஆகவே இதன் அடிப்படையில் எமது அரசு, எமது சுயநிர்ணய உரிமை, எமது மக்கள் குரலின் சுயாதிபத்தியம், எமது சொந்த உரிமை, அதனால் விளைந்த எம் அரசியல் தலைமை, பாலஸ்தின விடுதலை இயக்கம் (PLO) பிரதிநிதித்துவப் படுத்தும் சர்வதேசியக் கருத்தரங்கு இவற்றை நாங்கள் வேண்டுகிறோம்.

இதுதான் பாலஸ்தினப் பிரச்சனைக்கான தீர்வை நோக்கி நாங்கள் திடமாக முன்வைக்கும் முக்யத்துவம் உள்ள நகர்வு. எந்த விலைகொடுத்தும் சமாதானத்தை அடையமுடியாது, அடையவும் கூடாது. பரஸ்பர நலன்கள் அடிப்படையில், பரஸ்பர சுயாதிபத்திய அடிப்படையில், பரஸ்பர விருப்பின் அடிப்படையில் சமாதானம் அமையவேண்டும். இணைப்பு மூலமே விழுங்கிக் கொள்வதன் மூலமோ சமாதானத்தை அடையமுடியாது. சமாதானம் இருதரப்பு மக்களின் பெருமிதத்தையும் இருதரப்பு மக்களின் உரிமைகளையும் உத்தரவாதப் படுத்தவேண்டும்; பாதுகாக்க வேண்டும்.

இச்சமாதானம் சாத்தியமானது மட்டுமன்றி, அடையக்கூடியதும் இயல்பானதும் என நாங்கள் நினைக்கிறோம். சமாதானத்தைச் சாதிக்கச் சரியான தருணத்தை நாங்கள் பெற்றிருக்கிறோம். சமாதானத்தை சாத்தியமாக்கும் புறச்சூழல் பாலஸ்தீனர்களிடையே வந்துள்ளது. எவ்வாறாயினும் சமாதானத்தைத் தீர்மானிக்கும் உரிமையை இஸ்ரேலியர்களிடம் விட்டுவிட முடியாது,



கூடாது. ஏனெனில் அவர்களே ஆக்கிரமிப்பாளர்கள். சமாதானத்தை 'வீட்டோ' செய்வதற்கான இஸ்ரேலியர்களது அதிகாரம் ஒன்றே போதும், இதை அவர்கள் அழித்துவிட.

இன்ட்டிஃபாதாவில் நாம் எதிர்கொண்ட சரிவுகளுக்கும் ஆபத்துகளுக்கும் இப்போது

www.tamilarangam.net



நான் போகிறேன். மக்களின் குரலான, மக்களின் சக்தியான இன்ட்டிஃபாதா அரசியல் நிகழ்வுப் போக்குக்கான மனித உள்ளடக்கமாகப் பேணப்பட வேண்டும்.

முதலாவதாக பாலஸ்தீன மக்களின் உயிரிழப்புகளை இருட்டடித்து, முற்றிலும் அதை மறந்துபோகச் செய்கின்ற மாதிரியான, அதையே வழக்கத்திற் கொண்டுவந்து அதை இயல்பான போக்காக நியாயப் படுத்துகிறார்கள் இஸ்ரேலியர்கள். ஏனெனில் இஸ்ரேலியர்களது உயிரிழப்புகளோடு ஒப்பீட்டளவில் பாலஸ்தீன உயிரிழப்புகள் பற்றி அவர்கள் உலகுக்குச் சொல்வதில்லை. இந்த இரட்டை நிலைப்பாட்டை நாம் தெளிவுபடுத்தி ஆகவேண்டும்.

பயங்கரவாதத்தை நியாயமாக்கும் போக்கும், இஸ்ரேல் ராணுவத்தில் மனவலிமை அரக்கக் குணமுள்ளதாக்குவதை நியாயப்படுத்தும் போக்கும் வளர்ந்து வருகிறது. பாலஸ்தீனர்களை அழித்துவிடுவது, எண்ணிக்கையளவில் அருவமாக்கிவிடுவது எனும் அளவில் இது செல்கிறது. ஆகவே ஒன்று இரண்டு மூன்றாக பாலஸ்தீன மக்கள் கொல்லப்படுவது, இப்போது மக்கள் அங்கீகரிக்கும் ஒன்றாக ஆகிவருகிறது.

நாம் மறுபடி எண்ணிக்கைக்குப் போகிறோம். இது இஸ்ரேலியர்களால் நியாயப்படுத்தப் படுகிறது. ராணுவச் சூறையாடல்கள், ராணுவக் கட்டுப்பாட்டுக்குள் பிரதேசங்களைக் கொண்டுவருதல், செய்தி இருட்டடிப்புச் செய்தல் போன்றவற்றைக் கொள்கையாகவே பேணி வருகிறார்கள்.

ஆகவே நீங்கள் நிஜமான சூழலைப் பெறமாட்டீர்கள், உண்மையைப் பெறமாட்டீர்கள். உண்மையைப் பற்றிய ஒரு அருவமான சித்திரத்தையே நீங்கள் பெறுவீர்கள்.

உடனடியான இடறுகுழி என்னவென்றால் அரசியல் போராட்டத்தில் மனித உள்ளடக்கமாக இருக்கிற இன்ட்டிஃபாதாவை, இஸ்ரேலை நிலைநிறுத்துவதற்காக, வெறும் சம்பவக் கோவைகளாகக் கீழிறக்கிவிடுதல், இதைத் திட்டமிட்டுச் செய்கிறார்கள்.

அவர்களின் தணிக்கைமுறை, செய்தி இருட்டடிப்பு, முற்றுகைச் சூழல் போன்றவற்றைத் தொடர்ந்து இருக்கச் செய்வதன்மூலம் கடைப்பிடிக்கிறார்கள்.

(இன்னும் வரும்)

---

# இங்கும் அப்படியே

உலக நாடுகளில் ஐரோப்பிய நாடுகளில்தான் ஓரளவு பெண்கள் சமத்துவமாக மதிக்கப் படுகிறார்கள். அதிலும் ஸ்கன்டினேவிய நாடுகளில் இவர்களது நிலை ஒப்பீட்டளவில் மேலானது. அதிலும் நோர்வேயில் இச்சமத்துவம் குறிப்பிடத் தக்கதாக உள்ளது.

இப்பேர்ப்பட்ட இந்த நாட்டிலும் பல பழைய எச்ச சொச்சங்கள் இன்னும் மனோரீதியாகத் தொடர்கின்றனவா என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

அதாவது உணவுச் சாலைகள், சிற்றுண்டிச் சாலைகள், பொது உணவு அறை, பொதுச் சமையல் அறைகளில் இன்றும் காணப்படும் வாசகம் இது.

"Dere maa rydde opp etter dere. Mora di jobber ikke her" (உங்களது பாவனைக்குப் பின் இடத்தைத் துப்பரவு செய்யுங்கள்; உங்கள் தாயார் இங்கு வேலை செய்வதில்லை)

இதன்மூலம் தாய் (பெண்) பொதுவாகத் துப்பரவு வேலைக்குப் பொறுப்பானவர் என்று தொனிக்கிறது. இது பெண் தாழ்ச்சியுற்றவள் என்ற பழைய கருத்துருவின் தொடர்ச்சி அல்லவா?

– மதி –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாரிஸில் ஒரு நாடகமாலை

குணா – கலைதாசன்
& அநாமிகன்

தான் சார்ந்த சமூகம் எதிர்கொள்ளும் , அறியும் பிரச்சனைகள் - வாழ்வு முறைகள் - பலவித உத்திகளூடாக வெளிப்படுத்தப்படும்/ விமர்சனக் கண்ணாடிதான் நாடகம் - கதை - சிறுகதை - கவிதை - கட்டுரை - இன்னுமேன் இலக்கியம்.

ஈழத்தமிழர்களின் வெளிப்பாடுகளில், பெரும்பாலும் வேதனையும் துயரமும் நிறைந்த மண்ணின் அவலங்கள் விரவிய இலக்கியங்கள் நாட்டின் உள்ளேயும், புலம்பெயர்ந்த தளங்களிலும் இருந்து வருவதைக் கடந்த சில தசாப்தங்களாகக் காணமுடியும். போருடன் வாழ்வு கலக்கப்பட்ட சூழலில் தரமான இலக்கியங்களை அதன் பல்வேறு கோணங்களிலும் காண அவாவுறுவது இயல்பு. இலக்கியங்கள் காலத்தின் பதிவுகள். ஒரு காலகட்ட மக்களின் வாழ்வுநிலையைத் துல்லியமாக மரணத்தின் பின்னும் காவிச்செல்பவை.

இன்று நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தொலைத்தவர்களாக திசைதெரியாத அப்பாவிகளாகப் பரிதவிக்கும் மக்களை - பார்வையாளர்களைச் - சிந்திக்கத் தூண்டும் வகையில் நாடகப் படிமங்கள் அமைவது மிகுந்த வரவேற்பைப் பெறும். ஐரோப்பியப் புலம்பெயர் வாழ்வின் ஒவ்வொரு மணித்துளியும் பவுண்களாலும், மார்க்குகளாலும், பிராங்குகளாலும், குறோணர்களாலும் விலைபேசப்படும் - மனித உழைப்பு விற்றலும் வாழ்தலுமான - வாழ்வில் பொதுவிடயங்களுக்காக பெரியமனதுடன் நேரத்தியாகம் செய்து ஒரு ஆக்கத்தை வெளிக்கொணருவதை (நாடகம், சிறுபத்திரிகை இன்னபிற) முதலில் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆளுக்கொரு அமைப்பு, சங்கங்களென தத்தமது கௌரவப் பிரசாரப் பதாகைகளாக தூக்கிப் பிடிக்கப்பட்டுள்ள சூழலில் மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் ஒரு காலடியை எடுத்து வைத்துள்ளது. 70களில் பல்வேறு வெளிப்பாடுகளாக வெளிவந்த சமூகத்தின் தன்னியல்பான சுயாதீன எண்ண வெளிப்பாடுகள் மீண்டும் பல்வேறு சமூகத் தளங்களில் இருந்து, புலம்பெயர்விடங்களில் இருந்து வெளிவருமா?

நாடகமாலை நாடகங்களை விமர்சிக்க மனது இடம் கொடுக்கவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளடக்கம், நாடகம் வெளிப்படுத்திய அரங்கம் பற்றிக் கூறுவதாயின் ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை.

எமது மண்ணில் 80களின் முன்பே கண்ணாடி வார்ப்புகள், ஒரு பாலைவீடு, இன்னுமேன் பின்புவந்த ..... மண்சுமந்த மேனியர் எனப் புதிய வடிவங்களைத் தரிசித்திருக்கிறேன். புலம்பெயர்ந்து அதுவும் கலைநகர் என்றழைக்கப்படும் பாரீஸில் தரிப்பிடம் கொண்டிருந்தும் புதுமையான வெளிப்பாடுகள் ஏனோ வரமறுக்கின்றன. போராட்ட எழுச்சியின் வெட்கையால் எவ்வளவோ கலைஞர்கள் ஆற்றல் மிக்கோர் ஆர்வலர்கள் தங்களைச் சுருக்கிக் கொண்டவர்களாக மறைந்துபோயுள்ளனர் என்பதை ஆற்றாமையுடன் ஒத்துக்கொள்ள வேண்டும்.

'கண்டம் மாறியவர்கள்' அவுஸ்திரேலியாவில் மேடை ஏறிய நாடகம். வீடியோ தரிசனமாகவும் பார்க்கக் கிடைத்தவொன்று. இதனைப் பாரீஸை தளமாக வைத்து சிறுமாற்றம் செய்து மேடையேற்றி உள்ளனர்.

'நாங்கள் திருந்தமாட்டம்' பாரீஸில் நிகழும் 'ஸயன்ஸ்' என அழைக்கப்படும் ஐரோப்பிய நாகரிக தந்திரத்தினை உடைய பணம் சேகரிப்பாளர்களை விமர்சிக்கும் நகைச்சுவை நாடகம்.

'அம்மா அம்மா' ஏற்கனவே அவுஸ்திரேலியாவில் மேடையேறிய நாடகம். அனேக எதிர்பார்ப்பினைக் கொடுத்த நாடகம். யாழ் குடாநாட்டின் குண்டுவீச்சுச் சூழலில் வாழும் ஒரு கீழ் - நடுத்தர வர்க்க மனோபாவம் கொண்ட குடும்பத்தினை மையப்படுத்தி கதை புனையப் பட்டிருந்தது. இராணுவ முன்னெடுப்பால் அகதியாகப் புலம்பெயரும் மகனும், மகளும் தங்களை நியாயப் படுத்தும் வசனங்களைச் சொல்லியவாறு பாரிசவாதத்தால் தவிக்கும் தாயை நிர்க்கதியாக விட்டுவிட்டுச் செல்கிறார்கள். இப்படியான சூழல்களில் ஏராளமான அனுபவங்களைப் பெற்ற பார்வையாளர்கள் நாடக முடிவை ஏற்காமல் விசனப்பட்டதில் அர்த்தம் உண்டு. உயர் - நடுத்தர வர்க்க அல்லது மேல்குடி மக்களுக்கு இவ்வகையான சம்பவங்கள் நிகழலாம். ஆனால் குடும்பத்துடன் பாசத்தைப் பொழியும், தாம் வளர்க்கும் ஆடு, மாடு, கோழி, நாயைக்கூட அன்பால் இணைத்துக்கொண்ட அடித்தள மக்களின் மகன் - அதுவும் திடகாத்திரமான அந்த மகன் - தாயை அம்போவென விட்டுச் செல்லமாட்டான். ஒருவேளை ஈழத்தாயை உருவகப்படுத்தி அந்தத் தாயாகக் காட்ட முனைந்தார்களோ என்னவோ?

கதைபற்றி மட்டும் குறிப்பிட முடிந்தது. கண்டம் மாறியவர்கள், நாங்கள் திருந்தமாட்டம், அம்மா அம்மா.. மூன்று நாடகங்கள் - முதலிரண்டும் புலம்பெயர்ந்த மக்களைத் தளமாகவும்; அம்மா.. அம்மா... போருடன் வாழ்வைக் கலந்து வாழும் குடும்பத்தைச் சித்திரித்து எம்மண்ணினைத் தளமாக்கியதாகவும் அமைக்கப் பட்டிருந்தன. எது எப்படியாயினும் 'நாங்கள் திருந்தமாட்டம்' கனகமாக நடித்த திருமதி எழில் தமிழ்வாணன், 'அம்மா... அம்மா'வில் அம்மாவாக நடித்த திருமதி நீலாயதாட்ஷி சிவசுப்பிரமணியம் ஆகியோர் முறைசாராக் கலைஞர்களாக, பொழுதுபோக்குக் கலைஞர்களாக இருந்தும் தங்கள் திறமையை வெளிக்காட்டியுள்ளனர். இலைமறை காய்களென.... எவ்வளவோ ஆக்க இலக்கியகர்த்தாக்கள் போராட்டத் தாக்கத்தால் மறைவுண்டிருப்பதை ஒரு சிறுமின்னலென நாடகமாலை வெளிப்படுத்தியுள்ளது.●

www.tamilarangam.net

இலங்கை அரசியலைக்

# கேள்விக்குறியாக்கிய இரு மரணங்கள்


- நேகோட்டி -

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

எண்ணி எட்டே நாட்கள். உலகத் தொழிலாளர் தினம். மே முதல் திகதி. லலித்தின் கொலையால் தோன்றிய சலன அலை ஓய்வதற்கிடையில் மீண்டும் அரசியல் அதிர்வலை ஒன்று கொழும்பில் பரவியது.

ஆமர்வீதியும் மெசஞ்சர் வீதியும் இணையும் இடத்தில், ஐ.தே.க.வின் மேதின ஊர்வலத்தை நெறிப்படுத்திக் கொண்டிருந்த இலங்கையின் இரண்டாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, பகல் 12.40அளவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப் பட்டார். உடலின் பெரும்பகுதி காணாதுபோக சில அங்கங்களை மாத்திரம் வைத்து அவரது உடல் அடையாளம் காணப்பட்டது. இக்குண்டுவெடிப்பில் அவருடன் 25பேர்வரை பலியாகினர்.

குண்டுவெடிப்பு நிகழ்ந்த உடன் பிரேமதாசாவின் உடலைக் காணாததால், அவர் தப்பிவிட்டதாகவும் அவரது மெய்க்காவலர் அவரைப் பாதுகாப்பாக வேறிடத்திற்கு அழைத்துச் சென்றிருக்கலாம் எனவும் நம்பப்பட்டது. ஐ.தே.க. ஊர்வலம் தடையின்றி நிகழ உதவியாக பிரேதங்கள் அகற்றப்பட்டு, சம்பவ இடம் கழுவப்பட்டது. ஒன்றரை மணிநேரத்தில் சம்பவ இடத்திற்கு வந்த ஸ்கொட்லண்ட்யார்ட் குழுவினர், அனர்த்தம் நிகழ்ந்த எந்தத் தடயமும் இன்றி வீதி துப்பரவாக இருந்ததாகக் கூறினர்.



www.tamilarangam.net



(இவர்கள் லலித் கொலையைத் துப்புத்துலக்க இலங்கை அரசால் வரவழைக்கப் பட்டவர்கள்). பிபிஸியால் மாலை மூன்றரை மணிக்கே பிரேமதாச மரணம் அறிவிக்கப்பட்ட பின்னர், இலங்கை வானொலி ஐந்து மணியளவில் இதுபற்றிச் செய்தி வெளியிட்டது.

சம்பவம் நிகழ்ந்த இரு மணி நேரத்திற்குள்ளேயே பிரதமர் டிங்கிரிபண்டா விஜேதுங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப் பட்டார். நான்குமணிவரை ஏனைய கட்சி மேதினக் கூட்டங்கள் தொடர்ந்தன. ஆறுமணிவரை கொழும்பின் வீதிகளில் நடமாட்டம் இருந்தது. அரசபடைகள் உசார்படுத்தப்பட்டு, நாட்டின் சகல பகுதியிலும் காலவரையற்ற ஊரடங்கு அறிவிக்கப் பட்டது. மறுநாள் காலை ஊரடங்கு தளர்த்தப் பட்டது. பிரேமதாசவின் இறுதிச்சடங்கு நிகழ இருந்த மே ஆறாம் திகதிவரை துக்கதினம் அறிவிக்கப் பட்டது.

சம்பவ இடத்திற்கு மெதுவாகச் சைக்கிளில் வந்த ஒருவர் பிரேமதாசவை நோக்கி வந்ததாகவும், அவரது சைக்கிள் 'ஹான்டிலை'ப் பிடித்து, 'ஓரம்போ' சொல்லித் திருப்பிய வேளையில் குண்டு வெடித்துப் பலர் பலியானதாகவும், சைக்கிளில் வந்தவரே குண்டைத் தனது இடுப்பில் சுமந்திருந்ததாகவும் கூறப்பட்டது. அவரது கழுத்தில் சயனைட் குப்பி காணப் பட்டதாகவும், எனவே புலிகளே இக்கொலையைச் செய்திருப்பர் எனவும் புலனாய்வுத் துறையினர் தெரிவித்தனர். சம்பவ தினத்தன்றே புலிகள் இதை மறுத்தனர். புலிகள் இக்கொலையைச் செய்திருக்க மாட்டார்கள் என முன்பு இலங்கையில் பிபிஸி நிருபராக இருந்த கிறிஸ் மொறிஸின் ஆய்வுக் கண்ணோட்டம் ஒன்று பிபிஸியில் ஒலிபரப்பானது.

பெரும்பாலான சிங்கள மக்கள் புலிகள் பிரேமதாசவைக் கொன்றிருப்பர் என நம்பவில்லை. பிரேமதாசவின் இறுதிக் கிரியைகளில் பிரபாகரன் கலந்துகொள்வார் எனச் சிங்கள மக்கள் பலர் நம்பியது வியப்பூட்டுவதாக இருந்தது. பிரேமதாச கொலை தொடர்பாகப் பல வதந்திகள் கால்கொண்டு நடந்தன. சந்தேக நபர்களாக கஸினோ உரிமையாளர்கள், கட்சி உள்விரோதிகள், லலித்தின் ஆதரவாளர்கள், புலிகள், தனிப்பட்ட விரோதிகள் எனப் பல தரப்பினர்.

'ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கென'த் தோன்றிய ஜேவிபி இயக்கத்தினை மிகக் கொடூர முறையில் பிரேமதாச ஒடுக்கியபோது நிகழ்ந்த படுகொலைகள் எத்தனை என்பது பற்றிய கணக்கு இதுவரை தெரியவில்லை. இவர்களது மரணத்துக்குப் பழிவாங்கலாக ஜேவிபி இக்கொலையைச் செய்திருக்கலாம் எனக் கூறப்பட்டது.

இலாபகரமான கஸினோ சூதாட்ட அரங்குகளை, இளைஞர்களைக் கஸினோக்கள் கெடுக்கின்றன என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டிற்காக ஒரே இரவில் காவல்துறையின் உதவியுடன் பிரேமதாச ஒழித்ததால், கஸினோ முதலாளிகள் இக்கொலையைப் புரிந்திருக்கலாம் எனப்பட்டது.

ஐதேக மீது பிரேமதாச சர்வாதிகாரப் போக்குக் கொண்டிருந்ததால் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயமாகச் செயலாற்ற முடியாமல் இருந்தனர். லலித் கொலை கட்சியின் செல்வாக்கை மேலும் சரித்திருந்தது. கட்சியின் செல்வாக்கைக் கூட்டவும், தமது அதிருப்தியைத் தீர்த்துக் கொள்ளவும் இக்கொலை கட்சி உறுப்பினர்களால் செய்யப் பட்டிருக்கலாம் எனவும் கூறப்பட்டது.

தனக்குப் போட்டியாக உருவாகுபவர்களைத் தருணம்பார்த்துப் பரேமதாச அழித்துவிடுவதால், தன்னைக் காக்கவும், லலித்தின் கொலைக்குப்

www.tamilarangam.net

பிழவாங்கவும் என காமினி திஸாநாயக்க இதைச் செய்திருக்கலாம் என்பது சிலரின் சந்தேகம்.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன குரேயே லலித்தின் கொலைக்குக் காரணம் எனவும், லலித்தின் கொலையை விசாரித்த பொலிசார் இதைக் கண்டுபிடித்தாகவும், தன்னைக் காப்பாற்றுமாறு சிறிசேன குரே பிரேமதாசவிடம் கேட்டதாகவும், அக்கோரிக்கைக்கு உரிய பதில் கிடையாததால் குரேயே இக்கொலையைச் செய்திருக்கலாம் எனவும் வேறுசிலர் சந்தேகம் தெரிவித்தனர்.

பிரேமதாசவின் கொலையை விசாரித்த குற்றப் புலனாய்வுப் பொலிசார், குலவீரசிங்கம் வீரகுமார் என்ற குருநகரைச் சேர்ந்த புலிகளின் உறுப்பினரே கொலையாளி எனக் கூறியுள்ளனர். லலித்தின் கொலையில் கந்தையா ரகுநாதன் (சாவகச்சேரி) என்ற புலி உறுப்பினரே கொலையாளி எனவும் இவர்கள் கூறியபோதும் (சயனைட் தவிர) எந்தச் சான்றும் இது தொடர்பாக வெளியிடப்படவில்லை.

திட்டமாக மறுக்காவிடினும் புலிகளே இக்கொலையைச் செய்திருக்க மாட்டார்கள் என்றே தோன்றுகிறது. இக்கொலையால் புலிகளது போர் திசைதிரும்பி வேறு பல பிரச்சனைகளைக் கொடுக்கலாம். புதிய தலைமை மூலம் ஒரு தீர்வை அடையலாம், அல்லாவிடினும் இக்கொலையால் யாழ் திரும்பும் - கொழும்பில் தற்காலிகமாக வசிக்கும் - தமிழர்கள் தங்களுடன் ஐக்கியப் படும் நிலைக்குத் தள்ளப்படலாம் என்ற நிலையில் புலிகளே இக்கொலையைச் செய்திருக்கலாம்.

எவ்வாறெனினும் பிரேமதாசவின் நடவடிக்கைகளை நன்கு அவதானித்து வந்த ஒருவராலோ, ஒரு குழுவாலோதான் இக்கொலை திட்டமிட்டுச் செய்யப் பட்டது என்பது உண்மையானது.

1922இல் சேரிப்பகுதி ஒன்றில் பிறந்த பிரேமதாச, படிப்படியாக அரசியலுள் நுழைந்து தலைமைப் பதவிகளை அடைந்தவுடன் தன்னை ஏழைகளின் தோழனாகக் காட்டியவர். நாட்டின் பொருளாதாரத்தைப் புறந்தள்ளி, ஏழைகளின் நல்வாழ்வுக்கெனப் பல சலுகைத் திட்டங்களை அறிவித்தார். ஒவ்வொன்றும் பெரும் செலவில் விழாவாகக் கொண்டாடப் பட்டது. இலங்கையின் எம்ஜிஆர் என்பது

## ஒரு மடல்

**வயவைக்குமரன்**

பிரியமான ராதைக்கு!
இதழ்களை இழுத்து அல்லவா
மின்னலைத் தருகிறாய்.
இது என்ன,
காதற் பரிசா?
வேண்டாம்
இது எனக்கு வேண்டாம்
கோபம்
அந்தப் பொல்லாத கோபம்
அது எனக்கு வேண்டும்
பொய்களின்மீது வீசி எறிய.
நான் வரமறுத்த நாட்களில்
முன்னங்கால்களை இடுக்கி, அணைத்து
முழங்காலில் முகம் புதைத்து
கல்லால் எறிந்து தீர்க்கும்
அந்தக் கோபம்
பொல்லாத கோபம்
அதை எனக்குத் தா!
கோது உலகை ஊத.

www.tamilarangam.net

போல் அவரது செயற்பாடுகள் இருந்தன. இனப்பிரச்சனையைத் தானே சமாதான முறையில் தீர்ப்பேன் எனப் பாவ்லா காட்டியதுடன், உலகத்தையும் தமிழ் அரசியற் குழுக்களையும், புலிகளையும், தமிழ் மக்களையும் நம்பவைத்தார்; ஏமாற்றினார். தன்மீது இது தொடர்பான பழிவராது, தெரிவுக்குழுவைக் காட்டினார்.

எடுத்ததற்கெல்லாம் புத்த தர்மம் பற்றிப் பேசிய அவரது கடைசிக் கால நடவடிக்கைகளை உற்று நோக்கினால், அவரது மனதில் நோபல் சமாதானப் பரிசு நிழலாடியது போன்றே தோன்றியது. லலித் கொலையை அடுத்துத் தன்னில் விழுந்த சந்தேகத்தைப் போக்கப் பிரேமதாச, மக்கள் மத்தியில் பழகத் தொடங்கியதே, அவரது உயிருக்கு முடிவாக வந்தவர்களுக்குச் சிறந்த சந்தர்ப்பத்தை வழங்கியதெனக் கூறலாம்.

பிரேமதாசவின் மரணத்தை அறிந்ததும் சில இடங்களில் சிங்கள மக்கள் வெடிகொழுத்தித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அரசியல் லாபம் தேடியோர் லிங்கன், காந்தி வரிசையில் பிரேமதாசவும் சேர்ந்துவிட்டார் என்றனர். சில தமிழ்க் குழுக்கள் தமிழரது நம்பிக்கை நட்சத்திரம் உதிர்ந்து விட்டது என்றனர். ஆனால் காலமும், சிலரின் முயற்சிகளும் அவரையும் அவரது மரணத்தையும் மக்கள் மனதில் நிலைபெறாது தடுத்துவிட்டன.

எதிர்பார்த்தது போல் எவ்வித வன்செயல்களும் நிகழாது பிரேமதாசவின் இறுதிக்கிரியைகள் நிகழ்ந்தன. இறுதிவரை லலித்தினதோ, பிரேமதாசவினதோ உடலங்களை ரூபவாஹினி காட்டவில்லை. (முன்னவரது உடலைக் காட்டினால் அவரது கட்சிச் செல்வாக்கு உயர்ந்துவிடுமே என்று; பின்னவர் உடல் கிடையாததால் காட்டமுடியாமலும்).

துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்ட நாட்களில் மன்னார், மட்டக்களப்புப் பகுதிகளுக்கு விஜயம் செய்த பிபிஸி இலங்கை நிருபர், மட்டக்களப்பில் இரண்டொரு வெள்ளைக் கொடிகளையே தான் கண்டதாகவும், மன்னாரில் அதுவும் இல்லையென்றும் கூறினார். பிரேமதாசவின் மரணம் இப்பகுதி மக்களுக்குத் தெரியாதோ எனத் தான் ஐயுற்றதாகவும் அவர் கூறினார். இக்காலங்களில் வடபகுதியில் நிலைமை வழமைபோலவே இருந்ததாகவும், புலிகளின் இரண்டொரு முகாம்களில் வெள்ளைக் கொடிகள் பறந்ததாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இனக்கலவரம் ஒன்று தோன்றலாம் என்ற அச்சத்தில் தென்பகுதிவாழ் தமிழர்கள் பலர் வவுனியாவுக்கு இடம்பெயர்ந்தனர். சில தென்பகுதி இடங்களில் தமிழ் மக்கள் சில காடையர்களால் மிரட்டப்பட்ட போதும் பெரியளவில் அசம்பாவிதங்கள் நிகழவில்லை.



President D. B. Wijetunga

இறக்க இருதினங்கள் முன்பாக கிருலப்பனையில் கூட்டம் ஒன்றில் "என்மீது கோபமிருப்பின் என்னுடலுக்கு வெடிவைத்து என்னைக் கொலை செய்யுங்கள், ஆனால் நான் சிறுவயதுமுதல் கட்டிக்காத்துவந்த நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தாதீர்கள்" எனப் பிரேமதாச பேசியிருந்தார். ஆனால் அவருக்கு

www.tamilarangam.net

நற்பெயர் என ஒன்றிருந்ததா என்பது பெரிய கேள்வியே. இளமையில் வாழைத்தோப்பு (கெஸல்வத்தை)க் கொள்ளைக்காரன் என்ற பெயர் அவருக்கு இருந்தது. ஐதேக ஆண்ட கடந்த 15 வருட காலத்தில் நிகழ்ந்த பல கொலைகளுடன் அவருக்குத் தொடர்பு இருந்தது என நம்பப்படுகிறது. 'ஏசியாவீக்' (12.05.93) இதழில் பிரேமதாச மரணத்துடன் இலங்கையில் இருந்து ஒரு வன்முறைச் சகாப்தம் விடைபெறுவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் இலங்கை அரசியலைப் பார்க்கும்போது, அரசியல் எதிரிகளை ஒழிப்பதற்கு வன்முறையே ஒரு சிறந்த வழிமுறையாகக் கொள்ளப்படும் சாத்தியங்கள் அதிகம். அதுவும், புலிகள் தற்போதுள்ள போக்கில் தொடரும்வரை, இவ்வழிமுறை ஒரு பாதுகாப்பான வழியென்றே அரசியல்வாதிகளுக்குத் தோன்றும்.

மேற்கூறிய இரு மரணங்களும் மக்கள் மத்தியில் இலங்கை அரசியலைப் பற்றிய இரு கேள்விகளை முக்கியமாக எழுப்பியுள்ளன

ஒன்று, புலிகள் இக்கொலையைச் செய்யவில்லை என நம்புபவர்கள், 'இனி இலங்கையில் வன்முறையற்ற அரசியல் சாத்தியமா?' என்றும் –

இரண்டாவது, புலிகள் இக்கொலையைச் செய்திருப்பர் என நம்புபவர்கள், 'தென்னிலங்கை அரசியலையும் புலிகளே தீர்மானிக்கிறார்களா என்றும் கேட்கிறார்கள்.




சாள்ஸ்

## சட்டத்தின் கையில் கொலையாளி

சுவீடனில் வெளிநாட்டவர் பத்துப்பேரைக் கொல்ல முயற்சி செய்ததாகக் கூறப்படும் ஜான் அஸ்ஸானியஸ் (39) என்பவன்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டிருக்கிறது. லேசர்மூலம் குறிபார்த்துச் சுடும் துப்பாக்கி ஒன்றை இக்கொலை முயற்சிகளுக்கு உபயோகித்ததால் 'லேசர் மனிதன்' என அழைக்கப்படும் இந்நபர் கொலைமுயற்சிகள் தவிர, பத்துக் கொள்ளை முயற்சிகளிலும் ஈடுபட்டதாக நம்பப்படுகிறது.

குற்றச்சாட்டுகளில் இரு வங்கிக்கொள்ளைகளை மட்டுமே தான் செய்ததாக ஒப்புக்கொள்ளும் இவன், வெளிநாட்டவர்கள் சுவீடனில் வசிப்பதைத் தான் வெறுப்பதை ஒப்புக்கொண்டான்.

இருபதுலட்சம் குறோணர் செலவில் நிகழ்த்தப்பட்ட இந்த விசாரணைகளின்பின் 6,000 சாட்சிகளின் அடிப்படையில் 4,000 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. அறிக்கையின்படி ஒருவரேனும் கொலைமுயற்சியை நேரில் கண்டதில்லை. சந்தர்ப்ப சாட்சியங்களும், கொலைமுயற்சியில் பயன்படுத்தப் பட்டதான துப்பாக்கி அவனிடம் இருந்ததை அஸ்ஸானி ஒப்புக் கொண்டதும் இந்த வழக்கில் தமக்குச் சாதகமான முக்கிய விடயங்கள் எனப் பிரதம வழக்குத் தொடுநர் கருதுகின்றார்.

வைகாசி மாதத்தில் நிகழவிருந்த வழக்கு சந்தேக நபருக்கு வழக்கறிஞருடன் ஏற்பட்ட கருத்துமுரண்பாட்டால் புதிய வழக்கறிஞர் ஒருவர் அமர்த்தப் படுவதற்காக புரட்டாதி மாதத்திற்குத் தள்ளிப் போடப்பட்டுள்ளது

www.tamilarangam.net

'பகவானி'ன் ஓட்டம்

பகவான்களும் இந்தக் காலத்தில் சோதனைக்குள்ளாகி விடுகிறார்கள்! அளவுக்குமீறி பகவான்கள் பணம் சேர்த்தால் பிரச்சனை வராமல் வேறு என்ன வரும்? புட்டப்பர்த்தி சாய்பாபாவுக்கு இப்படியொரு நெருக்கடி வந்தது எந்த பகவானின் செயலோ? யூன் மாதத்தின் தொடக்கத்தில் பாபாவைக் கொல்ல முயற்சி நடந்துள்ளது; இதையொட்டி நிகழ்ந்த சம்பவங்களில் ஆறுபேர் மொத்தமாகப் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். சாய்பாபாவைக் கொலை செய்யவந்த நான்குபேர் பொலிசாரால் சுட்டுக் கொல்லப் பட்டனர். மீதியிருவரும் நால்வர் குழுவால் கொல்லப் பட்டிருக்கின்றனர்.

எது எப்படியோ "பகவான் சாய்பாபா" தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ள கார் 'ஷெட்'டுக்குள் ஓடி ஒளிந்திருக்கிறார். பின்னர் தப்பித்தோம் பிழைத்தோம் என்று அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டு தப்பிவிட்டாராம். தமிழ்ப் பத்திரிகைகள் இதை நேர்முக வர்ணனை போன்று சுவாரஸ்யமாக எழுதியிருந்தன. நான்குபேர் துரத்த, சாய்பாபா தப்பி ஓடுவதை, ஓடி கார்

ஷியாம் டெக்வான



எதுவும் நடக்காதது போன்று, சாய்பாபா தனது பக்தர்களுக்கு 'தரிசனம்' தருகிறார். ஆனால் பத்திரிகையாளர்களுக்கு.......?

இலக்கிய ரகளை

'சுபமங்களா' நடத்திய ஐந்தாவது நாடகவிழா யூன் 4முதல் 10வரை

பட்டது.

* தமிழ்மொழியில் எந்த இலக்கியமும் கிடையாது.
* தொல்காப்பியம் உட்பட பழைய தமிழ்ப் படைப்புகள் அனைத்துமே சமஸ்கிருதச் சாயல் கொண்டவைதான்.

– என்பது போன்ற கருத்துகளை ஜெயமோகன் கூறியது பார்வையாளர்களை ஆத்திரமடையச் செய்தது. அறிவுமதி, அக்கினிபுத்திரன், கவிஞர் விக்ரமாதித்யன் போன்றோர், ஜெயமோகனுக்குக் கடுமையான பதில் அளித்தனர். தமிழக அரசியல் அரங்கில் சுமார் எழுபது ஆண்டு காலமாக நடைபெற்றுவரும் பார்ப்பனீய எதிர்ப்புப் போராட்டம் அன்று இலக்கிய அரங்கிலும் நடைபெற்றதை உணர முடிந்தது.

"ஜெயமோகன் சிந்தையும், செயலும் பார்ப்பனீயத்தை மீட்பதை மையமாகக் கொண்டது" என்ற ரீதியில் எதிர்ப்பு வலுத்து, ஆளுக்கு ஆள் கண்டனக் கணைகளைத் (நெற்றிக்கண் என்றுகூடக் கூறலாம்) தொடுத்தபோது "விவாதம் முடிந்துவிட்டது" என்று கூறி ஜெயமோகனை, கோமல் சுவாமிநாதன் காப்பாற்றி(!) விட்டார். அப்போது ஒருவர் உரக்கக் கத்தியது இங்கு சுட்டிக் காட்டவேண்டியது: "ஜெயமோகன்! நீ

www.tamilarangam.net

ஷெட்டுக்குள் ஒள்வதை நீங்களும் ஒருமுறை மனக்கண்முன் கற்பனை செய்து பாருங்களேன்! பாவம் பாபா. அவருடைய சொத்து மதிப்பு ஆயிரம் கோடியாம். இதில் ஏற்பட்ட தகராறுதான் கொலை முயற்சியாக முடிந்திருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த ரகசியமாகிவிட்டது. இவ்வளவு நடந்தபிறகும்

நடைபெற்றது. காலையில் இலக்கிய விவாதம்; மாலையில் நாடகம் என்று ஒருவாரம், இலக்கிய ஆர்வலர்களுக்கு கலகலப்பாக முடிந்திருக்கிறது. இந்த ஏழுநாள் நிகழ்ச்சிகளிலும் 'ஹை - லைட்'டாக விமர்சனத்துக்கு உள்ளாக்கப் பட்டது ஜெயமோகனின் உரையாகும்.

* தமிழ் சமஸ்கிருதத்தால் வடிவமைக்கப்

ஆர்.எஸ்.எஸ்.சைவிட்டு விலகிவிட்டதாய்க் கூறுகிறாய். ஆனால் ஆர்.எஸ்.எஸ். உன்னைவிட்டு விலகவில்லையே"

<u>இரட்டைவேடச் சலுகை</u>

ஓட்டு கிடைக்கும் என்றால் எந்த வேடத்தையும் போடத் தயங்காதவர்கள்

# தமிழக தபால்


**அதியமான்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல்வாதிகள். இதில் எந்த நாட்டு அரசியல்வாதியும் விலக்கல்ல. வேடமிடுவதில் ஒருபடி மேலானவர்கள் இந்திய அரசியல்வாதிகள் என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது. பாகிஸ்தான் போல், கேரளாவிலும் முஸ்லிம் பள்ளிகளில் இனி ஞாயிற்றுக் கிழமைக்குப் பதிலாக வெள்ளிக்கிழமை வார விடுமுறையாக இருக்கும். இதற்கான ஆணையை கேரள இந்திரா கொங்கிரஸ் அரசு பிறப்பித்துள்ளது. பள்ளியின் பெயரில் முஸ்லிம் என்ற சொல் இருந்து, அங்கு குறைந்தளவில் முஸ்லிம் மாணவர்கள்



என்பார்கள். ஆனால் 'தண்ணீர் பட்டபாடெல்லாம்' மலையேறிவிட்டது. சென்னைவாசிகளுக்குத் தண்ணீர் என்பது ஆடம்பரப் பொருளாகி வருகிறது. கடுமையான தண்ணீர்ப் பஞ்சத்தில் திண்டாடும் சென்னை மக்கள், அல்லும் பகலும் தண்ணீருக்காக அலைவதும், காத்திருப்பதும் பரிதாபமாக உள்ளது. இவர்களின் தண்ணீர் தாகத்தை யார் தணிக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. வீராணம் ஏரியில் இருந்து

தண்ணீர் கொண்டு வருவதாகத் திட்டம் தீட்டிய கருணாநிதி, தண்ணீர் கொண்டுவரவில்லை. அந்தத் திட்டத்தின் மூலம் தன்னுடைய பணப்பெட்டியை நிரப்பிக் கொண்டார். மக்கள் ஆலாய்ப் பறந்ததுதான் மிச்சம். எம்ஜிஆரும் என்டி.ராமராவும் கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருவதாகத் திட்டம் தீட்டினர். திட்டங்களின் மூலம் அரசியல்வாதிகளும், காண்ட்ராக்டர்களும்தான் சந்தோஷமாக இருக்கிறார்களே தவிர, மக்களுக்கு ஒருவாய் தண்ணீர் கிடைக்கவில்லை. அதோ வருது, இதோ வருது என்று கிருஷ்ணாநதி நீருக்குப் போக்குக் காட்டிவந்த அரசியல்வாதிகள் இன்று அத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டனர்

"பிரதமர் நரசிம்மராவ், நந்தியால் தொகுதி இடைத்தேர்தலுக்காக என்னிடம் இருந்து ஒருகோடி ரூபாயை அன்பளிப்பாகப் பெற்றார். இது லஞ்சமல்ல" என்று ஹர்ஷத் மேத்தா, தனது வழக்குரைஞர் ராம் ஜெத்மலானியிடம் முன்னிலையில் செய்தியாளர்களிடம் கூறியது, கொங்கிரஸைக் கலக்கமடையச் செய்துள்ளது. ஏற்கனவே செயல்படாத



பிரதமர், முடிவெடுப்பதில் தாமதம் காட்டுபவர் என்று பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ள ராவ், இப்போது லஞ்ச ஊழலில் மாட்டிக் கொண்டது கொங்கிரஸை அதலபாதாளத்தை நோக்கித் தள்ளியுள்ளது. பிரதமர் ராவ்வின் ஒருகோடி ஊழல் தொடர்பாக, கருணாநிதி தவிர

www.tamilarangam.net

படித்தாலும் வெள்ளிக்கிழமை விடுமுறை விடவேண்டும். கேரளத்தில் வளர்ந்துவரும் பா.ஜ.கட்சியின் எதிர் வாக்குகளைப் பெற, கேரள அரசு இந்த மாதிரி விடுமுறையை அறிவித்துள்ளது. இருந்தும் கொங்கிரஸ்

எதிர்பார்க்கும் பலன் கிடைக்குமா என்பது கேள்விக்குறிதான். பாபர் மசூதி இடிப்பு விஷயத்தில் கொங்கிரஸ் போட்ட இரட்டை வேடமும், ஆதரவும் இன்னும் முஸ்லிம்களிடமிருந்து மறையவில்லை என்பதுதான் உண்மை. இது இவ்வாறிருக்க பா.ஜ.கட்சியினர் 'வெள்ளிக்கிழமை விடுமுறை'யை ஒரு வலுவான ஆயுதமாகப் பயன்படுத்தி மதவெறியூட்டி வருகிறார்கள். கலவரம் பண்ணுவதற்கும், அரசியல் செய்வதற்கும் வலுவான காரணம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் பா.ஜ.க. உள்ளது. இதனால் இரண்டுங் கெட்டான் நிலையில், இரட்டை வேடம் போடுகிறது கொங்கிரஸ். இதில் கொங்கிரசுக்குத் தோல்விதான்.

தண்ணீர் தண்ணீர்


றொம்பவும் சிரமம் இல்லாமல் கிடைக்கும் பொருளைத் தண்ணீர்பட்ட பாடு போலும்! மீண்டும் வீராணம் திட்டம் பற்றி ஜெயலலிதா பேசுகிறார்; ஒரு ஆண்டுக்குள் தண்ணீர் வந்துவிடும் என்கிறார். சுமார் இருபது ஆண்டுகளாக 'திட்டங்களில் தண்ணீரைப்' பார்க்காத சென்னைவாசிகள்

இன்னுமொரு வருடம் காத்திருப்பதா சிரமம்! ஆமாம், மக்கள் என்றேனும் ஒருநாள் தண்ணீர் வந்தே தீரும் என்ற நம்பிக்கையில் சினிமா பார்த்து, தொலைக்காட்சியில் நடிகர் நடிகைகளின் பேட்டியைப் பார்த்து சந்தோஷமாகவே இருக்கிறார்கள்!

ஒரு கோடிதானே!

அதிகம் ஊழல் செய்பவனை, நல்ல திறமைசாலி என்று பாராட்டும் மனப்போக்கு இந்தியர்களிடையே உள்ளது. 5000கோடி ரூபாய் பங்குசந்தை மூலம் ஊழல் செய்த ஹர்ஷத் மேத்தாவை "எப்படி இவ்வளவு அடித்தான்?" என்று கூறி வியக்கிறார்கள் இந்தியர்கள். தற்போது ஹர்ஷத் மேத்தா தூக்கி எறிந்துள்ள, "ஒரு கோடி ரூபாய்" வெடிகுண்டு மத்திய அரசையே ஆட்டம் கொள்ளச் செய்துள்ளது.

அனைத்துத் தலைவர்களும் கண்டனம் செய்துவிட்டனர். ஆனால் கருணாநிதி மட்டும், "ஜெயலலிதா 200கோடிக்கு ஊழல் செய்துள்ளார்; இதையெல்லாம் பேசாமல், எழுதாமல் ஒருகோடி பற்றி எழுதுகிறீர்களே, இது நியாயமா?" என்று கேட்கிறார். விஷயம் புரிகிறதா? இதிலிருந்தே கருணாநிதி எவ்வளவு பெரிய யோக்கியர் என்பது தெரியும். ஒருகோடி பிரச்சனையில் ராவ் மட்டுமல்ல, கருணாநிதியும் மக்கள்முன் வெறுமையாகத்தான் நிற்கிறார். உட்கட்சிப் பூசலில் திண்டாடும் கருணாநிதி, இதுபோன்ற ஊழல் ஆதரவு, மத்திய அரசு ஆதரவு போன்றவற்றால் தனது தொண்டர்கள் மத்தியில் தனது இமேஜை இழந்து வருகிறார்!



www.tamilarangam.net

நாற்சந்தி

பரவலாகக் குறிக்கப்பட்டு வந்தனர். எனவே தாய்லாந்துத் துறவியின் கூற்று வெறும் ஊகமாகவே தெரிகிறது. பிசாசு பயமூட்டக் கூடுமாயினும் பயங்கரவாதம் என்ற சொல்லை அதனுடன் தொடர்புபடுத்துவது சிரமமான காரியம்.

தனிநாயக அடிகளாரின் தமிழ்ப்பற்று பெரியது என்பதில் ஐயமில்லை. அவர் போன்று பற்றுடையோர் பலர் இருந்துள்ளனர். ஒருவரது பணிகள் சமூகத்துக்குப் பயன்படுகிற அளவில், அவை வாழ்கின்றன. அவற்றை ஆற்றிய எவரும் அதற்கும் அதிகமாக எதிர்பார்க்க முடியாது. தனிநாயக அடிகளைவிடப் பெரும் பங்காற்றியவர்கள் பலரையும் நாம் நினைவுகூர்வதில்லை. அதனால் அவர்களது பங்களிப்புகள் இல்லாது போய்விடமாட்டா. (நிற்க. 'என்னை நன்றாக இறைவன் செய்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு' என்பது தனிநாயக அடிகள் யாத்த வரிகளா அல்லது மேற்கோளாகப் பயன்படுத்தியவையா?)*

அரவிந்தனுடைய கவிதைகள் பற்றிய முன்னுரையும் அவரது கவிதைகளில் இடையிடையே தெரிந்த சமூகப் பார்வையுமே, "ராஜராஜனுடைய குதிரையின் குளம்பதிர்ந்த மண்" பற்றி அவரது இசைவான தொடக்கி வைத்ததாகக் கூறப்படும் 'முதலாளித்துவ சமுதாய மாற்றம்' எங்கே நடந்தது? ராஜராஜன் காலம் பற்றிய விரிவான பல ஆய்வுகள் நடத்தப் பட்டுள்ளன. சோழப் பேரரசின் காலம் பிராமணியத்துக்கும் வேளாளருக்கும் ஏற்பட்ட ஐக்கியத்தின் காலம். அதன் விளைவாக இந்திய நிலமான்ய முறையின் அத்திவாரமாக அமைந்த சாதியம் தமிழகத்தில் நிலைபெற்றது. குறிப்பிட்ட தொழில், விஞ்ஞானத் துறைகளின் விருத்தி, முதலாளித்துவத்தின் தோற்றத்தின்கீழ் மட்டுமே சாத்தியமாக அவசியமில்லை. பழைய சீனத்தின் அதிஉன்னதமான பங்களிப்புகள், சீனா நிலமான்ய அமைப்பில் இருந்தபோதே வழங்கப் பட்டன.

கொலம்பஸ், கப்றன் குக் என்ற பேர்களை என்னாற் கொண்டாட முடியவில்லை. ஆயினும் அந்தப் பேர்களின் வரலாற்று முக்கியத்துவம் மறுக்க முடியாதது. ராஜராஜனுடைய பங்கும் முக்கியமானதுதான். ஆனால் அரவிந்தன் கூறும் 'சமுதாய மாற்றம்' என்ற வகையில் அல்ல.

அன்புடன்
சிவசேகரம்
26.06.93

ஆசிரியர்,
சுவடுகள்.

அன்புடையீர்,

கி. பி. அரவிந்தன், தமக்குட் சம்பந்தமுடையவை என்று தான் நினைத்த இரு விஷயங்கள் தொடர்பாக எழுதியுள்ளார். முதலாவது தமிழ் என்ற சொல் 'தாய்' பாஷையில் எக் கருத்தில் வழங்குகிறது என்று தொடங்கித் தனிநாயக அடிகள் பற்றி அங்கலாய்ப்பில் முடிகிறது. மற்றது, ஒரு கவிதை விமர்சனத்தில் ராஜராஜன் பற்றி வந்த ஒரு குறிப்பிற் தொடங்கி லண்டன் குடியிருப்பு வீடுகளில் வந்து நிற்கிறது.

தமிழ் என்ற மொழியைக் குறிக்குஞ் சொல் மலையாளந் தவிர்ந்த எந்தப் பிறமொழியிலும் அவ்வாறே வரமுடியாது. மிக அருகில் உள்ள சிங்களவரது மொழியில் தெமல என்று வருகிறது. எனவே 'தமிழ்' என்று கருதப்படுவதான பர்மிய, தாய் மொழிச் சொற்களின் தோற்றுவாய் என்னவென்றும் சொற்கள் காலத்தால் எவ்வாறு மாறுபடுகின்றன என்றும் ஆராயாமல், மேலோட்டமான ஒரு முடிவுக்கு வருவது எவ்வளவு பயனுள்ளதோ தெரியவில்லை. இலங்கையின் பழைய வரலாற்றில், என்றுமே, தமிழ் என்ற சொல் பயங்கரத்தைக் குறித்ததாக நினைவில்லை. தமிழர், 'த்ரவிட' என்ற சொல்லாலேயே சொற்பிரயோகத்தையிட்டு நான் துணுக்குறக் காரணமாயின. ராஜராஜ சோழனின் படிமம் இன்று முஸ்லிம்களை விரட்டியடிக்கும் அரசியலுக்கும் ஒரு ஆதாரமாக நிற்கிறது. ஆண்ட பரம்பரைக் கவிராயர்கள் தமிழரின் பொற்காலம் பற்றிப் பேசுவதும் கங்கை கொண்ட, கடாரம் வென்ற கதைகளில் மனங்குளிர்வதும் என் மனதைத் துணுக்குறச் செய்ததில்லை. அரவிந்தன் விஷயத்தில் என் மனம் துணுக்குற்றமை பற்றிய அவரது மதிப்பீடு, அவரது கருத்துச் சுதந்திரம். அது உண்மையினின்று எட்டநிற்கிறது என்றே சொல்வேன்.

ஒவ்வொரு கொலனி ஆதிக்கவாதியும் ஆக்கிரமிப்பாளனும் என் மனதில் அருவருப்பூட்டுவது உண்மை. நமக்குப் போர்த்துக்கேய, டச்சு, ஆங்கிலேய கொலனித்துவங்களும் அண்மைக் காலங்களாகச் சிங்களப் பேரினவாதமும் எவ்வாறோ, அவ்வாறே, இன்னும் பல தேசங்கட்கும் மக்களுக்கும் இந்தச் சோழப் பேரரசன். சிலர் பெருமைக்குரிய வரலாறாகச் சொல்லும் ஒன்று எனக்கு அவ்வாறாகத் தெரியவில்லை.

ராஜராஜனுடன் தொடர்புடைய ஒரு முக்கியமான சமுதாய மாற்றம் இருக்குமாயின், அதற்காக நாம் ராஜராஜனுடைய தலைமையைப் பாராட்டலாம். ஆயினும், ராஜராஜன்

(*குறிப்பு: இவ்வரிகள் திருநாவுக்கரசர் தேவார வரிகள் என்று நினைவு)

ஆசிரியர்,
சுவடுகள்.

அன்புடையீர்,

தங்களின் சுவடுகள் கிடைத்தது. நன்றி. புதுமையாக இருக்கிறது.

தொடர்ந்து புதுமையும், தரமுமாக சுவடுகள் அமையவேண்டும். தமிழில் படைப்புகள் பிறமொழிகளைப் போல நவீனத்துவம் பெறவேண்டும் என்பதில் மிக்க அக்கறையுள்ளவன் நான்.

இன்னமும் நமது இலக்கியம் பழைய மரபில் நின்று கிறுகுவதை நாம் அனுமதிக்க முடியாது. பரிசோதனை முயற்சிகளுக்கு நன்கு களம் கொடுங்கள், வெறும் கருத்தை மட்டும் நம்பாமல்.

தொடர்ந்து சுவடுகளில் உறைப்பான கவிதைகளே பிரசுரமாகின்றன. மனிதனின் பிற உணர்வுகள் ததும்பும் படைப்புகளையும் பிரசுரிக்கவும், காதல் உட்பட.

சோலைக்கிளி,
374, செயிலான்வீதி,
கல்முனை,
இலங்கை.

www.tamilarangam.net

www.tamilarangam.net

## வெளிவந்துவிட்டது!

## 'கதிரேசனின் சிறுவர் பாடல்கள்'

ஈழத்தில் நீண்ட காலம் கற்பிப்பதில் தன்னை ஈடுபடுத்தித் தமிழ்ப் புலமைமிக்க பல மாணவர்களை உருவாக்கிய திரு.செ.கதிரேசர்பிள்ளையின் இலகுதமிழ், அழகுநடையில் முப்பது வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட தமிழ்ப் பொக்கிஷம்.

சிறுவர்களைக் கவரும் விதத்தில் அழகிய வடிவமைப்புடன் வெளிவந்துள்ளது. தொகையாகப் பெற்றுக்கொள்ளவோ தனிப்பிரதிகளைப் பெறவோ தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**C.Adhavan,/Priorens gade 32, 1th,/5600 Faaborg,/Denmark.**


* பிரதி ஒன்றின் விலை முப்பது குறோணர்கள் மாத்திரமே *

## நீ....ளச் சாதனை!

கோடை காலம் பிறந்துவிட்டாலே எல்லோருக்கும் உற்சாகம் தொற்றிக் கொண்டுவிடும். இந்த உற்சாகம் சிறுவர்களுக்கு விதிவிலக்கா என்ன?

அண்மையில் ஒஸ்லோவில் உள்ள பாடசாலைச் சிறுவர் சிலருக்கும் இந்த உற்சாகம் தொற்றிவிட்டது. அவர்கள், பெரியவர்களின் வழிகாட்டலில் ஒரு ஓவியம் வரைந்தார்கள். (சற்றே மூச்சைப் பிடித்துக்கொண்டு மேலே வாசியுங்கள்) அந்த ஓவியத்தின் நீளம் 1410 மீற்றர்கள். இத்தனை நீ...ளமான ஓவியத்தை உலகில் இதுவரை யாரும் வரைந்ததில்லை. எனவே இது ஒரு உலக சாதனைதான்.

ஒஸ்லோவின் 'லிண்டபேர்க்' (Lindeberg) பகுதி மாணவர்கள் வரைந்த இந்த ஓவியம், முன்பு ஒஸ்லோ 'போலர்' (Bøler) மாணவர்களின் நீள ஓவியச்சாதனையை 157 மீற்றர்களால் முறியடித்துவிட்டார்கள் இந்த மாணவர்கள். சாதனை நிகழ்த்துவதில்தான் எத்தனை வகை? முன்பு எமது நாட்டில் இரவு பகலாகச் சைக்கிள் ஓட்டிய, ருவிஸ்ற் நடனம் ஆடியவர்களது நினைவு வருகிறதா?



– செல்வன் –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மௌனம் உறைகிறது!



தமிழ் மக்களை மனித இனமாகவே ஏற்றுக்கொள்ள மறுக்கும் சிங்கள ஆட்சியாளர்களாயினும் சரி, தமிழ் மக்களது விடுதலைக்குப் போராடுவதாகக் கூறிக்கொள்ளும் விடுதலை இயக்கங்களாயினும் சரி, மாற்றுக் கருத்துக் கொண்டோரையும் மக்களது அடிப்படை உரிமைகளுக்காக குரல் கொடுப்போரையும் ஆயுதமுனையில் ஒடுக்கியும் ஒழித்துமே வந்துள்ளனர். இவர்களைப் பொறுத்தவரை தேசபக்தர்களும் ஜனநாயகத்தின்மீது பற்றுக் கொண்டவர்களும் உயிர்வாழத் தகுதியற்றவர்கள் என்று எழுதப்படாத சட்டத்தை நடைமுறையில் கொண்டுள்ளனர்.

இலங்கை அரசின் இனப்பாகுபாட்டுக்கு எதிராக தமிழ்பேசும் மக்கள் அஹிம்சைவழியில் போராடியபோது ஆயுதம் தாங்கிய காடையர்களாலும் குண்டர்படையாய்ச் செயலாற்றிய பொலிசாராலும் மிகக் கேவலமான முறையில் தாக்கப்பட்டனர். இதனால் பாராளுமன்ற அரசியலில் நம்பிக்கை இழந்த தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆயுதம் ஏந்தியமை விருப்பினாலல்ல, பலவந்தத்தாலேயே. மக்களது விடுதலைப் போராட்டம் எதிலும் ஆயுதத்தின் பங்கு அவசியமானதுதான். ஆனால் எமது போராட்டத்தில் ஆயுதங்களே சர்வமயம் என ஆகிவிட்டமைதான் மிகவும் துரதிர்ஷ்டம்.

தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை ஆட்சியாளர் ஏற்படுத்திவரும் திட்டமிட்ட பொருளாதாரத் தடையும், வடக்கு கிழக்கில் திட்டமிடப்பட்ட முறையில் நிகழ்த்தப்பட்டுவரும் சிங்களக் குடியேற்றங்களும், எல்லாவற்றுக்கும் மேலாக ஆகாய, தரை மார்க்கமாக நிகழ்த்தப்பட்டுவரும் ராணுவப் பயங்கரவாதமும், தமிழ் மக்களைக் கொன்றொழித்துத் தமிழ் மக்களது போராட்டத்தை நசுக்க முயலுவதுடன், எதிர்காலத்தில் இலங்கையில் தமிழர்களே இல்லாதொழிந்துவிட வேண்டும் என்ற இலங்கை அரசின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றன. இதில் மிக வேதனைக்குரிய விடயம் என்னவெனில், தமிழர்களை இல்லாதொழிக்கும் ஆட்சியாளர்களின் சதிக்குத் தமிழ் விடுதலை அமைப்புகளும் சாதகமாகச் செயற்படுவதாகும்.

பல இயக்கங்கள் சிங்கள

www.tamilarangam.net

ராணுவத்துடனும், இந்திய அரசுடனும் இணைந்து தமிழ்மக்களைக் கொன்றொழித்தும் விடுதலையை விலைபேசியும் வருகையில், தனித்துநின்று போராடுவதாகச் சொல்லிக்கொள்ளும் புலிகள் தொடர்ச்சியாகப் பல தேசபக்தர்களைக் கொன்று வருகிறார்கள். அண்மையில் இதன் மற்றொரு பலிகொள்ளலாகத் தில்லையைக் கொன்றுள்ளனர் புலிகள். கேசவன், செல்வி, மனோகரன் போன்றோர் கைதுசெய்யப்பட்ட போதே தில்லையும் கைது செய்யப்பட்டார். கடந்த மே மாதம் ஏழாம் திகதி தில்லையின் வீட்டுக்குச் சென்ற புலிகள், அவரைத் தாம் கொன்றுவிட்டதாகக் கூறி அவரது உடைமைகளை அவரது வீட்டில் கொடுத்துள்ளனர்.

இவ்வாறான பலியெடுப்புகள் விடுதலையின் பேரால் ல அமைப்புகளால் தொடர்ச்சியாகச் செய்யப்பட்டு வந்துள்ளன. அதிகாரத்தை மாத்திரமே குறியாகக் கொண்டு இயங்கும் வழியில் நிகழ்த்தப்படும் இக்கொலைகள் போராட்டத்தைப் பின்தள்ளுவதை நாம் ஏனோ உணரமறுக்கிறோம்.

கொலை செய்யப்படும் அளவுக்குத் தில்லை செய்த குற்றம் என்ன? இதுவரை புலிகள் இப்படுகொலைக்கு உரிய விளக்கத்தை வழங்காததேன்? பல விடுதலை அமைப்புகள் போல, இலங்கை அரசுக்கோ, இந்திய அரசுக்கோ கூலியாகச் செயற்பட்டவரல்ல தில்லை. பிரேமதாசவையோ, ராஜீவ் காந்தியையோ ஈழத்தமிழரது துயர்தீர்க்க வந்த மகாத்மா, பிரச்சனைகளைத் தீர்க்கும் மனது படைத்தவர் என்று பல விடுதலை இயக்கங்கள் புகழ்ந்ததுபோல் தில்லை புகழவில்லை. கொலையை மரணம் என்று திரித்துக் கூறும் தேசத்தில் இன்று தில்லை இல்லை; கொல்லப்பட்டு விட்டார்.

தனது தேசத்தையும் மக்களையும் நேசித்த தில்லைக்கும் மரணதண்டனை வழங்கப் பட்டாயிற்று. விடுதலையின் பேரால் சிறையில் வாடும் இன்னும் ஏராளமான தமிழர்களது உயிர்பற்றி யாரும் உத்தரவாதம் தரமாட்டார்கள் என்ற அபாயகரமான சூழலில், இக்கொலையைக் கண்டிக்காமல் மௌனம் சாதிப்பது, தமிழ் மக்கள் அனைவரும் தமக்கே தோண்டும் சவக்குழி போன்றதே. இக்கொலையை வன்மையாகக் கண்டிப்பதுடன், இவ்வாறான கொலைகள் தொடராது தடுக்கவும் அனைவரும் தம்மாலியன்ற வழிகளில் உழைக்கவும் சுவடுகள் வேண்டுகிறது.

## கைதுகளும் உரிமைகளும்!

*கைது செய்யப்படுவோர் என்ன காரணத்திற்காகக் கைதாகின்றனர் என்பதையும், எங்கு தடுத்து வைக்கப் பட்டிருக்கிறார் என்பதையும் அவர் கைதான உடன், கைது செய்யப்பட்டவரது நெருங்கிய உறவினருக்கு அறியத்தர வேண்டும். கைதாவோரது உறவினர்கள், கைதிகளைப் பார்வையிடவும், அவர்கள் தமக்குரிய முக்கிய கடமைகளை ஆற்றவும் வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.*

*கைதிகள் என்ன காரணத்துக்காகத் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் என்பது பகிரங்கமாக அறிவிக்கப்பட வேண்டும். அவர்கள் மீதான விசாரணைகள் பகிரங்கமாக நிகழ்த்தப்பட வேண்டும். கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சூழல், சர்வதேச ரீதியில் ஏற்புடையதாகவும், கைதிக்கு உள, உடல் ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தா வண்ணமும் இருத்தலை உறுதிப்படுத்த வேண்டும்.*

www.tamilarangam.net

# சப்பாத்துக்கள் பற்றிய எனது அபிப்பிராயம்

சோலைக்கிளி

சப்பாத்துக்களே கால்களுக்கு வசதி.
அழகும் கூட.
நாய் குரைத்துத் துரத்தினால்கூட
ஓடத் தேவையில்லை.
எட்டி உதைக்கலாம் நாய்க்கு.

சப்பாத்து அணிந்தால்
கால்களுக்கு தனிப்பலம்.
முள்ளைக் கசக்கிக்கொண்டு போவதுதானே சப்பாத்து!
நெல்லில் மிதிபட்டால்
உமி தெறிக்கும் ஒருபக்கம்.

வீதிகளில் கிடந்து
கால்களைக் குத்தும்
சின்னக் கற்களுக்குக்கூட
சப்பாத்து என்றால் பயம்.
அது ஏறினாலே
தவிடுபொடியாகும் அவை.


இந்த நடக்கப்பழகிய மண்புழுக்களுக்கு சப்பாத்து இல்லாமல்
துள்ளி எழுந்து ஓட முடியவில்லை!
சப்பாத்து அணிந்தால்
ஓடுவதற்கும் வாய்ப்பு.
உன்னில் பாய்வதற்கும் துணிச்சல் வரும்.



நான் அண்மையில் வாங்கிய சப்பாத்து
கறுப்பு.
சொண்டு உள்ளது.
முன்னர் வாங்கியதின் சிறிய சாயலும்
இல்லை.
மண்ணுக்குள் நெளியாமல்
தலைமுறையை மாற்றி
இரும்பைத் தூக்கிப் போகின்ற மண்புழுவே;
கேட்டாயா,
சப்பாத்துகள் பற்றிய எனது அபிப்பிராயத்தை!

17.06.93

பொஸ்னியாவுக்கு உணவுப் பொட்டலங்கள்



1. Heilbronn

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 2. Altötting




»Wolle mache kleine Spiel? Unter welche Container isse Bosniak? 100 Dollars!«

## 3. Mittenwald







## 5. Wien

(Fr.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அங்கும் வேண்டாம் இங்கும் வேண்டாம்



இலங்கையில் மிகமோசமான வாழ்க்கை நிலையைக் கொண்டிருப்பவர்கள் மலையக மக்கள். இவர்கள் காடுவெட்டிக் கழனியாக்கி இலங்கையை 'செல்வந்த' நாடாக்கியவர்கள். இன்றும் இவர்களாலேயே ஏனைய மக்களும் வாழக்கூடியதாக உள்ளது.

இத்தகையவர்கள் 1948இல் சிங்களப் பேரினவாதிகளது சூழ்ச்சியால் தமது குடியுரிமையைப் பறிகொடுத்தனர். இந்த நடவடிக்கையை ஆதரித்ததன்மூலம் தமது காட்டிக் கொடுப்பை நிகழ்த்திய தமிழ் அரசியற் தலைமைகளும் இந்த மாபெரும் வரலாற்றுத் துரோகத்திற்கு உடந்தையாகி இன்றும் அம் மக்கள் விடும் கண்ணீருக்கு முக்கிய காரணம் ஆகினர்.

அவ்வாறே 1964இல் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் போதும் அதனை எதிர்த்துப் போராடாமல் மௌனமாக இருந்து துரோகமிழைத்தது தமிழ்த் தலைமை. இந்த ஒப்பந்தத்தின்படி குடும்பங்கள் இலங்கையிலும் இந்தியாவிலுமாகப் பிரிக்கப்பட்டன; மந்தைகள் போல அவர்கள் பிரித்து விற்கப் பட்டது பெரும் சோகம்.

இலங்கையில் உள்ள மலையகத் தமிழரைக் குறைந்தவர்களாக, தீண்டத் தகாதவர்களாக பல வடக்கு கிழக்குத் தமிழர்கள் இன்றும் நடத்தி வருகின்றனர். குறிப்பாக மலையகத் தமிழரைப் பற்றிக் கூறும்போது "கள்ளத்தோணி, வடக்கத்தையான்" என்று கூறியவர்கள் பலர் உண்டு. ஆயினும் பொதுவாக இவர்களை 'இந்தியத் தமிழர்கள்' என்று கூறுவதுண்டு. (முந்தி வந்த தீவானைப் பிந்திவந்த தீவான், 'தீவான்' என்று சொல்வதுபோல் இல்லையா?)

இலங்கையில் நிலைமை அவ்வாறென்றால், இந்தியாவுக்குப் பலாத்காரமாக அனுப்பப்பட்ட மலையகத் தமிழர்களை 'சிலோன் தமிழர்கள்' என்று பிரித்து மட்டமாக அழைக்கும் பரிதாபத்தை என்ன செய்வது? இந்நிலை தொடர்கதையாகத் தொடர்வது வேதனை தருவதாகும்.

- யாழோன் -

www.tamilarangam.net

தமயந்தி

ஊர் ஒன்று

அத்தியாயம் 4

துறையில் மீனை விற்றுவிட்டு வந்த மூவரும், வரும்வழியில் ஆய்ந்த பன்னைப் பழங்களோடு கோயில் மதிலில் அமர்ந்துகொண்டனர். பழங்களை மூன்றாக, சரிசமமாகப் பிரித்தான் பாலன். மீன்விற்ற காசைச் சரிசமமாகப் பிரித்தான் சாந்தன்.

"இந்தாடா ரூபன் உன்ர பங்கு" நான்கு ரூபாய்களை ரூபனின் கையில் திணித்தான் சாந்தன். ரூபனுக்கு எதுவுமே புரியவில்லை. "சீ.... எனக்கு வேணாம்....." என மறுத்தபடி சாந்தன் திணித்த ரூபாய்களைத் திருப்பிக் கொடுத்தான் ரூபன். "இல்லையடா நீ வச்சுக்க, நீயும் எங்களோட காலமையிலயிருந்து நிண்டனிதானேயடா, தாயும் பிள்ளயுமெண்டாலும் வாயும் வயிறும் வேற" பெரிய மனிதன்போலப் பழமொழி சொன்னான் பாலன். "அதுக்கு இவ்வளவு காசா? கஸ்ரப்பட்டது நீங்க ரெண்டுபேரும்....." ரூபனுக்கு அவர்களைப் போலச் சரிசமமான பங்கை ஏற்றுக்கொள்வது மனதுக்குச் சங்கடமாய் இருந்தது. அதைவிட நான்கு ரூபாய்களை வைத்துத் தான் என்ன செய்வது என்ற பயம்வேறு அவனுக்கு. இந்த இரண்டு நாட்களுக்குள்ளும் அந்தக் கிராமத்திலுள்ள சிறிய கடைகளில் சென்று எப்படிச் செலவு செய்தாலும் இரண்டு ரூபாயாவது மிஞ்சும். அதனை வீட்டில் வைத்து அம்மாவிடம் பிடிபட்டால் "ஏது இவ்வளவு காசு?" என்று நடக்கக்கூடிய அம்மாவின் விசாரணையும், தண்டனையும் அவனை மேலும் பயமுறுத்தியது. "இல்லையடா சாந்தன்; இதைப்பிடி. எனக்கு ஒர்ரூபா காணும்" ஒரு ரூபாயை மட்டும் தான் எடுத்துக்கொண்டு, மீதி மூன்று ரூபாய்களையும் சாந்தனிடம் நீட்டினான் ரூபன்.

"டேய் இப்பிடிச் செய்வமடா, நீ காசை வீட்ட வச்சிருக்கப் பயந்தா நான் உன்ர காச வச்சிருக்கிறன், தேவயெண்டால் நீ கேக்கிறபோது நான் பள்ளிக்குடத்தில தாறன்" யோசனை கூறினான் பாலன். சாந்தனுக்குப் பாலனின் யோசனை சரியாகப் பட்டது. ஆனாலும் ரூபனுக்கு மனம் இஷ்டப்படவில்லை. அவர்கள் இருவரும் காலையிலிருந்து கஷ்டப்பட்டு மீன்பிடிக்க, இடையில் வந்து வேடிக்கை பார்த்த தனக்கும் ஒரேயளவு பங்கு என்பதை ஏற்றுக்கொள்ளச் சங்கடமாயிருந்தது.

www.tamilarangam.net

"என்னடா யோசிக்கிறாய்?" சாந்தன் அதட்டியதில் ரூபன் நான்கு ரூபாய்களையும் பாலனிடம் கொடுத்தான்.

கோயில் மதிலில் அமர்ந்தபடி பன்னைப் பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டே பின்னேரத் திட்டங்கள் தீட்டப்பட்டன. "பாலனட்ட மூண்டு கண்ணியிருக்கு. என்னட்ட ரெண்டு கண்ணி, அஞ்சு. அதில பாலன் நீ ரெண்டக் குத்து. நான் ரெண்டக் குத்திறன். ரூபன் ஒண்டக் குத்தட்டும்" தனது அபிப்பிராயத்தைக் கூறினான் சாந்தன்.

சாந்தனின் அபிப்பிராயத்தை இருவரும் ஏற்றுக்கொண்டனர். "கண்ணி குத்திமுடிய பின்னேரம் பூவரசங்குளத்துக்கும் போட்டு, குளிச்சு முடிய கண்ணயம்மன் கோயில்ப் பக்கம் இளணி பிடுங்கப் போவம்" பாலன் தனது திட்டத்தையும் கூறினான்.

"இல்ல, இண்டைக்கு கண்ணயம்மன் கோயில்ப்பக்கம் போறயில்ல. நான் வேறயொரு இடத்தில சீனிக்குரும்ப பாத்து வச்சிருக்கிறன். ராவைக்குப் புடுங்குவம்" தாழ்ந்த குரலில் மெதுவாகச் சொன்னான் சாந்தன்.

"எங்க அந்தோனியார் வளவிலயா?" இரகசியமாகக் கேட்டான் பாலன்.

"ஓம் பெரிய தென்னையில சரியான குரும்ப கிடக்கு" இதுசாந்தன்.

இருவரும் களவுக்குத் திட்டம் போடுகிறார்கள் என்பதை அறிந்தபோது ரூபனுக்கு நடுக்கமெடுத்தது. "நான்..... வரயில்ல...... எனக்குப் பயமாக் கிடக்கு" அச்சம் படர்ந்த தொனியில் ரூபன். "டேய் நீ வரவேண்டாம், வளவுக்கு வெளிய நில்லடா, நாங்க..." சாந்தன் கூறிமுடிப்பதற்குமுன் இடைப்புகுந்த பாலன், "இல்ல, வேணாம். ரூபன் உங்கட வீட்டில நிக்கட்டும். நாங்க ரெண்டு பேரும் போட்டு வருவம்" என்றான். சாந்தனும் சம்மதித்துக் கொண்டான். ரூபனுக்கு விடுதலைப் பெருமூச்சொன்று மெதுவாக வெளியேறியது.

முதலைக்களி குளத்தின் மேற்குக் கரையில் மூவரும் கண்ணிகளை நாட்டிவைத்துவிட்டு, மற்றைய கரைகளுக்கு ஓடிச்சென்று அங்கு மேய்ந்துகொண்டிருந்த கோட்டான் குருவிகளைக் கல்லெறிந்து துரத்தினார்கள். பல குருவிகள் வேறு திசைகளுக்கும், சில இவர்கள் கண்ணி வைத்துள்ள கரையிலுமாகப் பறந்துசென்று அமர்ந்துகொண்டன.

மேற்குக் குளக்கரையின் சற்றுத் தொலைவிலுள்ள ஈச்சம்பற்றறை மறைவில் மூவரும் மறைந்துகொண்டு நின்று கண்ணிவைத்துள்ள இடத்தையே கவனிக்கலாயினர். இவர்கள் கண்ணி வைத்துள்ள கரையின் பக்கமாகச் சிறுகுருவிகளும் இரண்டு மணிப்புறாவும் கரைநீளமாக மேய்ந்து திரிந்தன. "மணிப்புறா ரெண்டும் விழுந்துதெண்டா மணி" என்றான் பாலன்.

"மணிப்புறா அப்பிடியே வடக்குப் பக்கமாகப் போச்சுதெண்டால் பெரிய கண்ணியிலை விழும். ஆனா.... மேற்காலை திரும்பிச்சுதெண்டால் மெல்லிய தடம் அறுத்துப் போடும்..... ம்...." பெரிய சிந்தனையோடு சாந்தன் தனது அச்சத்தைத் தெரிவித்தான்.

"அதுக்கிடையிலை ஓடிப்போய் அமத்திப் போடலாம்" பாலன் சமாதானம் சொன்னான்.

"விசர்க்கதை கதைக்கிறாய், நீ போய் அமத்துமட்டும் அது சும்மா பாத்துக்கொண்டு நிக்குதோ? ஒரு உன்னலுக்குப் பத்தாது, ம்.... இவர்போய் அமத்தப் போறாராம்" நடக்கமுடியாத விடயத்தை சும்மா பேச்சுக்காகச் சொல்லும் பாலன்மீது கண்களுக்கெட்டியது கைகளுக்குச் சிக்காமற் போகுதேயென்ற ஆதங்கத்தை, கோபமாய்க் கொட்டினான் சாந்தன்.

"டேய் பொறடா..." அதட்டி அமைதிப் படுத்திவிட்டு, கண்ணிகள் இருக்கும் திசையை நிதானமாய்க் கூர்ந்து கவனித்தான் பாலன். தெற்குக் கரையில் இருந்து பறந்துவந்த பெரிய கொழுத்த கோட்டான் கண்ணிகள் இருக்கும் இடத்திற்கு அண்மையில் அமர்ந்துகொண்டது.

www.tamilarangam.net

"அடேய் இதுமட்டும் இண்டைக்கு விழுந்துதெண்டால்.... " எச்சிலூறும் நாவைப் பற்களிடையே நீட்டிக் கடித்தான் சாந்தன்.

இவையெல்லாவற்றையும் கவனிக்கும்போது ஏதோ கனவில் நிகழ்வதுபோல் ஓர் பிரமை ரூபனுக்கு. இத்தனை காலமும் தான் அனுபவிக்காத வாழ்வை இப்போது முழுமையாக அனுபவிப்பது போல் அவனுக்குள் ஓர் இன்பக் கிழுகிழுப்பு.

கோட்டான் தனது நீண்ட கால்களைத் தூக்கிவைத்து வடக்குப் பக்கமாக, கரைநீள மேய்ந்துவந்தது. "இன்னும்... கொஞ்.... சம்...." முணுமுணுத்தவனாய் இருப்புக் கொள்ள முடியாமல் ஓடுவதற்குத் தயாராய் ஈச்சை மறைவில் நெளிந்துகொண்டிருந்தான் பாலன்.

"விழடியம்மா .....விழு ....விழு.." ஈச்சைமுள் குத்துவதையும் பொருட்படுத்தாமல் ஈச்சம் அலக்கு ஒன்றை வளைத்துப் பிடித்து, வாயில் அதன் நுனியை வைத்து நறும்பிக்கொண்டு அந்தரத்தில் நின்றான் சாந்தன்.


நிகழப்போகும் புதுமையைக் கண்டு அனுபவிக்க, பொறுமையிழந்தவனாய் ரூபன்.

தனது அலகுகளால் ஈரநிலத்தில் எதையோ கொத்தியெடுத்து வாயிற்போட்டபடி, கால்களால் இரண்டடி எடுத்து வைத்தது கோட்டான்.

தண்ணீர்தொடும் கரையிற் தொடங்கி, மண்பிட்டிவரை மூன்றுயார் தூரத்திற்கு நட்டு வைக்கப்பட்டிருந்த கண்ணியின் தடங்கள், கோரைப் புற்களோடு புற்களாய் மறைந்திருந்ததை அறியாத கோட்டானின் காலில் தடமொன்று இறுகியது.

கோட்டான் கூக்குரலோடு சிறகுகளை அசைத்து, எம்பி எம்பிக் குதித்தது. காலில் விழுந்த தடம் இன்னும் இறுகியது. கோட்டான் படும் அல்லோல கல்லோலத்தைப் பார்த்த, அயலில் நின்ற மணிப்புறாக்கள், சிறுகுருவிகள் கத்தியபடி பறந்து மேலே எழுந்தன.

பற்றைமறைவிலிருந்து மூவரும் கிட்டிப்புள் பறப்பதுபோல் கண்ணியிற் சிக்கிய கோட்டானை நோக்கி ஓடினர் கோட்டானின் கழுத்திற பிடித்தான் பாலன். அதன் சிறகுகளை ஒன்றோடொன்று பின்னிச் செருகினான் சாந்தன். கோட்டானின் காலிலிருந்த சுருக்கை மெல்லத் தளர்த்தினான் பாலன்.



www.tamilarangam.net

## நினைவில் நூலகம்

பன்னிரு வருடங்கள் முன்னதாக, இதே காலப் பகுதியில் (1.6.81) தமிழர்களது அரும் பொக்கிஷங்களில் ஒன்றான யாழ் நூலகம் எரிக்கப் பட்டது. எரிந்த நூலகத்துடன் எரிந்துபோகாமல் எமது அறிவுத் தேட்டத்தை ஈட்டுவதும், புதிய நூலகத்திற்கான வழிவகைகளைத் தேடுவதும் எம் அனைவர் முன்னும் பாரிய கடமையாய் நிற்கிறது.

## நெஞ்சம் நிறைந்த வீரன்!

தமிழ் மக்களது விடுதலைப் போரில் ஆயுதப் போராட்டம் என்ற புதிய பரிமாணத்திற்குக் கால்கோளானவர்களில் முக்கியமான ஒருவரும், முதன்முதலில் சயனைட் அருந்தித் தன்னைக் களப்பலி ஆக்கிய வீரனுமான சிவகுமாரனது 19வது நினைவு தினம் இவ்வருடம் யூன் ஐந்தாம் திகதி.

அவனது வழியில் இன்றுவரை தம்முயிரை, தமது தாய்நாட்டின் விடுதலைக்காய் அர்ப்பணித்த அனைவரையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துவோம்.

ரூபனிடம் கோட்டானைக் கொடுத்துவிட்டு, கண்ணியின் பிடுங்கப்பட்ட பகுதியைச் சீர்செய்து மீண்டும் நிலத்தில் ஊன்றினார்கள் பாலனும் சாந்தனும்.

கோட்டானின் நீண்டு வளைந்த அலகுகளை நீண்டநேரம் பார்த்து ரசித்தான் ரூபன். அதன் மிருதுவான வயிற்றுப் பாகத்தில் விரல்களால் வருடினான். பஞ்சு போலிருந்தது. ரூபன் இப்போதுதான் இப்படியொரு பறவையை முதன்முதலாகத் தொட்டிருக்கிறான். இதனைப் பார்க்கும்போது செத்துப்போன ராகினிதான் அவனது நினைவுக்கு வந்தது. "ராகினி இப்ப இருந்துதெண்டால் நல்லாப் பேச்சுப் பழகியிருக்கும். நாய்ப்பசாசுக்கு நஞ்சு வைச்சுக் கொல்லவேணும்" ராகினி பற்றிய கவலையின் கோடுகள் மீண்டும் ஒருகணம் அவனைத் தாக்கிமறைந்தன.

"இண்டைக்கு மணிக்கறி" கண்ணியைச் சரிசெய்து, மீண்டும் நாட்டி வைத்துவிட்டு எழுந்த பாலன் சொன்னான்.

"கறி காச்சவேணாம், பொரிப்பமடா. உரிச்சு உங்கட அம்மாவட்டக் குடுத்துப்போட்டுப் போய்க் குளத்தில குளிச்சுப்போட்டு வந்து தின்னுவம்" கோட்டான் இறைச்சியைச் சாப்பிட்ட திருப்திபோல் நாவூறக் கூறினான் சாந்தன்.

இந்தக் கோட்டானைக் கொல்லப் போகிறார்கள் என்பதை ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை ரூபனுக்கு. ரூபனின் கையில் உயிரோடிருக்கும் கோட்டானின் மென்மையான ஸ்பரிசம் அதன்மீது ஓர் இரக்கத்தை உண்டாக்கியது. இதனைக் கொல்லாமல் வளர்க்கலாமென்று தோன்றியது அவனுக்கு.

சிலமணி நேரத்திற்குள் இரண்டு சட்டித்தலைக் குருவிகள், ஒரு கல்லுப்பிரட்டிக் குருவி இப்படி அகப்பட்டுக் கொண்டன. இந்தப் பெயர்களெல்லாம் இவர்களாகவே குருவிகளுக்கு வைத்த பெயர்கள். இவை எந்த இனக்குருவிகள் என்பது இவர்களுக்குத் தெரியாது. கோட்டானோடு மொத்தமாக நான்கு உருப்படிகள் பிடித்துவிட்டார்கள்.

பாலனின் வீட்டில் அவனது அம்மா பிலமினாவிடம் குருவிகளைச் சமைக்கக் கொடுத்துவிட்டுக் குளத்திற்குக் குளிக்கப் போவதாகத் திட்டம் நிறைவேறியது.

(தொடரும்)



# காலம் மறந்தவர்கள்

தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்தில் பலர், மிக ஆபத்தான நிலையில் போராட்டத்திற்கான அடித்தளத்தை நிறுவுவதில் உழைத்தனர். இன்று போராட்டம் பெருமளவில் மாறுபட்ட பரிமாணத்தைக் கொண்டிருப்பதால், அவர்களை நாம் மறந்துவிடுதல் சரியல்ல. அவர்களது போராட்ட முறைகளில் இருந்த சரிபிழைகளை நாம் உள்வாங்க வேண்டும்; அந்தப் பிழைகள் மீண்டும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

தென்னமெரிக்க விடுதலைப் போராட்டங்களில் மதகுருக்களின் பங்களிப்பை இலகுவில் மறந்துவிட முடியாது. இலங்கையிலும் அரசியலில் மதகுருக்களது பங்கு பெரியது. சிங்கள இனவாதத்தை வளர்ப்பதில் புத்தபிக்குகளது பங்கு மறக்க முடியாதது. அவர்கள் அவ்வாறு இருந்திராவிட்டால், இலங்கை இவ்வாறு இரத்த ஆறு ஓடும் நாடாக இல்லாமல் அமைதியான நாடாக இருந்திருக்கக் கூடும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்து மதகுருக்கள் நேரடியாக அரசியலில் தம்மை ஈடுபடுத்தியது மிகக் குறைவு. கத்தோலிக்க மதகுருக்கள் சிலரே நேரடியாக மக்களுக்குத் தேசிய உணர்வூட்டுதிலும், அவர்களை இணைப்பதிலும் தம்மை ஈடுபடுத்தினர். இவர்களில் வண.சிங்கராயரை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் தான் நிரபராதி என விடுவிக்கப்படும்வரை (மட்டக்களப்புச் சிறை உடைக்கப்பட்டு ஏனையோர் விடுவிக்கப் பட்டபோதும்) சிறையில் இருந்து வெளியேற மறுத்து அரசை அதிரவைத்தவர். அண்மையில் அவரது மரணம் அதிக கவனம் பெறப்படாமல் போயிற்று. பத்து வருடங்கள் முன்பு இலங்கையின் பத்திரிகைகளில் முக்கிய செய்தியாக இடம்பெற்றிருந்த இவர் தொடர்பான வழக்குகளும் அதற்கிடையில் மறந்துபோயிற்றுப் போலும்.

வண.பிதா.சிங்கராயர் 1991இல் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் இருந்து ஒரு தகவல்:

*வண.பிதா.சிங்கராயர் யாழ் கொய்யாத்தோட்டம் கிறிஸ்துராசா*

www.tamilarangam.net

தேவாலயத்தில் பங்குத் தந்தையாக இருந்தபோது, பளையிலிருந்து யாழ் நோக்கித் தனது மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது, ஆயுதம் தாங்கிய குழு ஒன்று, தமது தடைமுகாம் முன்பாக அவரை மறித்து சோதனை இட்டது. வண.பிதா, தான் யார் என்றும் தனது பங்கு எதுவென்றும் எடுத்துரைத்தபோதும், 'சிங்கராயர் சுவாமி' என்று யாழ்ப்பாணத்தில் தமக்கு யாரையும் தெரியாது என்று மறுத்துவிட்டனர் அவர்கள்.

தமது தடைமுகாமைத் தாண்டிச் செல்லும்போது மோட்டார் சைக்கிளை உருட்டிச் செல்ல வேண்டும் என்று தமக்கே உரிய பாணியில் கடிந்துகொண்டனர் அவர்கள். சிறிது தூரத்தை மோட்டார் சைக்கிளை உருட்டியபடி செல்லக் கட்டளை இட்டுவிட்டுத் தமக்குள் எதையோ கூறிச் சிரித்துக் கொண்டனர்.

ஓர் சத்தியத்திற்காய் சிறையில் சித்திரவதைப்பட்டும்; அதிலிருந்து தப்பச் சந்தர்ப்பம் கிடைத்தும், சத்தியம் சாவதில்லை என்பதற்காய் அதற்குள் இருந்து போராடிய குருவானவரையும், தற்போதைய ஆயுதந் தாங்கிய குழுவினருக்கு, ஆரம்பத்தில் அடிக்கல்லாக இருநத்வரையும், தெரியாமல் போதலோ, தெரிந்து புறக்கணித்தலோ ஒன்றும் புதுமையானதல்ல.

– டேவிட் ஜெயராஜா –

## சுகம்

வெள்ளை யரை வென்று விட
எண்ணை தேய்த்த எம் தலையில்
கொள்ளை மூளை உண்டென்று
கூடிப்பேசிக் கொள்வோம் நிதம்

போன ஜென்ம பெருமைகளை
புழுகிப் பேசி அந்நியரை
மான பங்கம் செய்வதிலே
மனதில் நிறைவு பொங்கும் நிதம்

முகத்தை கிழித்து அடுத்தவரின்
அகத்தை தேடி அவலங்களை
வெளியில் எடுத்து விமர்சித்து
களித்தல் கூட தருமே இதம்

ஆன்மாவுக்கு விலை சொன்னால்
அதனை விற்று பணம் பண்ணி
அடுத்த வீடு வாங்கி அதில்
எடுக்கும் வாபம் இன்பம் தரும்

நினைவை தொலைத்து கனவுலகில்
நிஜத்தை தேடும் மனிதர்களில்
முகத்தை புதைத்து மறையவிட்டு
கனவில் மூழ்கி நனைதல் சுகம்

– அசன்

www.tamilarangam.net

அயலான்

# கண்டது, கேட்டது, கண்டவர் சொன்னது



முன்னெப்போதும் இல்லாதவாறு நோர்வேஜிய உதைபந்தாட்ட வீரர்கள் உற்சாகமாக இருக்கிறார்கள். அண்மையில் நெதர்லாந்துடனான போட்டியில் மயிரிழையில், அதிர்ஷ்டவசமாக வெற்றி தோல்வியின்றிப் போட்டியை முடித்ததில் அவர்களது சந்தோஷம் அளவிட முடியாதது. ஏற்கனவே அவர்களைச் சொந்த மண்ணில் தோற்கடித்த நோர்வேக்குழு, எதிரணியின் ஆடுகளத்தில் இப்படித் தோல்வியைத் தவிர்த்தது, வெற்றி மாதிரித்தான். பத்திரிகை ஒன்று, 0 - 0ஆல் நோர்வே வென்றது என்று எழுதியது. முன்பும் இங்கிலாந்தின் ஆடுகளத்தில் தோல்வியைத் தவிர்த்த நோர்வேஜிய அணி, உலகக் கிண்ணத்தின் தகுதிகாண் போட்டிகளில் தனது குழுவில் தோல்வியுறாத ஓரணியாகத் திகழ்வதால் உலகக் கிண்ண இறுதிப் போட்டிகளில் பங்குபெற வாய்ப்பு அதிகரித்துள்ளது.

தனது குழுவில் மிகத் திறமை வாய்ந்த அணிகளான இங்கிலாந்து, நெதர்லாந்து என்பன இருந்தாலும் அவற்றை சொந்த மண்ணில் தோற்கடித்தும், எதிரணி மண்ணில் தோல்வியுறாமலும் பலரை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியுள்ளது. இன்னும் மீதமுள்ள மூன்று போட்டிகளில், குழுநிலையில் இதுவரை தோல்வியுறாத போலந்தை இருதடவைகள் சந்திக்க வேண்டிய நிலையில் நோர்வே உள்ளது. மற்றும் துருக்கியையும் அந்நாட்டின் ஆடுகளத்தில் சந்திக்கயுள்ளது. இப்போட்டிகள்தான் நோர்வேயின் அடுத்த கட்டத்தைத் தீர்மானிக்கும்.

கடந்த ஐரோப்பியக் கிண்ணப் போட்டிகளில், இறுதிநிலைப் போட்டிக்குத் தகுதிபெறாமல் இருந்து, யூகோஸ்லாவியா வெளியேற்றப் பட்டதால் வந்த டென்மார்க் இறுதியில் ஐரோப்பியக் கிண்ணத்தைச் சுவீகரித்துச் சென்றதுபோல் நோர்வேயும் உலகக் கிண்ணத்தைச் சுவீகரிக்கலாம். திறமை மாத்திரம் வெற்றியைத் தீர்மானிக்கிறது என்றில்லை, கடும் முயற்சியும் உறுதியான நம்பிக்கையும்தான்.

www.tamilarangam.net

இந்தப் பின்னணியில் ஒரு வால் செய்தி: மூன்றுதடவை (தொடர்ச்சியாக) ஐரோப்பியக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டிக்கும், ஒரு தடவை உலகக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டிக்கும் வந்த நோர்வேஜியப் பெண்கள் உதைபந்தாட்டக் குழு, நான்காவது தடவையாக இம்முறை ஐரோப்பியக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டியில் பங்கெடுத்தது. இத்தாலியை ஒரு கோல் வித்தியாசத்தில் தோற்கடித்து, முதல்தடவையாக ஐரோப்பியக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.




அது ஒரு திங்கட்கிழமை. எனது வீட்டுக்கு வந்திருந்த ஒரு நண்பர் கையில் ஒரு அழகான புத்தகத்தை வைத்திருந்தார். அது தமிழ்ப் புத்தகம்தானா என்று ஒரு ஐமிச்சம். வாங்கிப் பார்த்தேன். அழகான கைக்கடக்கமான அந்த நூல் ஒரு கவிதைத் தொகுதி.

அதை வெளியிட்டவர், எழுதியவர், திவ்வியநாதன் செல்லத்துரை. அட்டைப்படம்: சிவக்குமார் ஆறுமுகம். இவர்களை எனக்கு முன்பின் அறிமுகம் கிடையாது. ஆனால் இந்தத் தொகுதி கிடைத்ததும் மனதுள் ஒரு மகிழ்ச்சி தோன்றியது. இன்னொரு நாட்டில், தமிழர்கள் குறைவாகவே கலைகளில் ஆர்வம் காட்டும் சூழலில் தாமாகவே ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட்டமை வரவேற்கத் தக்கதொரு முயற்சியே. அதுவும் ஒரு தமிழ்க் கவிதைத் தொகுதியின் அட்டையை இத்தனை வண்ணத்தில் நான் பார்த்தது கிடையாது என்பது மகிழ்ச்சிக்குரிய முக்கிய காரணம்.

இத்தொகுதியின் வெளியீட்டில் கிடைக்கும் லாபத்தை ஈழத்தில் அகதிக் குழந்தைகளுக்காகச் செலவிடுவதாக ஆசிரியர் குறிப்பிடுவது நல்ல அம்சம். தாய்நாட்டையும் அங்கிருக்கும் துயர நிலைகளையும் மறக்க வேண்டும் என்று பலர் நினைப்பதுபோல் தோற்றம் தரும் இந்தச் சூழலில், இந்தத் தொகுதியால் லாபம் வருமோ இல்லையோ என்பது உத்தரவாதம் அற்ற நிலையிலும், குறைந்தபட்சம் அவ்வாறான நினைவை வாசகர்களிடம் ஏற்படுத்த நினைத்ததே ஆசிரியரது நல்ல அம்சமாகத் தோன்றுகிறது.

இந்த அழகிய கவிதைத் தொகுதியில் உள்ள பெரும் குறைபாடு கவிதைகள்தான். எதுகை மோனை வகையறாக்களை மாத்திரம் நம்பிக் கவிதை எழுதும் போக்கு இன்னும் இறந்துவிடவில்லை என்பதற்கு இந்தக் கவிதைத் தொகுதியும் இன்னொரு சான்று. நல்ல கவிதைகள் பலவற்றை வாசித்தலும் அவைபற்றி ஏனைய இலக்கிய ஆர்வலர்களிடம் கலந்துரையாடலும் கவிதை எழுதும் அனைவருக்குமே முக்கியம்.

www.tamilarangam.net

## 16வது இலக்கியச் சந்திப்பு

இலக்கிய கர்த்தாக்கள், சஞ்சிகை ஆசிரியர்கள், வாசகர்கள், விமர்சகர்கள் எனப் பல தரப்பினரையும் இணைக்கும் இலக்கியச் சந்திப்பின் 16வது தொடர் நிகழ்ச்சி எதிர்வரும் ஒகஸ்ற் மாதம் ஏழாம், எட்டாம் திகதிகளில் நெதர்லாந்தில் நிகழ உள்ளது.

இதில் கலந்துகொள்ள விரும்பும் ஆர்வலர்கள் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: "Ilakkiya Santhippu",/ Post bus 85326,/ 3508 AH UTRECHT/ Nederland.

இந்த நூலில் கவிதைகள் அச்சடிக்கப்பட்ட விதத்திலும், வடிவமைக்கப்பட்ட விதத்திலும் இன்னும் சற்றே கவனம் செலுத்தப் பட்டிருக்க வேண்டும். இவ்வாறான குறைபாடுகள் இன்னொரு தடவை கவிதையை எழுத முன்பும், வெளியிட முன்பும் ஆசிரியர் கவனத்தில் கொள்ள இத்தொகுதியைப் பெற விரும்பும் ஆர்வலர்களுக்காகத் தொடர்பு முகவரி: **Thivyanathan Selvadurai/ 12, Rue de panama, B22/ Paris 75018/ FRANCE.**

சில நேரங்களில் நீங்கள் அவசரமாகப் போய்க் கொண்டிருக்கும் போது யாராவது உங்களை வழியில் மறித்து, 'நீங்கள் தமிழர்தானே?' என்று கேட்கலாம். நீங்கள் 'ஆம்' என்று சொன்னால், 'நான் ஒரு தமிழ்ப் புத்தகம் வைத்திருக்கிறேன். (உங்களுக்காகத்தான்). வாசியுங்கள். உங்களோடு கதைக்கவேண்டும். உங்கள் முகவரி என்ன?' என மிகவும் அக்கறையோடு விசாரிக்கலாம். இது பலருக்கு நடந்திருக்கிறது. புத்தகத்தை வாங்கிச் சரியான முகவரியையும் கொடுத்தவர்கள் பலர் பட்டபாடு எனக்குத் தெரியும். சொந்த முகவரியைக் கொடுக்காமல் நழுவியவர்களையும் தெரியும்.

அதுசரி, யார் இந்த வழிமறிப்பாளர்கள் என்று யோசிக்கிறீர்களா? இவர்கள் தங்களைக் கடவுளின் தூதுவர்கள் போல் அபிநயிக்கும், யெஹோவாவின் சாட்சிகள். இவர்களது பிரச்சனை என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இவர்களால் பிரச்சனைக்கு ஆட்பட்டவர்களைத் தெரியும்.

மனிதனால் செய்துமுடிக்க முடியாத விஷயங்களைச் செய்பவர்களைக் கடவுளாகப் பார்க்கும் எமது சமூகத்தில், தமது தனிப்பட்ட பிரச்சனைகளாலும், மனோரீதியான பாதிப்புகளாலும் ஏராளமானோர் (முக்கியமாக இளைஞர்கள்) குழம்பிப் போயுள்ள எமது சமூகத்தில், உனது பிரச்சனையைத் தீர்க்கிறேன் என்று யாராவது நம்பும் வகையில் கூறினால் அவர்களின் பின்னால் செல்லப் பலர் தயாராக உள்ளனர். இந்தப் பலவீனத்தைப் பாவித்துத் தங்களது மதத்திற்கு ஆட்சேர்ப்பவர்களைப் பார்க்கும்போது தேர்தலுக்கு நிற்கும் வேட்பாளர்கள் நினைவுக்கு வருகிறார்கள்.

யெஹோவாவால் யாருக்காவது பிரச்சனை தீர்ந்ததோ இல்லையோ, யெஹோவாவால் பிரச்சனை தீரும் என்று சொல்லும் தமிழர்களது எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மதம் மாறுவது ஒருவரது தனிப்பட்ட விவகாரம்தான். ஆனால் இந்தக் கடவுள்களை இனப்பிரச்சனையைத் தீர்க்கும் வழியைச் சொல்லித் தொலைக்குமாறு யாராவது வேண்டினால் நல்லது. (நீங்கள் எல்லாரும் ஓரினம்தானே? ஏன் சண்டை பிடிக்கிறீர்கள் என்று கடவுள் கேட்க மாட்டார் என்பது என்ன நிச்சயம்?)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முக்கிய நூல்கள்!

1. மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக (யாழ்) ஆசிரியர்களது அறிக்கை ஒன்று அண்மையில் வெளிவந்துள்ளது. இது, கடந்த காலங்களில் வெளிவந்த அறிக்கைகளின் சாராம்சமாகவும், சுருக்கத் தொகுப்பாகவும் வெளிவந்துள்ளது. அழகிய முறையில் பிரிட்டனில் மீள்பதிப்புச் செய்யப்பட்ட இந்த நூலின் விலை இருபது குறோணர்கள்.

2. மனித உரிமைக்கான பல்கலைக்கழக (யாழ்) ஆசிரியர்களது முதலாவது தமிழ் அறிக்கை வெளிவந்துள்ளது. 'மனித உரிமையும் எமது போராட்டமும்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்நூலின் விலை முப்பது குறோணர்கள்.

3. இலங்கையில் இனப்பிரச்சனை தொடர்பாக தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டிருக்கும் மனித உரிமைமீறல்கள் பற்றிய அறிக்கைகளின் பத்தாவது நூல் வெளிவந்துள்ளது. மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களது (யாழ்) இவ்வறிக்கையின் பிரதி ஒன்றின் விலை இருபது குறோணர்கள்.

நூல்களைப் பெறவிரும்புவோர் தயவுசெய்து பணப்பெறுமதிக்குரிய முத்திரைகளை அனுப்பிப் பெறலாம். குறித்தளவு பிரதிகளே உள்ளன.
Suvadugal, Herslebs Gt 43, 0578 Oslo.

## சரிநிகர்

இலங்கையில் இருந்து வெளியாகும் ஒரேயொரு மாத இதழ் தற்போது மாதம் இருமுறையாக வெளிவருகிறது. முகவரி மாற்றத்தைக் கவனத்தில் கொள்ளவும். தொடர்புகள்: Sarinigar,/ 18/2, Allo avenue/ Colombo 3/ Sri Lanka.

## காலம்

கனடாவில் இருந்து வெளியாகும் கலை இலக்கியக் காலாண்டிதழ். தொடர்புகள்:
3479, St.Clair Ave. E, #302/ Scarbourg, Ont, M1k 1L2/ CANADA.

## சோகம் அற்ற தீவு!

இலங்கை சோகம் அற்ற தீவு என முன்னர் வந்த யாத்திரீகர்கள் எழுதினர். இப்போது சோகம் உள்ள தீவு. ரயில்வேக் கடவையில் 40பேர் இறந்தபின்னர் கடவை அமைக்கப்படும். கசிப்புக் குடித்து ஆட்கள் பலர் இறந்தபின்னர் மரணவிசாரணை தொடரும். பாதாள மலையில் பலரும் இறந்தபின்னர் 'ஓவர்லோட்' சட்டம் அமுல் நடாத்தப்படும். இப்படிப் பல. காடுவெட்டிக் குடியேற்றங்கள் உண்டானதன் பிரச்சனையே இன்றைய இனப்பிரச்சனையின் முக்கிய தடைக்கல். ஒரு வருடத்தில் இரண்டு வீதம் காடழிகின்றது எனப் பத்திரிகைகள் அழுகின்றன. இனப்பிரச்சனையால் எத்தனைவீதம் மனிதன் அழிகின்றான் எனச் சிந்திக்க எவரும் இல்லை. மாங்காய் வடிவமான தீவில் எத்தனை பக்கத்தில் கடல் அலைகள் ஓட்டை போட்டு வீடுகளையும் நிலங்களையும் கடல் விழுங்குகிறது! கவலைப்படுவார் யாரும் இல்லை. தமிழ் அரசாங்க மொழியாம். பிறப்புச் சேட்டிபிக்கற் தமிழில் இருந்தால் ஐரோப்பிய மொழியொன்றில் மொழிபெயர்ப்பு வேண்டுமாம். பிரசா உரிமை பெறத் தகுதியுள்ள மலையகத் தமிழினுக்குப் பிரசா உரிமைச் சான்றிதழ் வேணுமாம்! ஒன்றுமே விளங்கவில்லையே.
ஸ்ரீபிரேமஜெயம்.


●

திக்கவயல் தர்மகுலசிங்கம்

நன்றி: சரிநிகர்

www.tamilarangam.net

# சமஷ்டி



**பவித்திரன்**

இலங்கை அரசில் நிலைகொண்டுள்ள ஆட்சியாளர்களுக்கு எரிச்சலூட்டும் ஒரு அரசியற் சொல் 'சமஷ்டி'தான். இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சனைக்கு முழுமையான சமஷ்டித் தீர்வு ஒன்றே நிரந்தரத் தீர்வு என்று தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களின் நலனில் அக்கறை உள்ள அனைவரும் கருத்துத் தெரிவித்து வரும் சமயத்தில் தொடர்ச்சியாகத் தமிழ் மக்கள் பேரழிவுக்கு உள்ளாகி வருகின்றனர். இந்நிலையில் சமஷ்டி எவ்வளவு தூரம் தமிழ் மக்களைத் திருப்திப் படுத்தும் என்பது பெரிய கேள்வியாகவே நிற்கிறது.

1987இல் சில சலுகைகளுடன் இந்திய இலங்கை அரசுகளால் தமிழ் மக்கள்மீது திணிக்கப்பட்ட மாகாணசபைத் திட்டத்தையே கடுமையாக எதிர்த்தவர்கள் சிங்கள இனவாதிகள். சமஷ்டி அமைப்பு முறைக்கும், மாகாணசபைத் திட்டத்திற்கும் எதுவித நெருக்கமான தொடர்பும் இல்லாத நிலையில், மாகாணசபைத் திட்டத்தையே நிராகரிக்கும் சிங்களப் பேரினவாதிகள் சமஷ்டிமுறையிலான தீர்வொன்றை எதுவித கேள்வியும் இன்றி நிராகரிப்பார்கள் என்றே நம்பலாம். இதைவிட முக்கியமாக ஏற்கனவே நடைமுறையில் உள்ள வடக்கு கிழக்கு இணைப்பை நீக்கவும் இந்த இனவாதிகள் திட்டமிட்டு வருகின்றனர். இவர்களது நடைமுறைகள் பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் அங்கீகாரம் பெற்ற ஒன்றாக உலகுக்குக் காட்டப்பட உள்ளன.

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாணசபைத் திட்டம், வடக்கு கிழக்கு தவிர ஏனைய இடங்களில் பொம்மை அமைப்பாகவும் நடைமுறையில் உள்ளன. இத்தகைய பொம்மை அமைப்புகளுக்குத் தான் கடந்த மே மாதம் 17ஆம் திகதி (வடக்கு கிழக்கு நீங்கலாகத்) தேர்தல் நடந்தது. இத்தேர்தல் அரசியல் கட்சிகள் தமது பலத்தைப் பரீட்சிக்கும் களமாக அமைந்தது.

ஏழு மாகாணங்களில் ஆறு மாகாணங்களில் ஐ.தே.க வெற்றி ஈட்டியது. இதில் நான்கில் மட்டுமே அறுதிப் பெரும்பான்மை பெற்றது. ஏனைய இரண்டில் அதிக இடங்களைப் பெற்ற தனிக்கட்சியாக உள்ளது. இதுவரை ஐ.தே.க கோட்டையாக இருந்த மேல் மாகாணம், எதிர்க்கட்சியான சிறிலங்கா சு.கட்சி தலைமையிலான கூட்டணியிடம் போயுள்ளது. மூன்று மாகாணங்களில் எதிர்க்கட்சிக் கூட்டணிகள் அறுதிப் பெரும்பாற்மையைப் பெற்றன.

www.tamilarangam.net

ஐ.தே.க

கடந்த 16 வருடங்களாக நாட்டை நிர்வகித்துச் சின்னாபின்னமாக ஆக்கிவரும் ஐ.தே.க.வுக்கு நடந்துமுடிந்த தேர்தல், தோல்வியில் கிடைத்த வெற்றியாகவே கருதப் படுகிறது. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களாக இருந்த லலித், காமினி வெளியேறியபின் நிகழ்ந்த முதலாவது பெரியளவிலான தேர்தல் ஆகையால், அவர்களது வெளியேற்றத்தின் பாதிப்பு தேர்தல் முடிவுகளில் எதிரொலிக்கும் என நம்பப்பட்டது. மேலும் லலித், தேர்தலுக்கு மூன்று வாரம் முன்பே கொல்லப்பட்டமையும், இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசமீது நேரடியாகக் குற்றச்சாட்டுச் சுமத்தப் பட்டமையும் ஐ.தே.க.வுக்கு இழப்பை ஏற்படுத்தும் என ஆரம்பத்தில் எதிர்பார்க்கப் பட்டது. எனினும் லலித்தைத் தொடர்ந்து பிரேமதாச கொல்லப் பட்டமை தேர்தல் முடிவுகளைத் தலைகீழாக மாற்றிவிட்டது எனக் கூறலாம்.

பிரேமதாசவின் தன்னிச்சையான செயற்பாடுகளில் வெறுப்புக் கொண்டு எதிர்க்கட்சியின் பக்கம் தலையைத் திருப்பியிருந்த வாக்காளர்கள், மீண்டும் ஐ.தே.க பக்கம் திரும்பியதையே தேர்தல் முடிவுகள் காட்டுகிறது எனலாம். ஐ.தே.க.வில் இருந்து வெளியேறித் தனிக்கட்சியாகிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (டியுஎன்எப்), பிரேமதாசவை விமர்சித்தளவு, ஐ.தே.க. சீர்கேடுகளைப்பற்றி வாய் திறக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இந்த நிலைகள் எவ்வாறு கணிப்பிடப் பட்டாலும், தனிக்கட்சி என்ற ரீதியில் நாடுதழுவிய ரீதியில் ஐ.தே.க.வே பெரிய கட்சியாக உள்ளது. அதுவும் கிராமப் புறங்களில் கட்சி உறுதியான அடித்தளத்தைக் கொண்டிருப்பது, கட்சியைப் பொறுத்தவரை எதிர்பாராத சாதகமான அம்சம். மாறாக நகர்ப்புறங்களில் ஐ.தே.க.வின் செல்வாக்கு இறங்குமுகமாகவே உள்ளது.

எதிர்க்கட்சிக் கூட்டணி

சு.க, கொம்யூனிஸ்ற் கட்சி, சமசமாஜக் கட்சி என்பவற்றை முக்கியமாகக் கொண்டு அமைக்கப்பட்ட எதிரணிக் கூட்டணி நடந்து முடிந்த தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியுள்ளது. ஐ.தே.க.வுக்கு மாறாக இக்கட்சிகளின் செல்வாக்கு நகர்ப்புறங்களில் அதிகரித்துக் கிராமப்புறங்களில் குறைந்துள்ளது. அதிலும் குறிப்பாக ஐ.தே.க கோட்டையாக கருதப்பட்டுவந்த கொழும்பை இக்கூட்டணி கைப்பற்றியமையும், இக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட சந்திரிகா குமாரரணதுங்கா (சிறிமாவின் மகளும், கொல்லப்பட்ட விஜேகுமாரரணதுங்காவின் மனைவியும்) 2,83,000 விருப்பு வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு, தனது தாயார் 1989 பொதுத் தேர்தலில் பெற்ற விருப்பு வாக்குகளை (2,72,000) விட அதிகம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சுதந்திரக் கட்சிக்குள் ஏற்கனவே நிலவிவந்த குடும்பச் சண்டையை, சந்திரிகாவின் புதிய செல்வாக்கு அதிகரிக்கலாம். விரைவில் சந்திரிகாவின் அண்ணன் அநுரா தலைமையிலான ஒரு குழு வெளியேறும் நிலை ஏற்படலாம். சுதந்திரக் கட்சியின் அடுத்த வாரிசு சந்திரிகாவே என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிடுகின்றனர்.

சுதந்திரக் கட்சியின் கூட்டணியால் முற்றாக ஐ.தே.க.வை ஓரங்கட்ட முடியவில்லை. கூட்டணியாகப் போட்டியிட்ட போதும் இவர்களால் 39% வாக்குகளையே பெற முடிந்தது. இந்நிலையில் ஜனாதிபதி பதவிக்கோ பாராளுமன்றத்திற்கோ தேர்தல் நடைபெறுமாயின் இவர்களால் ஆட்சியைக் கைப்பற்ற முடியுமா என்பது கேள்விக்குறியே. இக் கூட்டணியின்

www.tamilarangam.net



வாக்குகளில் கூடியது ஐந்து வீதத்தைப் புதிய கட்சியான ஐ.ஐ.தே.மு. பெற்றுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி


ஐ.தே.க.வில் இருந்து பிரிந்த இக்குழு, பலரும் எதிர்பார்த்தபடி பாரிய வெற்றிகள் எதையும் சாதிக்கவில்லை. 1956இல் ஐ.தே.க.வில் இருந்து பிரிந்து தனிக்கட்சியை ஸ்தாபித்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக போன்று, ஐ.ஐ.தே.மு.க்குப் பிரகாசமான எதிர்காலம் உண்டெனக் கூறிவந்த இக்கட்சியினர், தமது எதிர்பார்ப்பு நிறைவேறாத நிலையில் மீண்டும், தமது 'தாய்வீட்டு'க்கே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் அடுத்த இளைய ஜனாதிபதி எனப் பத்திரிகைகளால் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டு வந்த லலித், கொல்லப் படாமல் உயிரோடு இருந்திருப்பாராயின், சிலசமயம் நிலைமை மாறியிருக்கலாம். எனினும் இருகட்சி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து மூன்றாவது பெரிய கட்சியாக இது வளரலாம். சுமார் 16% வாக்குகளை இக்கட்சி பெற்றுள்ளது. ஐ.தே.க.வின் வாக்குகளில் 10 - 11%ஐத் தனதாக்கியுள்ளது இக்கட்சி.

முஸ்லிம் கொங்கிரஸ்

நடந்துமுடிந்த மாகாணசபைத் தேர்தலில் படுதோல்வியைத் தழுவிய கட்சிகளில் முஸ்லிம் கொங்கிரசும் ஒன்றாகும். முஸ்லிம் மக்களின் தனித்தேசிய இனக் கோட்பாடு வலுவடைந்துவரும் இவ்வேளையில், இக்கட்சியின் தோல்வி பலத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. மு.கொங்கிரஸ் கட்சியின் உறுதியற்ற அரசியல் நிலைப்பாடுகளும், கட்சித் தலைமை ஐ.தே.க.மீது கொண்டிருந்த 'புரிந்துணர்வும், நல்லுணர்வும்', முஸ்லிம் மக்களின் அதிருப்தியைச் சம்பாதித்துள்ளன.

முஸ்லிம் மக்களுக்கே உரிய தனியான பிரச்சனைகளைத் தீர்க்க என(க்கூறி)




உருவாக்கப்பட்ட இக்கட்சி, அம்மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் எதையும் தீர்க்கும் செயற்திட்டங்கள் எவற்றையும் முன்வைத்துச் செயற்படாததன் தண்டனையே இத்தேர்தல் முடிவுகள் எனலாம்.

அண்மைக் காலங்களில் சிங்கள, தமிழ் இனவாதங்களின் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதலுக்கு எதிராக முஸ்லிம் மக்களை ஓரணியில் திரட்டி, அவர்களது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை நடத்த முன்வந்தால் மட்டுமே இக்கட்சி தனது எதிர்காலத்தைத் தக்கவைக்க முடியும். வெறும் சலுகைகளில் தமது காலத்தை ஓட்டிவிட நினைக்கும் கட்சி அதைச் செய்ய முடியுமா என்பது கேள்விக்குறியே.

மலையக மக்கள் முன்னணி

மலையக மக்கள் மத்தியில் வேகமாகச் செல்வாக்குப் பெற்றுவரும் இக்கட்சியின் முக்கிய தலைவர்கள் சிறையில் வருடக்கணக்கில் விசாரணைக்கு உள்ளாக்கப் படாமல் வாடுகின்றனர். கடும்

www.tamilarangam.net

அரசியல், நிதி நெருக்கடிகளுக்கிடையில் நுவரெலியா மாட்டத்தில் ஒரு இடத்தைக் கைப்பற்றியுள்ளது கட்சி. கட்சியின் தலைவர்கள் விடுவிக்கப்பட்டு, அவர்கள் சுயாதீனமாகச் செயற்பட அனுமதிக்கப்படும் பட்சத்தில் மலையகத்தில் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டமுடியும். அரசுடன் இணைந்து இவர்கள்மீது வன்முறையையும், ஒடுக்குமுறையையும் ஏவிவிடும் தொண்டமான் அதுவரை நிம்மதியாக இருக்கலாம்.

இ.தொ.கா.

மலையகத்தைப் பொறுத்தவரை இக்கட்சி தொடர்ந்தும் முதலிடத்தில் இருக்கிறது. எனினும், இக்கட்சி ஐ.தே.க. வாலைப் பிடித்துக் கொண்டிருப்பதால் முழுமையான பயன் இனவாதக் கட்சியான ஐ.தே.க.வையே சென்றடைகிறது. எலும்புத் துண்டுகளையே மலையக மக்களுக்குப் பெற்றுத்தரும் இக்கட்சியால், மலையகத் தமிழர்களது தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் பெறவோ இக்கட்சியால் இயலாது போய்விட்டது.


கடந்த சில வருடங்களாக மலையக மக்கள் தமது அடிப்படை உரிமைகளில் சிலவற்றைப் போராடி மீட்க முடிந்திருக்கிறது. அதற்குத் தொண்டமானோ, இ.தொ.கா.வோ மாத்திரம் காரணமல்ல. ஒப்பீட்டு ரீதியில் தொண்டாவால் செய்யப்பட்ட காரியங்களவிட. செய்யக்கூடிய காரியங்கள் உண்டு. இது தொண்டாவுக்கும் தெரியும்; தொண்டாவைத் தூக்கிப் பிடிக்கும் ஆலவட்டங்களுக்கும் தெரியும்.

நிகழ்ந்த தேர்தலில் மிகப் பெரிய தோல்வியைப் பெற்றது வாசுதேவ நாணயக்காரவின் சமசமாஜக் கட்சியும், அதன் கூட்டணிகளுக்கும் கிடைத்துள்ளன. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, சமஷ்டித் தீர்வு என்பவற்றை வலியுறுத்திய இந்தக் கட்சிகள் பாரிய தோல்வியைச் சந்தித்த போதும், இவ்வாறான கட்சிகளின் முயற்சிகள் மட்டுமே தற்காலிகமாகவேனும், அதிகாரப் பரவலாக்கம் பற்றிய விவாதம் – ஆய்வு என்பவற்றுக்கு வழிவகுக்கும். தமிழ் மக்களது பிரச்சனை தொடர்பாக நீண்ட காலமாகவே தெளிவான ஒரு நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் இக்கட்சிக்குத் தமிழ் மக்களே வாக்களிக்காமை வேதனை தரக்கூடியது. போட்டியிட்ட ஏனைய கட்சிகளைவிட இக்கட்சியே, தமிழ் மக்கள் தொடர்பாகவும், இனப்பிரச்சனை தொடர்பாகவும் தெளிவான நிலைப்பாட்டை முன்வைத்தது.

ஒருபுறம், மாபெரும் மனிதவேட்டை நிகழ்ந்து கொண்டிருக்கும் வேளையில், மறுபுறம் தேர்தல் நிகழ்ந்துள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அயல் நாடொன்றில் நிகழ்ந்த தேர்தலாகவே இது உள்ளது.●



www.tamilarangam.net



# பாறையிலோர் உருவப்படம்

## பப்லோ நெருடா

(சிலே தேசத்தவர். சமகால உலகக் கவிஞர்களில் முக்கியமான இவர் சில வருடங்களுக்கு முன்பு காலமானார். ராணுவச்சதியிற் கொலையுண்ட ஜனாதிபதி சல்வடோர் அலண்டேயின் நெருங்கிய நண்பர் இவர்.)

ஓ, அவனை நன்றாக அறிவேன்
அவனுடனும் அவனுடைய தங்கமான
உறுதியான தன்மையுடனும்
வருடக்கணக்கிற் பழகியிருக்கிறேன்.
அவன் களைப்புற்ற ஒரு மனிதன்
தன் தந்தை, தாய்
தன் மக்கள், மருமக்கள்
கடைசியாக வந்த சம்பந்திகள்
தன் வீடு, கோழிகள்
பாதி திறந்த சில புத்தகங்கள்
அனைத்தையும் பரஹுவாயில் விட்டு வந்தவன்
அவனை வாசலுக்கு அழைத்தனர்
கதவைத் திறந்ததும்
அவனைப் பொலிஸார் கொண்டு சென்றனர்
அவர்கள் அவனை உதைத்த உதையில்
பிரான்ஸிலும் டென்மார்க்கிலும் ஸ்பெயினிலும் இத்தாலியிலும்
திரிந்தபோது இரத்தங் கக்கினான்
அவன் இறந்துபோனான்
அவன் முகத்தைக் காண்பதை நான் நிறுத்தினேன்
அவனது உன்னதமான மௌனத்தை நான் கேட்பது
முடிவடைந்தது
திடீரென ஒரு நாள்
வெண்பனி பரவக் கடுமையாகக் காற்றடித்த
ஒரு இரவில்

மென்மையான போர்வையுடன் மலைமீது
குதிரைமேல் அமர்ந்து, அங்கே
நெடுந்தொலைவு நோக்கினேன்
அங்கே என் நண்பன் -
அவனது முகம் கல்லில் உருவாகியிருந்தது
அவனது உருவம்
கொடிய பருவநிலைக்குப் பணியமறுத்தது
அவனது நாசியிற்
காற்று
அல்லலுக்குள்ளானோரின் முனகல்களைத் திணித்தது
நாடு கடத்தப்பட்டவன்
அங்கு தரைக்கு வந்தான்
கல்லாய்ச் சமைந்து
தன் தாய்நாட்டில் வாழ்கிறான்.

(தமிழில்: மணி)

www.tamilarangam.net

மலையாள மூலம்

# பூனையின் வாசனை

கல்கத்தாவுக்கு வந்து ஒரு வாரம் கழிந்த பின்தான் அந்த விளம்பரத்தை அவள் காலை நாளிதழில் பார்த்தாள். பார்வைக்கு லட்சணமும் புத்திக் கூர்மையும் உள்ள ஓர் இளம்பெண் எங்கள் மொத்த வியாபாரத்திற்கு பொறுப்பாளராகப் பணியாற்ற தேவை. துணிகளின் நிறங்களைப் பற்றியும் புதிய டிசைன்களைக் குறித்தும் ஓரளவு விவரங்கள் தெரிந்திருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தமது கைப்பட எழுதிய விண்ணப்பத்துடன் எங்கள் அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

ஜன நெரிசலான ஒரு தெருவில் அந்த அலுவலகக் கட்டிடம் அமைந்திருந்தது. அவள் இளம் நீல பட்டுப் புடவையும், வெள்ளை கைப்பை சகிதமாக அந்தக் கட்டிடத்தை அடைந்தபோது மணி பதினொன்று ஆகிவிட்டது. அது ஏழு அடுக்குகளையும் இருநூற்றுக்கு மேற்பட்ட அறைகளையும், எண்ணற்ற வராந்தாக்களையும் கொண்ட பிரமாண்டமான கட்டிடம். நான்கு லிஃப்டுகள். ஒவ்வொரு லிஃப்டின் முன்பும் ஓர் ஜனத்திரள். தடித்த வியாபாரிகள் தோல்பையைக் கையில் சுருட்டி வைத்து நிற்கும் ஊழியர்கள் இத்யாதி. ஒரு பெண்ணைக் கூட அவள் அங்கே பார்க்கவில்லை. அதற்குள் இருந்த தைரியமும் குறைந்து விட்டது. தன் கணவரின் ஆலோசனையைப் பொருட்படுத்தாது இந்த வேலைக்கு வராமலே இருந்திருக்கலாமென அவளுக்குப் பட்டது. அவள் அங்கிருந்த ஒரு சிப்பந்தியிடம் கேட்டாள்:

'டெக்ஸ்டைல்ஸ் இன்டஸ்ட்ரீஸ் எந்த மாடியில்?' 'முதல் மாடியென்று நினைக்கிறேன்'. என்றான் அவன். எல்லா கண்களும் தன் முகத்தில் பதிவதாக அவருக்குத் தோன்றியது. ச்சே, வராமலே இருந்திருக்கலாம். வியர்வையில் மூழ்கி நிற்கும் இந்த ஆண்களின் நடுவே நான் எதற்கு வந்தேன்? ஆயிரம் ரூபாய் கிடைத்தாலும் இந்தக் கட்டிடத்திற்குள் நாள் தோறும் வேலைக்கு வந்து போக என்னால் முடியாது. ஆனால் உடனடியாகத் திரும்பி போகவும் அவளால் இயலவில்லை.

அவளது முறை வந்தது. லிஃப்டில் ஏறி, அருகில் நிற்பவர்களின் உடம்புகளில் உரசாமலிருக்க அஞ்சி ஓர் ஓரத்தில் குறுகி நின்றாள்.

முதல் மாடியில் இறங்கியதும் அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். நாற்புறமும் பரந்து கிடக்கும் வராந்தாவிலிருந்த ஒவ்வொரு அறைக்கும் பெரிய கதவுகள். ஒவ்வொரு கதவின் வெளியேயும் ஒரு போர்டு.

'இறக்குமதி ஏற்றுமதி'.

'மது விற்பனை' இப்படிப் பல போர்டுகள். ஆனால் எவ்வளவு நடந்தும், எத்தனை கதவுகளைக் கடந்த பின்னும் தான் விசாரித்தப் போர்டை அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்குள்ளாக அவளது கையெல்லாம் வியர்த்துவிட்டது. ஒரு அறையிலிருந்து திடுதிப்பென்று வெளியே வந்தவனிடம் அவள் கேட்டாள்: '...டெக்ஸ்டைல்ஸ் கம்பெனி எங்கு இருக்கிறது?'

அவன் தன் உள்வாங்கிய சிவந்த கண்களால் அவளை முழுவதுமாய் ஆராய்ந்தான். பிறகு சொன்னான். 'எனக்கு தெரியாது. ஆனால் என்னோடு வந்தால் சிப்பந்தியிடம் விசாரித்து உங்களுக்கு சொல்கிறேன்.'

அவன் உயரம் குறைந்த ஒரு நடுத்தர வயது மனிதன். அவனது கைநகங்களில் அழுக்கு நிறைந்திருந்தது. அதைப் பார்த்தோ என்னவோ அவளுக்கு அவனுடன் செல்லப் பிடிக்கவில்லை.

'நன்றி, நான் இங்கே கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்.'

அவள் விரைந்து சென்று ஒரு திருப்பத்திலிருந்த மற்றொரு வராந்தாவை அடைந்தாள். அங்கும் மூடப்பட்ட பெரிய கதவுகளைக் கண்டாள். DYING என்று அவ்விடத்தில் எழுதி தொங்கவிடப்பட்டிருந்தது. ஸ்பெல்லிங் தவறைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது. 'துணிகளுக்குச் சாயம் ஏற்றுவதற்கு பதில் இங்கே மரணமா நடக்கிறது? எதுவானாலும் அங்கு கேட்டுப் பார்க்கலாமென உத்தேசித்து கதவைத் தள்ளி திறந்தாள். உள்ளே காலியாகக் கிடக்கும் ஒரு விசாலமான தளத்தை அவள் கண்டாள். இரண்டோ, மூன்றோ நாற்காலிகள், ஒரு கண்ணாடியிட்ட மேசை அவ்வளவுதான். அவள் உரக்கக் கேட்டாள்:

'இங்கே யாருமில்லையா?'

உள் அறைகளுக்குரிய கதவுகளின் திரைச்சீலைகள் லேசாய் அசைந்தன. அவள் தைரியத்தை வரவழைத்து அறையின் நடுவிலிருந்து நாற்காலியில் அமர்ந்தாள். சற்றே ஆசுவாசம் இல்லாமல் ஒரு அடிகூட நடக்க முடியாதென்று அவளுக்குத் தோன்றியது. மேலே மின் விசிறி சுழன்று கொண்டிருந்தது. என்ன அலுவலகம் இது. அவள் வியப்படைந்தாள். கதவைத் திறந்து வைத்து, மின்விசிறியைச் சுழல விட்டு இங்கிருந்தவர்கள் எங்கு போனார்கள்.

துணிகளுக்குச் சாயம் ஏற்றுபவர்கள் எனவே இவர்களுக்கு நான் விசாரிக்கும் அலுவலகம் எங்கெனத் தெரிந்திருக்கக் கூடும். தனது கைப்பையைத் திறந்து, கண்ணாடியை எடுத்து முகத்தைப் பார்த்தாள். பார்வைக்கு லட்சணமாக இருப்பதாய் உறுதிப்படுத்திக் கொண்டாள். எண்ணூறு ரூபாய் கேட்டுப் பார்க்கலாமே? தன்னைப் போல ஓர் ஊழியர் அவர்களுக்குக் கிடைப்பது அவர்களின் அதிர்ஷ்டமே. படிப்பு, பட்டம், வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததன் மூலம் கிட்டிய உலக அனுபவம் தனக்குண்டு...

ஒரு பாட்டிலின் மூடியை இழுத்துத் திறக்கும் ஓசையைக் கேட்ட அவள் திடுக்கிட்டு எழுந்தாள். ச்சே, நானொரு முட்டாள். கொஞ்சம்கூட பழக்கமில்லாத இடத்தில் தூங்குவதா? அவள் பார்வையைத் திருப்பி சுற்றிலும் பார்த்தாள். அவளின் எதிர்வசத்தில் ஒரு நாற்காலியில் அமர்ந்தவாறு ஓர் இளைஞன் சோடாவில் விஸ்கியை ஊற்றிக் கொண்டிருந்தான். அவனது புஷ் ஷர்ட் வெண்ணெய் நிறத்தாலான டெரிவினில் செய்யப்பட்டிருந்தது. அவனது கைவிரல்களின் மேற்பகுதியில் தடித்த ரோமங்கள் வளர்ந்திருந்தன. உறுதியான அந்தக் கைவிரல்களைக் கண்ட அவள் திடீரென்று பீதியுற்றாள். நான் ஏன் வந்தேன் இந்தப் பேய் வீட்டிற்கு.

அவன் தலைநிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவனது முகம் ஒரு குதிரையைப் போல நீண்டிருந்தது. அவன் கேட்டான்: 'சுகமான தூக்கமா?'

பிறகு அவளது பதிலைப் பொருட்படுத்தாமல் கிளாஸை உயர்த்தி அதிலிருந்த திரவம் முழுவதையும்

www.tamilarangam.net

குடித்துத் தீர்த்தான்.

'தாகம் எடுக்கிறதா?' அவன் கேட்டான். அவள் இல்லையென்று தலையசைத்தாள்.

'...டெக்ஸ்டைல்ஸ் கம்பெனி எங்கே என்று தெரியுமா? உங்களுக்குத் தெரிந்திருக்குமென நினைத்தேன். நீங்கள் துணிகளுக்குச் சாயம் ஏற்று பவர்கள்தானே?' என்றாள். அப்புறம் ஒரு மரியாதைக்காகச் சிரித்தாள். அவன் சிரிக்கவில்லை. அவன் மீண்டும் விஸ்கியை கிளாசில் ஊற்றினான். சோடாவைச் சேர்த்தான். பேசிக் கொண்டிருப்பதற்கு எவ்வளவோ நேரம் உள்ளது என்ற முக பாவனையில் அவன் தென்பட்டான்.

அவள் கேட்டாள்: உங்களுக்குத் தெரியாதா? பொறுமையிழந்த அவள் எவ்வாறேனும் அங்கிருந்து வெளியேறி வீட்டிற்குத் திரும்பினால் போதுமென்று கூட நினைத்தாள்.



அவன் சட்டென்று சிரித்தான். மிகச் சிறியதாய் இருந்தன அவன் உதடுகள். அவை அந்தச் சிரிப்பில் அகோரத்தை கலந்தன.

'என்ன அவசரம்?' அவன் கேட்டான். 'மணி பதினொன்றே முக்கால் தானே ஆகிறது?'

அவள் கதவை நோக்கி நடந்தாள். 'உங்களுக்குத் தெரிந்திருக்குமென்று நினைத்தேன். நீங்களும் துணி வியாபாரத்தில் சம்பந்தப் பட்டவர்தானே'.

'என்ன சம்பந்தம்? நாங்கள் துணிகளுக்குச் சாயம் ஏற்றுபவர்கள் அல்ல? போர்டை படிக்கவில்லையா? DYING என்று'.

'அப்படியென்றால்...?'

'அதே அர்த்தம்தான். மரணம் என்று கேட்டதில்லையா? சுகமாகச் சாவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்து தருவோம்'.

அவன் நாற்காலியில் சாய்ந்து படுத்து கண்களை இறுக்கி அவளைப் பார்த்துச் சிரித்தான். அந்த வெளிறிய புன்னகை திடுமென்று தனது கண்களில் வியாபிப்பதைப் போல அவள் உணர்ந்தாள். அவளுடைய பாதங்கள் நடுங்கின.

அவள் கதவை நோக்கி ஓடினாள். ஆனால் கதவைத் திறக்க அவளின் வியர்த்துப்போன கைகளால் முடியவில்லை. அதற்குள்ளாக அவளின் கண்கள் நிரம்பி விட்டன.

'தயவுகூர்ந்து கதவைத் திறந்து விடுங்கள்' என்றாள். 'நான் வீட்டிற்குப் போகவேண்டும். என் குழந்தைகள் காத்திருப்பார்கள்'. அவன் தன் வார்த்தைகளை மதித்து, கொடிய எண்ணங்களை விலக்கி, தனக்கு உதவ வருவான் என எண்ணினாள்.

'தயவு செய்து திறந்துவிடுங்கள்' மறுபடியும் கெஞ்சினாள். அவன் திரும்ப திரும்ப விஸ்கியை அருந்தினான். திரும்ப திரும்ப அவளைப் பார்த்துச் சிரித்தான்.

அவள் கதவைத் தட்டத் தொடங்கினாள். 'ஐய்யோ எனக்கு சதி செய்கிறார்களே?' அவள் அலறியபடி கேட்டாள்: 'நான் ஏன் குற்றம் செய்தேன்?'

அவளுடைய அழுகை சில நிமிடங்களுக்குப் பின் நின்றது. அவள் களைப்பில் துவண்டு கதவருகே வெறும் தரையில் விழுந்தாள்.

அவன் எவ்வித மூர்க்கமுமின்றி ஒரு சன்னக்குரலில் எதைஎதையோ பேசிக் கொண்டிருந்தான். சில வார்த்தைகள் மட்டும் அவளுக்குக் கேட்டது:

"... முன்பு ஒரு குளிர்காலத்தில் என் படுக்கையறைக்குள் பறவையொன்று வந்து அகப்பட்டுக்

www.tamilarangam.net

# சோவியத்தின் தோல்வி மேற்கின் தோல்வி சீனாவின் வெற்றி

உலகில் நிகழும் மாற்றங்கள் சில புரிந்துகொள்ள முடியாதனவாக உள்ளன.

சோவியத் யூனியனில் போலிக் கொம்யூனிச ஆட்சியினால் அங்கு பொருளாதாரம் அதலபாதாளத்தில் விழுந்து, இன்று சோவியத் சோஷலிச அமைப்பும் சிதைந்து நாடும் சின்னாபின்னப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றியே விளம்பரம் செய்து தங்களை உயர்த்திக் காட்டிய மேற்கு நாடுகளும், அமெரிக்காவும் இன்று பெரும் பொருளாதாரச் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றன. அதுமட்டுமன்றி இதுவரை தொடர்ச்சியான வளர்ச்சியைக் காட்டிவந்த ஜப்பானிலும் பொருளாதாரம் கீழிறங்கத் தொடங்கியுள்ளது.

இந்த நிலைகளில் சீனாவில் மட்டும் பொருளாதாரம் வளர்ச்சிப் போக்கைக் காட்டுகிறது. இது பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கிறது. உலகின் சனத்தொகையில் ஏறத்தாழ 20%ஐக் கொண்ட சீனா, 10% வளர்ச்சியை எட்டிப் பிடித்துள்ளது. (உலகின் துணி,

---

கொண்டது. நீலம் கலந்த சாம்பல் நிறம். உன் புடவையின் நிறம். அது ஜன்னல் கண்ணாடியைத் தன் அலகினால் கொத்திப் பார்த்தது. சிறகுகளை அடித்து கண்ணாடியை உடைக்க முயற்சித்தது. அது பெரும் அவதியுற்றது! பிறகென்ன? களைப் படைந்து துவண்டு கீழே விழுந்த அதை நான் என் பூட்ஸ் காலால் மிதித்துத் தேய்த்தேன்'.

சில நிமிடங்கள் நீண்டு நின்ற மௌனத்திற்குப் பின் அவன் கேட்டான்: 'மரணத்தின் வாசனை எத்தகையதென்று உனக்குத் தெரியுமா?' அவள் ஏறிட்டு அவனைப் பார்த்தாள். ஆனால் ஒன்றும் பேச நா எழவில்லை. சொல்ல பதில் இல்லாமலில்லை. மரணத்தின் வாசனை, இல்லை. மரணத்தின் விதவித வாசனைகளை என்னைப் போல அறிந்தவர் யார்? அழுகிய புண்களின் வாசனை, பழத் தோட்டங்களின் இனிய வாசனை, சந்தனத் திரிகளின் வாசனை... இருள் நிலவிய ஒரு சிறிய அறையில் வெற்றுத் தரைமீது படுக்கையில் கிடந்தபடி அவளுடைய அன்னை எந்த கௌரவமும் கலவாத குரலில் சொல்லிக் கொண்டிருந்தாள்... 'என்னால் முடியவில்லை மகளே... வலி இல்லை... ஆனாலும் முடியவில்லை...'

அம்மாவின் கால் புண்கள் மீது தடித்த வெள்ளைப் புழுக்கள் நெளிந்துக் கொண்டிருந்தன. இருந்த போதிலும் அம்மா சொன்னாள்: 'வலி இல்லை...'

பிற்பாடு அப்பா. நீரிழிவு நோயாளியான அப்பாவுக்குத் திடீரென்று அயர்வு வந்தபோது அந்த அறையில் பழத் தோட்டங்களிலிருந்து ஒரு காற்று வந்து சேர்ந்த தாய் அவளுக்குத் தோன்றிற்று. அவ்வாறு அந்த அறையில் இனிமையாய் வீசிய வாசனை... அதுவும் மரணமாய் முடிந்தது...

அவையனைத்தும் சொல்ல வேண்டுமென்று அவள் நினைத்தாள். ஆனால் நாக்கு சக்தி முழுவதையும் இழந்து விட்டிருந்தது.

அறை நடுவே அமர்ந்திருந்த இளைஞன் அப்போதும் ஒவ்வொன்றாகப் பேசிக் கொண்டிருந்தான்.

உனக்கு தெரியாதல்லவா? நான் சொல்லித் தருகிறேன். பறவை இறகுகளின் வாசனைதான் மரணத்திற்கு... உனக்கது தெரியவரும், வெகு விரைவில், இப்போதே வேண்டுமா? எது உனக்கு மிகவும் பிடித்தமான நேரம்? மேலிருந்து பார்க்கும் சூரியன் முன்னே லஜ்ஜையின்றி இந்த உலகம் நிர்வாணமாய் கிடக்கும் நேரமா? அல்லது மாலை வேளையா?... நீ எத்தகைய பெண்? தைரியம் உள்ளவளா இல்லாதவளா...?

அவன் நாற்காலியிலிருந்து எழுந்து நின்று அவளருகே வந்தான். அவனுக்கு நல்ல உயரம். அவள் பேசினாள்:

'நான் போக அனுமதிக்க வேண்டும். நான் இங்கு வர ஒருபோதும் உத்தேசிக்கவில்லை'.

'நீ பொய் சொல்கிறாய். நீ எத்தனை தடவை உத்தேசித்தாய் இங்கு வந்து சேர. இந்த மிக இனிய முடிவுக்காக நீ எத்தனை தரம் ஏங்கிக் கொண்டிருந்தாய். மென்மையான அலைகள் நிறைந்த, தீர்க்கமாய் மூச்செறியும் கடலில் சென்றுவிழ, அலட்சியமாய் போய் லயிக்க மோகிக்கும் நதி போல் அன்றோ நீ? சொல், அன்பே... உனக்கு மோகமில்லையா அந்த முடிவற்ற நேசத்தை அனுபவிக்க?'

'நீங்க யார்?'

அவள் எழுந்து அமர்ந்தாள். அவனது கை விரல்களுக்கு திகிலூட்டும் ஓர் ஆகர்ஷணம் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

'என்னைப் பார்த்ததில்லையா?'

'இல்லை'.

'நான் உன்னருகே பலமுறை வந்

www.tamilarangam.net

பாதணி விற்பனையில் 10%ஐ சீனா செய்கிறது).

ஆனால் ஜப்பான் என்றுமில்லாதளவு கடந்த வருடம் மிகக் குறைந்த வளர்ச்சியைக் கொண்டுள்ளது (4.7%).

பொதுவாக உலகப் பொருளாதாரத்தில் பலத்த வீழ்ச்சியே கடந்த வருடம் அவதானிக்கப் பட்டது. ஆனால் தென்கிழக்காசிய நாடுகள் வளர்ச்சியையே காட்டின.

1992இல் முழு ஆசிய நாடுகளது வளர்ச்சி 7.1% ஆகும். இது 1993இல் 7.6%ஆக உயர்ந்துள்ளது. ஆனால் தென்னாசிய நாடுகளில் பொதுவாகப் பொருளாதார வளர்ச்சி காணப்படவில்லை. இலங்கை பற்றிக் கேட்கத் தேவையில்லையே.

சோ. குணதாஸ்

## நான்காவது பரிமாணம்

கனடாவில் இருந்து வெளியாகும் கலைஇலக்கிய இதழ். நீண்ட இடைவெளிக்குப் பின் காலாண்டிதழாக மீண்டும் வருகிறது.

தொடர்புகள்: 1565 Jane st/ Post box 34515/ Toronto, Ontario/ Canada M9N 1 RO.

## ஓசை

பிரான்சில் இருந்து கடந்த நான்கு வருடங்களாக வெளிவரும் காலாண்டுக் கலை இலக்கிய இதழ்.

தொடர்புகள்: 'Oosai'/ C.L.A.L.P/ B.P:701 - 09/ 75425 PARIS Cedex / France

துள்ளேன். ஒருமுறை நீ வெறும் பதினொன்று வயது சிறுமியாக இருந்தாய். மஞ்சள் காமாலை பிடித்து, படுக்கையிலிருந்து தலைதூக்க முடியாமல், நீ படுத்திருந்த காலம். அன்று உன் அன்னை ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்தபோது நீ பேசினாய், அம்மா, நான் மஞ்சள் பூக்களைப் பார்க்கிறேன். இல்லா இடங்களிலும் மஞ்சள் பூக்கள். மஞ்சள் அரளிப் பூக்கள் தெரிகின்றன. எங்கும் மஞ்சள் பூக்களே... நினைவு இருக்கிறதா அது...'

அவள் தலையாட்டினாள்.

'உன் விழிகளுக்கு மட்டும் தெரிந்த அந்த மஞ்சள் மலர்களுக்கு நடுவே நான் நின்றிருந்தேன். உன் கரம் பிடித்து நீ சேரவேண்டிய இடத்தில் உன்னைச் சேர்ப்பதற்கு... ஆனால் நீ அன்று வரவில்லை. என் அன்பைப் பற்றி நீ அன்று அறிந்திருக்கவில்லை. நானே உனதும் அனைவரதும் வழி காட்டியென நீ தெரிந்திருக்கவில்லை...'

'அன்பா, இதுவா அன்பு?' அவள் கேட்டாள்.

'ஆமாம், அன்பின் முழுமையைக் காட்டித் தர எனக்கு மட்டுமே இயலும். எனக்கு நீ ஒவ்வொன்றாகப் பார்வைக்கு வைப்பாய்... சிவந்த இதழ்கள், அசைந்தாடும் கண்கள், வடிவழகான மேனி... சகலமும்– ஒவ்வோர் முடிக்கற்றையையும் நீ பார்வைக்கு வைப்பாய். எதுவும் உனதாகாது. பின் இந்த பலிக்குப் பிரதிபலனாக நான் உனக்கு விடுதலை அளிப்பேன். நீ ஒன்றுமில்லாது ஆவாய். எனினும், சகலமும் ஆவாய் நீ. கடலின் ஓரத்திலும் நீ இருப்பாய். மழை நாட்களில் காளான்கள் முளைக்கும் பழைய மரங்களிலும் நீ சஞ்சரிப்பாய். பிரசவ வேதனை அனுபவிக்கும் வித்துகள் மண்ணின் அடியில் கிடந்து விம்மும் போது, உனது அழுகை அந்த விசும்பலில் உயரும். நீ காற்று ஆவாய். நீ மழை துளிகள் ஆவாய். நீ மண் துகள்கள் ஆவாய். நீயே இவ்வுலகின் சௌந்தர்யம்...'

அவள் எழுந்து நின்றாள். தனது சோர்வு முற்றிலும் தீர்ந்துவிட்டதாக அவளுக்குத் தென்பட்டது. புதிதாய் கிடைத்த தைரியத்தோடு அவள் பேசினாள்.

'இதெல்லாம் சரியாக இருக்கலாம். ஆனால், நீங்கள் ஆள்மாறி பேசுகிறீர்கள். எனக்கு சாவதற்கு நேரமாகவில்லை. நானொரு இருபத்தி ஏழு வயதுப் பெண். கல்யாணம் ஆனவள். ஓர் அன்னை. எனக்கு நேரமாகவில்லை. நான் ஒரு வேலை நிமித்தமாக வந்தேன். இப்போது மணி பனிரெண்டரையோ என்னவோ ஆகி இருக்கும். நான் வீட்டிற்குப் போக வேண்டும்!'

அவன் எதுவும் பேசவில்லை. கதவைத் திறந்து அவள் வெளியே செல்ல அனுமதித்தான். அவள் வேகமாய் லிஃப்டைத் தேடி அங்குமிங்கும் நடந்தாள். தனது காலடிகள் அவ்விடத்தில் பயங்கரமாக ஒலிப்பதாய் அவள் உணர்ந்தாள்.

லிஃப்டின் பக்கத்தில் சென்றதும் நின்றாள். அங்கே அதை இயக்கும் சிப்பந்தியைக் காணோம். இருப்பினும் அவள் அதிலேறி கதவை மூடி ஸ்விட்சை அழுத்தினாள். ஓர் அதிர்வின் ஆரம்ப பேராசையோடு அது சர்ரென்று உயர்ந்தது. தான் ஆகாயத்தில் இருப்பதாகவும் இடி முழங்குவதாகவும் அவளுக்குத் தோன்றிற்று. அப்போதுதான் அவள் லிஃப்டின் உள்ளே மாட்டப்பட்டிருந்த போர்டைப் பார்த்தாள்.

'லிஃப்ட் பழுதடைந்துள்ளது. அபாயம்'.

எங்கும் இருட்டுமயம். இரைச்சலாய், கர்ஜிக்கும் ஒரே இருட்டு. பிற்பாடு அவளுக்கு அதிலிருந்து வெளியேற வேண்டிய சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. ●

ஆகஸ்ட் 1992 ● சுபமங்களா

www.tamilarangam.net

# கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு

தொடர்ச்சியாகத் திட்டமிட்டுத் தமிழ்மக்களை ஏமாற்றிவரும் இலங்கை அரசின் மற்றுமொரு செப்படி வித்தையே பாராளுமன்றத் தெரிவுக்குழு. தமிழ் மக்களையும், அவர்களது விடுதலைக்கான போராட்டத்தையும் ஒழித்துக்கட்டுவதே தனது முதற்பணியாகக் கொண்டுள்ள இலங்கையின் பேரினவாத அரசு, தனது இனப்படுகொலையை மூடிமறைக்கவும், சமாதானத்தின்மீது தீராத தாகம் கொண்டவர்களாக உலகுக்குக் காட்டிக்கொள்ளவும் உருவாக்கிய அமைப்பே பாராளுமன்றத் தெரிவுக்குழு. நாட்டு மக்களையும், உலகையும் ஏமாற்ற இலங்கை அரசு எடுத்துவரும் இத்தகைய சூழ்ச்சிகளை அம்பலப்படுத்துவதில் சகல தமிழ் அமைப்புகளுமே தவறிவிட்டன.

இலங்கையில் சகல இன மக்களையும் பாதிக்கும் இனபபிரச்சனைக்கு எதுவித அரசியல் ரீதியான தீர்வையும் முன்வைக்கத் திராணியற்ற பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை, வடக்கு கிழக்கு இணைந்த அவர்களது தாயக உரிமை என்பவற்றை மறுப்பதிலேயே முக்கிய கவனம் எடுத்து வருகிறது.

வரலாற்றைச் சற்றுப் பின்னோக்கிப் பார்ப்பின், வடக்கு கிழக்கைத் துண்டாடுவதில் ஆட்சியாளர்கள் எவ்வளவு தூரம் திட்டமிட்டுச் செயலாற்றியுள்ளனர் என்பது புரியவரும்.

1948க்குப் பின் தொடங்கிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக கிழக்கு மாகாணத்தின் சிங்கள மக்களது எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது. 1977இல் மேற்கொள்ளப்பட்ட துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் காரணமாக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் துரிதமயப்படுத்தப் பட்டுவருகின்றன. இதனால் மணலாறு வெலிஓயாவாகவும், அம்பாறை திகாமடுல்ல ஆகவும் மாறிவிட்டன. மேலும் திருமலையில் தமிழ் மக்கள் சிறுபான்மையினராக ஆக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலை கிழக்கின் ஏனைய பகுதிகளுக்கும் வேகமாகப் பரவி வருகிறது.

அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கும், மறுபுறம் அரசின் பயங்கரவாதத்திற்கும் பயந்து கிழக்கு மாகாணத்தில் பூர்வீகமாக வாழ்ந்துவரும் தமிழ் முஸ்லிம் மக்கள் உள்ளனர்

சுவடுகள்

மாத இதழ்

ஸ்தாபிதம்: புரட்டாதி'88

www.tamilarangam.net

இவ்வாறு திட்டமிட்டுத் தமிழ் முஸ்லிம் மக்களை ஒடுக்கிவரும் இலங்கை அரசு, வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாக கிழக்கில் மட்டும் சர்வசன வாக்கெடுப்பை நிகழ்த்தினால், அது தமிழ்மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும், முஸ்லிம் மக்களது விடுதலைக்கும் எதிராக அரசு செய்யும் நடவடிக்கைகளுக்குப் பெரும் அங்கீகாரமாகவே இருக்கும்.

கடந்த சில வருடங்களாகத் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே இனமுரண்பாடுகள் கூர்மை அடைந்து வந்துள்ளன. கிழக்கில் முஸ்லிம் மக்கள் மீதான தமிழ் இயக்கங்களது பயங்கரவாதமும், முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் தமிழ் மக்கள்மீது நடத்தும் பயங்கரவாதத் தாக்குதல்களும், பாரம்பரியமாக வடக்கில் வாழ்ந்துவந்த முஸ்லிம் மக்கள் புலிகளால் வெளியேற்றப் பட்டமையும் இரு இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் கூர்மை அடையவும் தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் தொடர்பாக முஸ்லிம் மக்களிடையே சந்தேகம் வளரவும் வழிவகுத்துள்ளன.

வடக்கு கிழக்கில் வாழும் சகல சிறுபான்மை இன மக்களது அரசியல் கலாசார மத உரிமைகள் முழுமையாக அங்கீகரிக்கப்படல் வேண்டும். குறிப்பாக வடபகுதி மக்கள் ஆள்வோராகவும், கிழக்கு மக்கள் ஆளப்படுவோராகவும் இருந்து வருவதாகவும் நிலவும் குற்றச்சாட்டு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இதில் உண்மை எவ்வளவுதூரம் என்பது ஒருபுறமிருக்க இத்தகைய குற்றச்சாட்டு ஏற்படாது பார்த்துக்கொள்வது அவசியம்.

தமிழ் முஸ்லிம் மக்களிடையே தோன்றியுள்ள முரண்பாடுகள் அமைதியான முறையில் தீர்வு காணப்பட வேண்டியது இன்றைய தேவை. இந்நிலையில் இனப்பிரச்சனையுடன் கிழக்கு மாகாண சர்வசன வாக்கெடுப்பைத் தொடர்புபடுத்தக் கூடாது என்று அமைச்சர் ஹமீத் தலைமையிலான முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவெடுத்திருப்பது சற்று நம்பிக்கை தருகிறது. இதே நிலைப்பாட்டில் சகல முஸ்லிம் அரசியல்வாதிகளும் உறுதியாக இருப்பது, தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் வளர்க்க உதவும்.

**சுவடுகள்**

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

www.tamilarangam.net

தமிழ் - முஸ்லிம் மக்களது புரிந்துணர்வே, இலங்கையில் தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்துவரும் பேரினவாத ஆட்சியாளர்களிடம் இருந்து விடுதலைபெற உதவும் என்பதை இருசாராரும் புரிந்துகொள்வது அவசியம்.

'மக்கள் யுத்தம்'

கடந்த இதழ் வெளிவந்தபின் நிகழ்ந்த ஆயுத மோதல்களில் மிக அதிக பொதுமக்களைப் பலிகொண்ட மோதலாக, தாண்டிக்குளம் தடைமுகாம் அருகே நிகழ்ந்த மோதல் உள்ளது. இந்த மோதல் தமிழ் மக்களிடையே இருந்து தோன்றிய இரு இயக்கங்களான புலிகள் - புளொட் என்பவற்றுக்கு இடையில் நிகழ்ந்துள்ளது. மக்களைக் காப்பாற்றுவதற்காகவே தாம் போராடுகிறோம் என்று கூறிக்கொண்டு, ஆயுதமேந்தி நிற்கும் இரு குழுக்களின் இந்த மோதலில் அதிகளவில் பொதுமக்களே இறந்தது வேதனை நிறைந்த வேடிக்கை.

இரு தமிழ் இயக்கங்களுக்கு இடையில் மோதல் நிகழ்வது என்பது, தமிழ் மக்களைப் பொறுத்தவரை புதிய ஒன்றல்ல. கடந்த ஆறேழு வருடங்களாக இந்த மோதல்களின் வெவ்வேறு பரிமாணங்களைத் தமிழ் மக்களுடன் உலகமும் கண்டிருக்கிறது. இந்த மோதல்களில் பழிவாங்கப் படுவதும், உயிரிழப்பதும், சேதம் அடைவதும் தமிழ் இளைஞர்களே என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று. இந்நிலையில் இவ்வாறான மோதல்களில் இரு தரப்பினருமே பெரிய வெற்றிகளைக் கண்டதாக அறிவிப்பதும், பலரைத் தாம் பலியெடுத்ததாக எக்காளம் இடுவதும், தமிழரை அழிக்கும் சிங்கள அரசின் நோக்கத்திற்குத் துணைபோவதாகவே இருக்கும்.

முன்னெப்போதும் இல்லாதவாறு இந்த மோதலில் பொதுமக்களை நடுவில் வைத்துக்கொண்டு, அவர்களைப் பணயமாக வைத்து இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டு நடத்தப் பட்டிருக்கிறது. தாம் மக்களைப் பணயமாக வைத்துத் தாக்குதல்களை நடத்துவதில்லை என்ற புலிகளின் கூற்றுக்கு இது நேரெதிரான ஆதாரமாகும். பொதுமக்கள் பணயப்பொருட்கள் அல்ல என்பதைப் பலரும் வலியுறுத்தி வந்தாலும் புலிகள் இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்துவதில்லை. இது

**சுவடுகள்**

சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு
300 குறோணர்கள்

www.tamilarangam.net

மக்களுக்காகவே தாம் ஆயுதம் ஏந்துகிறோம் என்ற அவர்களது கூற்றை நிர்மூலமாக்குகிறது.

அரச படைகளின் காலடியில் கூலிப்படைகளாகப் புளொட் இருந்தமை, புலிகள் தமது தாக்குதலையும், தாக்குதலை நடத்திய விதத்தையும் நியாயப்படுத்த உதவுகிறதேயன்றி வேறெந்தப் பலனையும் தருவதில்லை. புலிகளை அழித்துவிட்டால் தமிழ் மக்களது பிரச்சனை தீர்ந்துவிடும் என்பது போல் நடந்துகொள்ளும் இவர்களது நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு எந்தவித விமோசனத்தையும் தேடித்தரா. இதேபோல், புலிகள் இலங்கை அரசுடன் இணைந்து ஏனைய இயக்கங்களை அழித்தபோதும், தமிழ் மக்களுக்கு எந்த லாபமும் ஏற்படவில்லை. பதிலாக ஒவ்வொரு வீதியிலும் துரத்தப்பட்டுத் தமிழ் இளைஞர்கள் பழிவாங்கப்பட்ட காட்சிகளையே அவர்கள் கண்டார்கள். தமிழ் மக்களது போராட்டத்திற்கான நியாயம் சர்வதேச அரங்கில் முற்றிலும் நியாயமற்ற ஒன்றுபோல் காட்டப்பட்டது.

இவ்வாறான விளைவுகளை இன்னும் ஒரு தடவை ஏற்படுத்தப் போகிறோமா என இருதரப்பிரும் சிந்திக்க வேண்டும். இப்போதும் வடக்கில் வாழும் தமிழ்மக்கள் கொழும்புக்கு வரவேண்டிய தேவைகள் உள்ளன. ஏற்கனவே ஒழுங்கான பாதை இல்லாமல், கிளாலியில் உயிரைக் கையில் பிடித்தபடி பயணம் செய்யும் பயணிகளுக்கு தடைமுகாம்கள் இன்னும் சிக்கல்களை ஏற்படுத்துவன. இவ்வாறான நெருக்கடிகளில் தவிப்பவர்களுக்கு ஆறுதலாக எவரும் இல்லை. மேலும் மேலும் சிக்கல்களைத் தோற்றுவிப்பவர்களாகவே அனைத்துத் தரப்பினரும் நடந்துகொள்கின்றனர்.

தமிழ் மக்கள் தமது விடுதலையைத் தேடிய பயணத்தின் பல கசப்பான அனுபவங்களை காலம்காலமாக அனுபவித்து வருகின்றனர். ஆயுதம் தூக்கியதன்மூலம் தமிழ் அரசியல் வேறு திசைகளை நாடத் தொடங்கியதுடன், தமிழ் மக்களை அழிக்கும் வகைகளையும் ஏற்படுத்தி வருகிறது. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும அனைவரும், மக்களைப் பணயம் வைத்து யுத்தம் நிகழ்த்தாமல், மக்களைப் பாதுகாப்பதில் உரிய கவனத்தைச் செலுத்தல் வேண்டும். இல்லையெனில் மக்கள் இவர்களைப் பாதுகாக்க மாட்டார்கள்.

சுவடுகள் 46, 47
வைகாசி - ஆனி'93

சுவடுகள்

முகவரி:
Herslebs gate 43,
0578 Oslo
Norway

www.tamilarangam.net

துருவச்சி

**புரியாத புதிர் 19**

**கேள், எதையும் கேள்வியாககு**

சென்றமுறை கவிராயர் சொன்ன விடயம் பலரைச் சிந்திக்க வைத்திருந்தது. பலர் என்னிடம் இதுபற்றிச் சொன்னார்கள்.

"இந்த விசயத்தை நான் இதுவரைக்கும் யோசிக்கேல்லை"

"அதுதானே தமிழ் தமிழ் எண்றம், தமிழரைக் காக்கப் போராடுறம், தமிழீழம் எடுக்கப் போறம், பிறகேன் விளங்காத மொழியிலை கடவுளைக் கும்பிட வேணும்?"

"இதுவரைக்கும் எங்களை இப்பிடி நல்லாத்தான் பேய்க்காட்டிப் போட்டாங்கள்"

இப்படி அடுக்கடுக்காகப் பலரது கருத்துகள் இருந்தன. இப்படித் தமிழரைச் சிந்திக்கவைத்த கவிராயரைக் கட்டிப்பிடித்து ஒரு முத்தம் கொடுக்க வேண்டும் போலிருந்தது. அவரைத் தேடிப் போனேன்.



கவிராயர் அமைதியாகப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தார்.

"கவிராயர், நீங்கள் போனமுறை சொன்ன கருத்துக்கு நல்ல வரவேற்பு இருக்கு. நீர் உண்மையில் அறிஞர்தான்!" என ஒரு பீடிகை போட்டேன்.

"ஐயோ தம்பி பெரிய வார்த்தை சொல்றீர், நான் ஒன்றும் அறிஞன் இல்லை. சுயமாகச் சிந்திக்கிறவனுக்கும் சமூகத்திலை அக்கறையும் இருக்கிறவனுக்கும் ஏற்படக்கூடிய, ஏற்படவேண்டிய கேள்வி அது. நாங்கள் எல்லாவற்றையும் ஏன் எதற்கு என்று

www.tamilarangam.net

கேள்விக்கு உள்ளாக்கிப் பார்க்க வேணும். அதுதான் சமூகத்தை, நாட்டை, வளர்ச்சியை நோக்கி, நாகரிகத்தை நோக்கி முன்னேற்றும்" என்றார்.

அவர் சொன்னது எனக்கு நியாயம் என்று பட்டது. உலக வரலாற்றில் அறிஞர்கள் பல விடயங்களைக் கேள்விக்கு உள்ளாக்கியதால்தான் பல கண்டுபிடிப்புகளும், புதுமைகளும், புது விடயங்களும் தோன்றின, தோன்றிக் கொண்டிருக்கின்றன. அப்பிள் ஏன் கீழே

நாம எலலா
விசயங்களையும் ஏன்
எபபடி எணடு
கேளவிககு உடபடுதத
வேணும

விழுகிறது என்று நியூட்டன் யோசித்திராவிட்டால், எத்தனையோ விடயங்கள் கண்டுபிடிக்கப்பட இன்னும் நாட்சென்றிருக்கும். அப்படிக் கேள்விக்கு உட்படுத்திய பல விடயங்கள்தான் இன்று பல கேள்விகளுக்குச் சுகமான விடைகளைத் தருகின்றன. கேள்வி கேட்காமல் எந்த விஞ்ஞானியும், அறிஞனும் இருந்தது கிடையாது.

இன்று நாமும் பல விடயங்களைக்

கவராயாிறகு
ஓரளவு
உலகவிடயஙகள
தெரியம். இவர்
மணிதனை மணிதன்
கொளவதை சரி,
எனறு சொல்பவா
அல்லா.

கேள்விக்குட்படுத்திப் பார்த்தால் நல்லது. முக்கியமாக எமது கலாசாரத்தை, கலைகளை, எமது அறிவு மட்டத்தை, சிந்தனைப் போக்குகளை, எமது போராட்டத்தை............

புரியாத புதிர்20
சினிமாவா
கததரிககாயா?

கவிராயருடன் பலமணிநேரம் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனது தெரியவில்லை.

இன்று ஞாயிற்றுக்கிழமை, என்ன செய்யலாம்? "படத்துக்குப் போகலாமா?" என்று கவிராயரிடம் கேட்டேன். கவிராயர் அபிப்பிராயப்படி இன்றைய தமிழ்ச்சினிமா மட்டரகமானது, மக்களின் சிந்தனையை மழுங்கடிப்பது. நான் இல்லை என்று வாதிடுவதுண்டு. இன்று இவரை எப்படியும் இழுத்துக்கொண்டு ஒரு படம் பார்ப்பது என்று முடிவு செய்தேன்.

"கவிராயர் 'புதியமுகம்' என்றொரு படம் எங்கட நாட்டிலை எடுத்த படமாம். எங்கட நாட்டையாவது பாக்கலாம் தானே?" என்றேன். ஒருமாதிரி வில்லங்கப்படுத்தி அவரை அழைத்துக்கொண்டு படத்துக்குப் போனேன்.

"டிக்கட் என்ன விலை?"

"ஒன்று ஐம்பது குறோணர்கள்" என்றேன்.

"ஐம்பது என்றால் இலங்கையிலை குறைந்தது முன்னூறு ரூபாய்கள். குறைந்தது நூறு படம் பாக்கலாம்; கலரியில் இருந்து" என்று பழைய நினைவில் மூழ்கினார் கவிராயர்.

www.tamilarangam.net



சிரித்துவிட்டு உள்ளே இழுத்துச் சென்றேன். சிறிது தாமதித்து விளம்பர சோதனைகளின் பின் படம் தொடங்கி ஓடத் தொடங்கியது.

காதல், சூடு, பழிவாங்கல் என்று முதல் பத்து நிமிடத்தில் "அசல் தமிழ்ப் படம்!" என்று கவிராயர் என் காதைக் கடித்தார்.

வில்லனைப் பழிவாங்கக் கதாநாயகன் நீச்சல் குளத்திற்கு வருகிறான். வில்லனைச் சுற்றிலும் பெண்கள். "அட பறைச் சிங்களத்திகளைப் போட்டிருக்கிறாங்கள்" என்று அருகில் இருந்து சத்தமாக ஒரு குரல்.

கவிராயர் என்னைத் திரும்பிப் பார்த்தார்.

மீண்டும் அதே குரல் "நல்ல குட்டிகள், த...... நல்லது" என்றது ஆபாசமாக.

கவிராயருக்கு முகம் சுருங்கியது. படம் முடிந்து வெளியே வரும்போது சொன்னார், "சிங்கள மக்களிடம்தான் இனவாதமும்

**சிங்களவரை சொல்லிப் போட்டு நாங்களும் அப்படித் தான் நடக்கிறம்**

அதனால் ஏற்படுத்தப் பட்ட அறிவீனமும் கண்ணை மறைக்குது எண்டா, எங்கட ஆக்களிட்டயும் குறுகிய இனவாதமும் அதனால் ஏற்பட்ட அறியாமையும் நிறைந்திருக்கு. இது ஆரோக்கியம் இல்லை. ஒரு நல்ல எதிர்கால நாட்டையோ சமூகத்தையோ கட்டி எழுப்பமுடியாது. அதுவும் இந்த ஐரோப்பிய நாடுகளுக்கு வந்தும் நாம் திருந்தவில்லை என்றால் எப்போது திருந்தப் போகிறோம்.?" என்றார்.

இந்தக் குறுந்தேசியவாதத்தை நாம் எப்போது கைவிடப் போகிறோம்? நாம் பெருந்தன்மை, பேரறிவாளர்களாக எப்போது மாறப்போகிறோம்.

## விடுதலை வேண்டி.....

*பெருவின் ஒளிரும் பாதை அமைப்பின் தலைவரான அபிமாய்ல் குஸ்மான் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களாகின்றன.*

*குஸ்மானின் விடுதலைக்காகக் குரல்தரும் நண்பர்கள் தம்மை அமைப்பாக்கி சர்வதேச ரீதியில் அவரது விடுதலைக்காகவும், அவரது அடிப்படை உரிமைகள் மீறப்படாதிருக்கவும் போராடி வருகின்றனர். குஸ்மானின் உரிமைகளுக்காகக் குரல்தரும் இவ்வமைப்பு லண்டனில் தனது தலைமை அலுவலகத்தைக் கொண்டியங்கி வருகிறது. இவ்வமைப்பின் பொருளாதாரத் தேவைகள் பெரியன. இவற்றை நிவர்த்தி செய்யும் ஆதரவாளர்களையும், குஸ்மானின் விடுதலையில் அக்கறை கொண்டோரையும் இவ்வமைப்பு உதவிகோருகிறது.*

*இவ்வமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பான செய்திமடல் தொடர்ந்து வெளிவருவதிலும் உரியவர்களுக்குப் போய்ச் சேர்வதிலும் உள்ள பொருளாதார நெருக்கடிகளையாவது தவிர்க்க உதவுமாறு தனது நண்பர்களை அமைப்பு கேட்டுள்ளது.*

*அமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளைப் பெறவும் ஆக்கபூர்வமான உதவிகளை வழங்கவும் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**BCM - IEC,/ Old Gloucester street/ London WC1N 3XX/ United Kingdom.**

*- தேவகி -*

www.tamilarangam.net

# எழுத்துக் கூட்டி வாசித்தல்

• எம். எல். எம். அன்ஸார்.

விழும் நாளையும்.
விமானம் கக்குகிற குண்டுகள் உனது
கைகளைத் தகிக்கும்.
கம்புச் சுள்ளிகளைப் போல
சின்னக் கால்கள் உடையும்.
உடம்பின் வேறு பாகங்களும்.

பால் இல்லை.
பசியின் கத்திக் கீறல்கள் இரைப்பையில்.
நோய்கள்
உனது தோலில் நெருப்புக் கொளுத்துகின்றன.
பூரான் பூச்சிகள் மாதிரி
நீ
இடிந்த சுவர்களின் மண் கட்டிகளுக்கிடையில்
வளர்கிறாய்.

பாலகனே!
பனங் குருத்து மாதிரி நீ.
உனது அழுகையை வாசித்து
கல்லெறிபட்ட குருவியைப் போல
துடி துடிக்கிறது மனது.

உனது வானத்தின்
நிலவு சூரியன் அது எல்லாம்
குண்டுகளைத்தான் பெட்டி பெட்டியாய்க் கொட்டுகின்றன.
வாழ்வு சிதைந்து நீ.

மிஞ்சி இருக்கின்ற
அங்கங்களோடு வளர்ந்து வா,
சிதைக்கின்ற புயல் காற்றின் வலிமையோடு.
மனிதச் சதைகள் சப்பித் தின்று
இரத்தம் குடித்து ஆடுகிற
பேயாட்டத்தை
குதி காலால் மிதித்து நசுக்கு.

ஆனா ஆவன்னா படிக்கலாம் பிறகு.
அண்ணார்ந்து கத்து.
யுத்த விமானங்கள் வெடித்துச் சிதறட்டும்.
தரையில் விழும் வானம் கிழிந்து.

உனது இருப்புத் தெரிகிறது
கறுப்பு வானத்தின் ஒற்றை வெள்ளி மாதிரி.
உனது எல்லோரையும் கூப்பிட்டு
யாழ்ப்பாணத்தை
உனக்கு விரும்பிய மொழியில்
எழுத்துக் கூட்டி வாசி.
மனப்பாடமாக நாள் சுணங்காது.

1993/01/01

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கருத்தரங்கம்

Melbourne Kalai Vattam
P.O. Box 113, Clayton, Victoria 3168
Australia.

மெல்பன் கலை வட்டம் வெளிநாடுகளில் வாழும் தமிழ்ப் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கருத்தரங்கொன்றை இவ்வாண்டின் இறுதிப் பகுதியில் நடாத்த எண்ணியுள்ளது.

அந்நிய தேசத்தில் வந்து குடியேறியுள்ள நாம், எமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிப் போதியளவு சிந்தித்துள்ளோமென்று கூறமுடியாது.

எமது அடுத்த தலைமுறையினர் நிற பேதத்தையும், நிறப் பிரச்சினையையும் எவ்விதம் எதிர்கொள்வார்கள்? கலாசாரம், மொழியறிவு, சமயம் ஆகிய விஷயங்களில் அவர்களுக்கு எத்தகைய வழிநடத்துதலை நாம் வழங்கவாம் அல்லது வழங்குதல் சாத்தியம்? புதிய தலைமுறையினருக்கும் எமக்குமிடையே வயதினால் மட்டுமின்றி, பண்பாடு, பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை போன்றவற்றினாலும் எழப் போகும் பெரிய இடைவெளியை நாம் எப்படிச் சாந்திக்கலாம்.

இந்தக் கேள்விகளுக்கும், இவை போன்ற மற்றக் கேள்விகளுக்கும் நாம் விடைகாண வேண்டியது முக்கியம். எமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை பற்றிய மன அங்கலாய்ப்பும், சிலவேளைகளில் ஒருவித பயமும் எம்மவரிடையே காணப்படுகின்றன. எனினும், எமது சமூகத்தில் இவ்வித விஷயங்களைப் பற்றிய சரியான அறிவோ, போதிய பிரக்ஞையோ இருப்பதாக நாம் கருத முடியாது. இவற்றை முன்னிலைப் படுத்திய முறையான ஆய்வுகளும் போதியளவில் நடைபெறவில்லை.

இந்தப் பிரச்சினைகள் பற்றிய அறிவையும், பிரக்ஞையையும் விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஒரு முன் முயற்சியாக மெல்பன் கலை வட்டம் இவ்வாண்டில் ஒரு கருத்தரங்கை ஒழுங்கு செய்யத் தீர்மானித்துள்ளது. அவுஸ்திரேலியாவிலுள்ள பல்வேறு சமூக நிறுவனங்களின் பங்குபற்றுதலுடனும், சர்வதேச ரீதியிலான பங்களிப்புடனும் இதனை நல்ல முறையில் செய்யவாமென ந[illegible]கிறோம். இப்பணியில் எம்முடன் சேர்ந்து பங்குகொள்ள விரும்[illegible]ம் நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்க.

அவுஸ்திரேலியாவிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் இக்கருத்தரங்கிற்கு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்க விரும்புவோரையும் தயவு செய்து மேலதிக விபரங்கள் பெறுமாறு எம்முடன் தொடர்புகொண்டு வேண்டுகிறோம். (நேரடியாகக் கலந்துகொள்ள முடியாதவர்களின் கட்டுரைகள், கருத்தரங்கில் வாசிக்கப்படும்).

Suvadugal, A Tamil monthly from Norway, Issue nr 46 & 47, May - June'93

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்